SAMITRAN WEEKLY

மித்திரன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 MAR 1950
MADRAS

198561

1950

விலை 4 அணா

சுதேசமித்திரன் புத்தகசாலை,

விக்டரி ஹவுஸ், :: மவுண்ட்ரோட், சென்னை.

அடியில்கண்ட ரயில்வே பிளாட்பாரங்களில் எமது புத்தகசாலைகள் இருக்கின்றன.

ரயில்வே ஸ்டால்கள்

1. விழுப்புரம்.
2. கூடலூர் N.T.
3. கும்பகோணம்.
4. விருதுநகர்:
5. கோயம்பத்தூர்.
6. திருவாரூர்.
7. திண்டுக்கல்.
8. திருச்சிகோட்டை
9. திருச்சி ஜங்ஷன்.
10. கரூர்.
11. மானாமதுரை,
12. தென்காசி.
13. சேலம் மார்கெட்,
14. மதுரை ஜங்ஷன்.
15. ஈரோடு ஜங்ஷன்.
16. திருப்பூர்.
17. மாயவரம் ஜங்ஷன்.
18. விருத்தாசலம்.
19. பொள்ளாச்சி.
20. ஸ்ரீவைகுண்டம்.
21. திருத்துறைப் பூண்டி
22. பழனி.
23. பரமக்குடி,
24. தாம்பரம்.
25. மதராஸ் பீச்.
26. திருநெல்வேலி.
27. ஒலவக்கோடு
28. செங்கற்பட்டு
29. தூத்துக்குடி

பிராஞ்சு: திருப்பதி.

மேற்படி இடங்களில் எல்லா விதமான இங்கிலீஷ், தமிழ்ப் புத்தகங்களும், தினசரி, வார பத்திரிகைகளும், அமெரிக்கா, இங்கிலாந்து முதலியவிடங்களில் பிரசுரமாகும் வாரப் பத்திரிகைகளும், மாதப் பத்திரிகைகளும் கிடைக்கும்.

மானேஜர்,
சுதேசமித்திரன் புத்தகசாலை,
விக்டரி ஹவுஸ், மவுண்டுரோடு, சென்னை



சுதேசமித்திரன் வாரப்பதிப்பு

பொருளடக்கம்

		பக்கம்
பொன்னி சொன்னாள்!	ஜெகசிற்பியன்	5
சோதனை!	எஸ். டி. ஸ்ரீநிவாஸன்	9
ஸைக்கிள் பயிற்சி	எஸ். ஜெ.	12
கலாமண்டபம்		15
ஸங்கீத பாரிஜாதம்	பண்டித கிருஷ்ணமாசாரியார்	20
நவரஸ நந்தவனம்	கனல்	22
இந்தியக் குடியரசு விளக்கம்	எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி	27
ஹிந்தி பாடங்கள்	பண்டிதஜி	31
வாழ்க்கைச் சுழல்	இந்து	34
குறுந்தோலை	கல்யாணி	39
தேர்த்தட்டு வார்த்தை	வாரன்	43
பழங்கள்	நாராயணய்யர்	45
சிறுவர் பகுதி		47
காட்டில் செய்யுள் பாடம்	மணி	51
மீண்ட நாதம்	வேம்பு	54
குடும்ப வைத்தியம்	குச்சாமாமா	56
மட தம்பதிகள்	எம் எஸ் சுப்ரமண்ய ஐயர்	58
தேவியின் கிருபை	ப. ரா.	62

"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் முற்றிலும் கற்பனையே, அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

19880

சுதேசமித்திரன் வாரப்பதிப்பு

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

Vol. XXI] விரோதி௵ மாசி௴ 8௳ ★ 1950-௵ பிப்ரவரி௴ 19௳ No 3

குறைகளைக் களைக!

சென்ற வார இறுதியில் சென்னையில் நடைபெற்ற தமிழ் மாகாண மகாநாட்டுக்குத் தனி ஒளியைத் தந்தவர் காஷ்மீரப பிரதம மந்திரி ஷேக் அபதுல்லா. தலைவர்களால் பிரகடனம் செய்து பறை சாற்றப்பட்டு வந்திருக்கும் அடிப்படைக் கருத்துக்கு உகந்த முறையில் வடக்கேயிருந்து ஒரு சிறந்த தலைவரைத் தெற்கே வரவழைத்து அவரை இம்மகாநாட்டைத் திறந்து வைக்கும்படி செய்தது மிகப் பொருத்தமாகும்.

இம்மகாநாட்டுக்குத் தலைமை வகித்த ஸ்ரீ அண்ணாமலை பிள்ளை பழுத்த தேசாபிமானிகளில் ஒருவர். தேச க்ஷேமத்தையும, காங்கிரஸ் நல்வாழ்வையுமே எபபோதும் கருத்தாகக் கொண்டவர். காங்கிரஸ் இதுவரைபோல் இனியும் மக்களின் பேராதரவைப பெற்ற ஒரு ஸ்தாபனமாக விளங்கி, அவர்களுடைய நலத்துக்கு உயரிய தொண்டு புரியவேண்டும் எனபதே அவர் ஆவலெல்லாம். ஆனால் காங்கிரஸ் தற்போது முறைப்படி இயங்கவில்லையென்பதை அவர் நன்கு உணர்ந்துள்ளார். அதை வெளியிடுவதில் அவர் சிறிதும் மழுப்பவுமில்லை. குறைகளை மூடிவைபபது ஸ்தாபனத்துக்குள் புறையோடவே உதவக்கூடும். இன்று மக்கள் அனுபவிக்கும் துன்பங்களில் பல தவிர்க்க முடியாதவையாயிருக்கலாம். எனினும் பொறுப்பு வாய்ந்த காங்கிரஸ் வாதிகள் சுதந்திரப் போர் முடியும வரை காட்டிவந்த உயரிய சேவா உணர்ச்சியுடன், பொதுநல அக்கறையுடன் மேலும் நடந்து கொண்டிருப்பராயின் அதன் மூலம அத்துன்பங்கள் ஓரளவேனும் தணிந்திருக்கக் கூடும். அவர்களது சேவா உணர்ச்சி மங்கியதுமட்டுமில்லை. காங்கிரஸ் வாதிகள் பலர் தங்கள் அதிகாரத்தை நேரான முறையில் பயனபடுத்தவில்லையென்ற கருத்தும் மக்களிடையே வலுத்துவருகிறது. மகாநாட்டுத் தலைவரும் இதை எடுத்துக் காட்டியுள்ளார்.

நனகு யோசனை செய்தே சட்டங்கள் இயற்றவேண்டுமெனபதை நம் மாகாண காங்கிரஸ் சர்க்கார் உணராதது இன்னொரு விபரீதம். பலாபலனகளைபபற்றிச் சிந்திக்காமல் அவர்கள் இதுவரை அவசரபபட்டு இயற்றிய சட்டங்களால் விளைந்துள்ள அனர்த்தங்கள் பல இந்தத் தீயபழக்கம உடனே நிற்கவேண்டுமென்று மகாநாட்டுத் தலைவர் எச்சரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும மக்களின் அடிபபடையான தேவைகள் பூர்த்தியாகாததையும, வரிச்சுமை மட்டும் வளர்ந்து கொணடிருபபதையும சுட்டிக்காட்டவும அவர் தயங்கவில்லை. இத்தகைய காரணங்களால் ஜனங்களிடையே அதிருப்தி வளர்ந்துவரும இந்நிலையில், கேட்டுக் கேட்டு அலுத்துப் போன சில கோஷங்களை வெளியிடுவதால் மட்டும அவர்களிடையே நம்பிக்கையைப் பெருக்கிவிட முடியாது. அவர்களுடைய இன்னல்களைத் தீர்க்க காங்கிரஸ் வாதிகள் ஏற்பாடான முறையில் முற்பட வேண்டும். இதில் ஸ்ரீ அண்ணாமலை பிள்ளை எடுத்துக் காட்டியதுபோல காங்கிரஸுக்கு வெளியேயுள்ள பல அறிஞர்களின் சேவையையும் பயனபடுத்திக்கொள்ள காங்கிரஸ் நிர்வாகிகள் தயங்கக்கூடாது. இதுபற்றி அவர் கூறியுளள திட்டமான யோசனை உருப பெறுவதுடன, அவர் சுட்டிக்காட்டிய பல குறைபாடுகளை நீக்க அந் நிர்வாகிகள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வ தவசிமாகும்.

இம்மகாநாட்டின் ஆலோசனைக்குவந்த பல விஷயங்களில் ஆந்திர மாகாணப் பிரச்னை ஒரு முக்கிய ஸ்தானம பெற்றது இயற்கையே. இதில் ஆந்திரர்களின் விஷமத்துக்கோ, சூழ்ச்சிக்கோ தமிழ்நாட்டினர் எள்ளளவும் இடங்கொடுக்கபபோவதில்லை யென்பதை மீண்டும் இம்மகாநாடு தெளிவாக்கிவிட்டது. இதே சமயத்தில் தமிழ்நாட்டு எல்லையை நிர்ணயம் செய்வதில் சித்தூர் ஜில்லாவிலும், கொச்சி–திருவாங்கூர் யூனியனிலும் உள்ள தமிழ் பிரதேசங்களை தமிழ்நாட்டுடன சேர்க்கவேண்டுமென்று இமமகாநாடு கோரியிருபபதை யோக்கிய உணர்ச்சி வாய்ந்த யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை. இம்மாகாண உணவுப் பிரச்னையிலும் இம் மகாநாடு முக்கிய கவனம செலுத்தியிருக்கிறது. சென்ற வாரம கவர்னர் சட்டசபைகளின கூட்டுக் கூட்டத்தில் முதன முதலாகச் செய்த பிரசங்கத்திலும இபபிரச்னையில் தனிபபட்ட அக்கறை காட்டியுள்ளார். உணவு உற்பத்தியைக் கூடியவரை உடனடியாகப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளில் மாகாண சர்க்கார் கவனம செலுத்துவதுடன், தற்போது துண்டு விழும் அளவை வெளியிடங்களிலிருந்து பெறுவதில் தீவிரமாக முனைந்தாகவேண்டும். இதே சமயத்தில், தமிழ்நாட்டின பல பகுதிகளில் பருவ மழை தவறியதால் பஞ்ச நிலைமை ஏற்பட்டுள்ளதை முன்னிட்டு அங்கு உடனே நிவாரண வேலைகள் ஆரமபிக்கவேண்டிய அவசியம்பற்றி இம்மகாநாடு நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் சர்க்கார் உரிய கவனம் செலுத்த வேண்டும்.

பழைய சம்பிரதாயம் வேண்டும்!



ஜனாதிபதி ஊர்வலம்பற்றியும் படைகள் அணிவகுப்புபற்றியும் பிராசீன சம்பிரதாயங்களே அனுஷ்டிக்கப்படவேண்டுமென சில பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் குறைப்பட்டனர். பழைய சம்பிரதாயங்கள் எவ்விதமாக ரஸிக்கப்படுமென்பதை பிரபல சித்தரிப்பாளர் "சங்கர்" வரைந்துள்ளார் பாருங்கள்!

— படம் "சங்கர்ஸ் வீக்லி"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 1950 MADRAS



சரித்திரப் பிரசித்தி பெற்ற குடியரசு தினத்திற்கு முந்திய நாள். உலகமே அந்தப் புனித நாளைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கும் போது நான் உட்கார்ந்திருக்கும் சிறிய மர உலகமாகிய மூன்ரும் வகுப்பு கம்பார்ட்மெண்டில் மட்டும் அந்தப் பேச்சு எழாமலிருக்குமோ? மூலைக்கு மூலையிலிருந்து பலரகப்பேச்சுக்கள் எழுந்து, வாதங்களாகவும், விமரிசனங்களாகவும், வெடித்துச் சிதறிக்கொண்டிருந்தன இந்த ஒருமுக குதூகலப்பேச்சில் சில படித்த பெண்களும் கலந்துகொண்டு 'ஆண்களும் பெண்களும் சரிநிகா சமானம்' என்ற குடியரசு இந்தியாவின் புது அரசியல் திட்டத்தை விதர்சனமாக்கிக் கொண்டிருந்தனர்!

எனக்கென்னவோ என் எண்ணமெல்லாம் மூன்று மாத காலமாக ஹோட்டல் சாப்பாட்டைச் சாப்பிட்டுக் கொண்டு, எனக்காக சர்வ பரித்தியாகம் செய்துகொண்டிருக்கும் என் கணவர் பேரிலேயே லயித்திருந்தது என் அம்மா இந்த வெட்டிப் பேச்சுக்களையெல்லாம் காதில் வாங்கிக்கொள்ளாமல் குத்துக் காலிட்டு நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அவள் மடியில் என் நான்கு வயதுப் பையன் ராமு கோழிக்குஞ்சு போலச் சுருண்டு படுத்துக்கொண்டிருந்தான் திறந்திருந்த ஜன்னல் வழியே வெளியே பார்ப்பதும், பின்னர் என்னுடன்கொண்டு போகும் சாமான்களை எண்ணிப் பார்ப்பதுமாக நேரத்தைக் கழித்துக்கொண்டிருந்தேன்

கும்பகோணத்தைவிட்டு வண்டி வெகுதூரம் வந்துவிட்டது இராக்காலமானதால் வண்டி நிற்கும் ஸ்டேஷன்களைச் சரிவர தெரிந்துகொள்ளமுடியவில்லை. அன்று அதிர்ஷ்டவசமாக வண்டியில் அதிகக் கூட்டமும் இல்லை உற்சாகமாகப் பேசிக்கொண்டிருந்த பிரயாணிகளில் சிலர் உறங்கிவிழ ஆரம்பித்ததிலிருந்து மணி பத்து பதினொன்று இருக்குமென ஊகித்துக்கொண்டேன்.

வண்டி மாயவரத்தையும் தாண்டிவிட்டது தாலாட்டு போன்ற வண்டியின் ஆட்டத்தால் என் கண்கள் தூக்கத்திற்குக் கெஞ்சின 'திருடர்கள் ஜாக்கிரதை' என்ற ரெயில்வேக்காரர்களின் எச்சரிக்கை போர்டு என் கண்ணில்பட்டதும் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டேன் உடனே பிளாஸ்க்கைத் திறந்து கொஞ்சம் காப்பி ஊற்றிக் குடித்தேன் தூக்கம் ஒருவாறு கலைந்தது.

கொள்ளிடம் ஸ்டேஷனில் வண்டி வந்து நின்றது என்பதற்கு அறிகுறியாக வெற்றிவேர் மணம் கமகமவென வீச ஆரம்பித்தது ஐந்தாறு பிரயாணிகளே பிளாட்பாரத்தில் நின்றுகொண்டிருந்தனர்.

ஐந்து நிமிஷம் கழித்து வண்டி புறப்பட நகர்ந்தது அந்தச் சமயத்தில் நானிருந்த கம்பார்ட்மெண்டின் கதவைத் திறந்துகொண்டு ஒரு கிராமிய வயோதிகனும், வயதுப் பெண் ஒருத்தியும் அவசர அவசரமாக வந்து ஏறிக் கொண்டனர்.

வண்டி கொள்ளிடம் பாலத்தில் புகுந்து ஓடிக்கொண்டிருந்தது. எதிரே காலியாக இருந்த பெஞ்சில் உட்காந்து கொண்டான் கிழவன். அவனுக்கெதிரில், என் கால்மாட்டில், கீழே உட்கார்ந்து கொண்டாள் அந்தப் பெண் இதுவரை எங்கோ கவனித்துக் கொண்டிருந்த நான் இப்போதுதான் அந்தப் பெண்ணைப் பார்த்தேன் அவளை நான் எங்கோ, எப்போதோ பார்த்திருப்பதாக ஞாபகம்வந்தது. ஆனால் தீர்க்கமாக அவள் இன்னார் என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. அவளும் என்னை இரண்டு மூன்று முறை பார்த்துவிட்டு, நான் யார்என்று தெரிந்துகொண்டவளைப் போலச் சிரித்தாள் பின்னர் 'என்னங்கம்மா! சௌக்கியந்தானா? ராமு எப்படியிருக்கு?' என்ருள் அந்தப் பெண் அப்போதுதான் அவள் யாரென்று எனக்குத் தெரியவந்தது. 'ஓ! நம்ம பொன்னியா? என்னடீ! பட்டணத்திலேயிருந்து திடீர்னு ஒரு வருஷமா மறைஞ்சுட்டே?' என்றேன் ஆச்சரியமாக. இதைக் கேட்டு பொன்னி மௌனமாகக் கீழே குனிந்துகொண்டாள்.

மாம்பலத்தில். நானிருந்த தெருவில் பொன்னியைத் தெரியாதப் பெண்கள் யாருமே இருக்கமாட்டார்கள். நாங்களெல்லோரும் அவளைப் பொன்னியென்று அழைக்கமாட்டோம். 'மருக்கொழுந்து சிங்காரி' என்றுதான் அழைப்போம்! மாலை நான்குமணியானதும் கதம்பமலர் கூடையை இடுப்பில் வைத்துக் கொண்டு தலையை மழுங்கமழுங்கச் சீவி, அதில் மருக்கொழுந்து ஒரு கொத்தை வைத்துக்கொண்டு கிளம்பி விட்டாளானல், எங்கள் தெருவிலுள்ள பெண்கள் அத்தனை பேரும் அவளுக்காக தயாராகக் காசை வைத்துக்கொண்டு வாசலில் காத்துக்கிடப்போம். அவள் விதம் விதமான வர்ணப் பூக்களை தொடுத்து அதில் அதிகப்படியான வெற்றிவேர் பிணைப்பைச் சேர்த்து தரும் கதம்பமாலையின் அருமையைப் பெண்களாகிய நாங்கள்தான் அதிகமாக அறிய முடியும்! இப்படி எங்களுக்கு ஒரு 'முக்கியமாகி இருந்த பூக்காரி பொன்னி, சுமார் ஒரு வருஷத்துக்கு முன்னால் திடீரென அங்கிருந்து மறைந்துவிட்டது ஆச்சரியமும் அனுதாபமுமாகத்தான் இருந்தது. இப்படித் திடீரென அவள் மறைந்துவிட்டதன் மர்மத்தை இன்று அவளிடம் கேட்டுவிடுவதென தீர்மானித்தேன்.

"பொன்னி! ஏன் இந்த ஒரு வருஷமாக எங்கள் தெரு பக்கமே தலை காட்டவில்லை? எங்களிடம் ஒரு ஒரு பேச்சுக்கூட சொல்லிக்கொள்ளாமல் கிளம்பிவிட்டாயே!" என்றேன் அவளைப்பார்த்து

இதுவரை தூங்கிக்கொண்டிருக்கும் ராமுவை ஏற இறங்கப்பாத்துக்கொண்டிருந்த அவள் என் பக்கம் திரும்பி "அது ஒரு பெரிய கதையம்மா!" என்றாள் மிகுந்த ஆதுரத்துடன்

"நான் அந்தக் கதையைக் கேட்கலாமோ?" என்றேன் விடாமல். பொன்னி அந்தக் கிழவனைப்பார்த்தாள் அவன் நன்றாகத் தூங்கி வழிந்துகொண்டிருந்தான் பின்னர் என்னைப்பார்த்து பொன்னி சொன்னாள்.

• • •

"எனக்குச் சொந்த ஊர் கொள்ளிடம். இந்த ஊரில் விசேஷமாக விளையும் வெற்றிலேயைச் சேகரித்து பட்டணக் கரைகளுக்கு ஏற்றுமதி செய்வதுதான் எங்கள் குடும்பத் தொழில். அந்தத் தொழிலேயே வேறு உதவியில்லாமல் என் கிழத் தந்தையும் செய்து வந்தார்.

இரண்டு வருஷங்களுக்கு முன்னால் தூர பந்துவாகிய மாரி முத்து என்பவர் வந்து என்னை மணந்துகொண்டார். அவருக்குப் பட்டணத்தில் வேலையானதால் நானும் அவருடன் பட்டணத்துக்குப் போய் குடித்தனம் செய்ய ஆரம்பித்தேன்.

போன வருஷம் மார்கழி மாதம் என்று நினைக்கிறேன். பூ விற்றுவிட்டு ஏழு மணிக்கு வீடு வந்து சேர்ந்தேன் தினந்தோறும் எட்டு ஒன்பது மணிக்கு வேலை முடிந்து வரும் என் கணவர் அன்று சீக்கிரமாகவே வந்து திண்ணையில் உட்கார்ந்திருந்தார். அவருக்கு தேனாம்பேட்டையிலிருந்த ஒரு பெரிய பணக்கார செட்டியார் வீட்டில் தோட்டவேலை. மாதம் இருபது ரூபாய் சம்பளம் அந்த இருபது ரூபாயில் இரு ஜீவன்கள் இந்தக் காலத்தில் பிழைத்துவிட முடியுமா? அதனால்தான் நானும் ஏதாவது வேலை செய்ய எண்ணி கடைசியில் எங்கள் பரம்பரைத் தொழிலான பூவிற்கும் தொழிலில் இறங்கினேன்.

எப்போதும் குதூகலமாகவே இருக்கும் அவர் இன்று ஏனோ ஒருமாதிரியாகத் திண்ணையில் சாய்ந்துகொண்டிருந்தார் நான் வந்ததைக்கூட அவர் கவனிக்கவில்லை.

"என்னங்கறே! ஒருமாதிரியா உட்கார்ந்திருக்கே?" என்றேன் வழக்கமான புன்னகையுடன்

"ஒண்ணுமில்லே! உன் வேலையைப் போய் பாருபுள்ளே!" என்று என்றுமில்லாத வழக்கமாய் என் மீது எரிந்து விழுந்தார் அவர் ஆண்பிள்ளைகளுக்கு எத்தனையோ கவலைகளிருக்கும். எல்லா சமயமும் ஒரே மாதிரியாகவா இருந்துவிடும்?' என்று மனதைத் தேற்றிக்கொண்டு, பூ விற்ற பணத்தில் வாங்கி வந்த அரிசி, காய்கறிகளைக்கொண்டு சமையல் செய்ய இறங்கினேன்.

விளக்கு வைத்து ஜன சந்தடி அடங்கிய பிறகும் அவர் திண்ணையிலேயேதான் உட்கார்ந்திருந்தார் இரண்டொரு முறை அவரை நான் கூப்பிட்டும் அவ்விடத்தைவிட்டு எழுந்து வரவேயில்லை எனக்குப் பெருத்த எரிச்சலாய் போய்விட்டது. எக்கேடு கெட்டாவது போகட்டும் என்று என் வேலைகளை முடித்துவிட்டு கூடத்தில் சற்றுநேரம் படுத்திருக்க, ஓலைப் பாயை விரித்து அதில் படுத்தேன் என்றுமில்லாமல் இன்று இப்படி இழுக்குப் பிடித்துப்போய் உட்கார்ந்திருப்பது எனக்கு அழுகை அழுகையாக வந்தது. இனிமேலும் விட்டுக்கொடுத்தால் அப்புறம் பெண்களுக்கு எங்கிருந்து மதிப்புவரும்? வெறுமனே கண்ணை மூடிக்கொண்டிருந்தேன்.

சற்று நேரங் கழித்து வாசலில் ஒரு ரிக்ஷா வந்து நிற்கும் சப்தம் கேட்டது அதைத் தொடர்ந்து "மாரிமுத்து!..." என யாரோ பெரு வான குரலில் அழைத்துக்கொண்டு திண்ணைக்கு வந்ததை அறிந்தேன். சட்டென படுக்கையிலிருந்து எழுந்து போய் கதவிடுக்கில் நின்றுகொண்டு, வெளியே எட்டிப்பார்த்தேன். அங்கே வந்திருந்தவரைப் பார்த்ததும் எனக்குப் பெருத்த ஆச்சரியமாய்ப் போய்விட்டது என் கணவர் வேலை செய்யும் வீட்டின் எஜமானரே அங்கு வந்து நின்றுகொண்டிருந்தார். ஒன்றும் புரியாதவளாய் அவர்கள் பேசுவதை உற்றுக் கேட்டேன்

ரிக்ஷாவிலிருந்து இறக்கிய ஒரு மரப்பெட்டியை என் கணவர் பக்கத்தில் வைத்துவிட்டு, "மாரிமுத்து...! ஜாக்கிரதையாக எங்கேயாவது ஒளித்து வைத்துவிடு!...இதிலே இரண்டு டஜன் இருக்கு!...இந்நேரம் என் வீட்டுக்குப் போலீஸார் வந்திருப்பார்கள்!...என்னிடம் அவர்கள் பாச்சா பலிக்குமா?.........இங்கேயும் அவர்கள் ஒருவேளை வந்தாலும் வருவார்கள்! இல்லவே இல்லையென்று ஒரேயடியாகச் சாதித்துவிடு!...... என்ன?...புரிந்ததா?" என்றார் வந்த ஆசாமி அடைத்தக் குரலில்

"சரிதானுங்க!" என்று நடுங்கிய குரலில் கூறினார் என் கணவர்.

பின்னர் வந்தவர் ரிக்ஷாவில் ஏறிக்கொண்டுபோய்விட்டார்.

சற்று நேரங் கழித்து என் கணவர் அந்தப் பெட்டையை அப்படியும் இப்படியுமாகத் திருப்பிப் பார்த்துவிட்டு, மெதுவாகத் தூக்கிக்கொண்டு உள்ளேவந்தார். இவ்வளவு நேரம் பித்துப் பிடித்தவள் போல நின்றுகொண்டிருந்த நான் 'என்னங்க அது?' என்று கேட்டுக்கொண்டே அவர் பின்னால் சென்றேன்.

அவர், நான் இதுவரை அவர்களின் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்ததை அறிந்துகொண்டவர் போல "பொன்னி! இதிலேயெல்லாம் நீ ஒன்றும் வந்து கலந்துகொள்ளாதே! ஆமாம்." என்று கடுமையாகவும், ஆனால் தணிந்த குரலிலும் சொல்லிவிட்டு மேலே நடந்தார் நான் ஒருவாறு புரிந்துகொண்டேன் இன்று ஏதோ ஒரு அனர்த்தம் என் வீட்டில் நடக்கப் போகிறதென்று!

"வீட்டிலிருப்பவளுக்குத் தெரியாமல்கூட எந்தப் புருஷனாவது இப்படி நடந்துகொள்வானா?" என்று கேட்டுக்கொண்டே விடாமல் பின்னே சென்றேன் சட்டென அவருக்குக் கோபம் அளவுக்கு மீறி வந்துவிட்டது கையிலிருந்த பெட்டியைத் தொப்பென கீழே போட்டுவிட்டு, "ஏய் குட்டி! நான் சொன்னா நீகேக்கமாட்டே?" என்று கர்ஜித்து என்னை நெட்டித் தள்ளினார் அப்படி அவர் அந்தப்பெட்டியை சற்று வேகமாகக் கீழே போட்டதால், அப்பெட்டியிலிருந்து, 'பளீர் பளார்' என இரண்டொரு பாட்டில்கள் உடைந்து நொறுங்கும் சப்தம் கேட்டது! அதைத் தொடர்ந்து குப்பென ஒரே சாராய நாற்றம் அந்த அறை பூராவும்கப் பிக்கொண்டது!

"அடப்பாவி! திருட்டுச் சாராயமா கொண்டுவந்து ஒளிச்சு வைக்கறே? எத்தனை நாளா இந்த வேலை நடக்குது? போலீஸுக்குத் தெரிஞ்சுதானா உன்கதி என்னாவும்?" என்று என்னையறியாமல் கூச்சலிட்டுக் கேட்டுவிட்டேன்.

"சீ! போக்கத்தப் பய மவளே! எனக்கா வந்து புத்தி சொல்றே?" என்று சொல்லி பாய்ந்தோடிவந்து என் கன்னத்தில் பளாரென அறைந்தார் என் கணவர். அவர் அடித்ததைக்கூட நான் பொருட்படுத்தாமல் கீழேயிருந்த அந்தச் சாராயப்பெட்டியைத் தூக்கி வெளியே எறிய முயற்சித்தேன்.

அதற்குள் "உங்களுக்கேன் அவ்வளவு கஷ்டம்? நாங்கள் அதைத் தூக்கிக்கொண்டு போகத்தானே வந்திருக்கிறோம்!' என்ற ஏளனமான குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்

நான்கு போலீஸாருடன் ஒரு இன்ஸ்பெக்டரும் எங்களை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள்! நான் பயந்துபோய் அழுதுகொண்டே சற்று ஒதுங்கி நின்றேன் என் கணவருடைய முகம் பரிதாபமாக மாறி, உடல் வெட வெடென நடுங்கிக்கொண்டிருந்தது

"ஏண்டா திருட்டுப்பயலே! உன் பெயர்தான் மாரிமுத்தா?" என்றான் ஒரு போலீஸ்காரன்

"ஆமாங்க," என்றார் என் கணவர் அடக்கமாக.

"இந்தச் சாராய புட்டிகளெல்லாம் உனக்கு எங்கிருந்து கிடைத்தன! உண்மையைச் சொல்லிவிடு! இல்லையானால்..." என்று தடியைச் சுழற்றி அதட்டிக் கேட்டான் அந்தப் போலீஸ் ஜவான். இதற்குள் மற்றொருவன் "ஏண்டா! 'ஐயா' இதைக்கொடுத்து பத்திரமாய் வைக்கச் சொன்னாரா?" என்றான் ஏகத்தாளமாகச் சிரித்துக்கொண்டே.

என் கணவர் இவை ஒன்றுக்கும் பதிலே சொல்லவில்லை! 'ஆமாங்க, அந்த எசமான்தான் இதைக் கொடுத்துவைக்கச் சொல்லிப் போனார் என்று சொல்ல வாய் எடுத்தேன் ஆனால் ஏனோ அப்படி கூற எனக்குத் துணிவு ஏற்படவில்லை! 'பெரிய இடம்' என்ற பயம் என்னை அப்படிச் சொல்லத் தடைப் படுத்தியது!

"இவனை இப்படியெல்லாம் கேட்டால் சொல்லமாட்டான் விலங்கு போட்டு ஸ்டேஷனுக்குத் தள்ளிக்கொண்டு போங்கள்!" என்று உத்தரவிட்டார் இன்ஸ்பெக்டர் உடனே போலீஸார் என் கணவரை இழுத்துக்கொண்டு, அந்தப் பெட்டியையும் தூக்கிக்கொண்டு, போய்விட்டனர் ஐந்து நிமிஷத்தில் நிகழ்ந்த இந்த அதிர்ச்சியைத் தாளமாட்டாமல் அடியற்ற மரம்போல கீழே விழுந்து மூர்ச்சையாகிவிட்டேன்,

"டைரக்டர் ஸார்; நான் அரிச்சந்திரனுச்சே 'சந்திரவதனமே, அழகின் வடிவமே, பூலோக ரம்பையே, ஆரணங்கே' என்று பொய் சொல்ல சொல்றீங்களே......?"

அடுத்த நாள் காலை கோர்ட்டுக்கு ஓடினேன் நீதிபதி வழக்கை விசாரித்து "மதுவிலக்குச் சட்டத்தை மீறி கள்ளத்தனமாகச் சாராய புட்டிகளை வரவழைத்து, கொள்ளை லாபத்திற்கு விற்க முயற்சித்ததாக எதிரியே தன் குற்றத்தை ஒப்புக்கொண்டதால், மூன்று வருஷம் வெறுங் காவல் தண்டனை கொடுக்கிறேன்" என்று தீர்ப்புக் கூறினார்! இதைக் கேட்டு கதறிப் புலம்பிய என்னை, குற்றவாளிக் கூண்டிலிருந்து, பரிதாபமாகப் பார்த்தார் என் கணவர்! உலகமே எனக்குத் தலைகீழாய்ச் சுழல்வதைப் போலிருந்தது தீர்ப்புக் கூறப் பட்டதும் அவரை ஜெயில் வண்டியில் அழைத்துக்கொண்டு போய் விட்டனர்.

அப்போது எனக்கு ஒரே ஒரு சந்தேகம் மட்டும் எழுந்து மனதைக் குடைந்துகொண்டிருந்தது. நேற்றிரவு என் கணவரின் எசமான் வந்து அந்தச் சாராயப் பெட்டியை என் கணவரிடம் கொடுத்துப் போனதை அவர் கடைசிவரை ஏன் சொல்லாதிருந்துவிட்டார் என்று!

மறுநாளும் வந்தது மூன்று வருஷங்கள் வரைக்கும் என் கதி என்னவது என்று எண்ணிக் குமுறிக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். என் உள்ளம் புழுங்கியது.

அந்தச் சமயத்தில் ரிக்ஷாவை விட்டு இறங்கி வீட்டுக்குள் புகுந்தார் என் கணவரின் எசமான்! அவரைப் பார்த்ததும் சடக்கென எழுந்து நின்றேன்.

"பொன்னி! உன் புருஷனைப்போல ஒரு ஆள் நான் தேடி அலைந்தாலும் கிடைக்கமாட்டான். எஜமான விசுவாசம் உள்ளவன் என்றால் அவனைத்தான் சொல்லவேண்டும்! கடைசி வரை ஒரு வார்த்தையாவது சொல்லி என்னைக் காட்டிக்கொடுத்திருப்பானா பாவம்! எனக்காக......அதிருக்கட்டும் இந்தா! இந்த ஐம்பது ரூபாயை வைத்துக்கொண்டு மூன்று வருஷம் உன் ஊருக்குப் போய் இரு. அவன் விடுதலையாகி வந்ததும் இன்னும் நூறு ரூபாய் கொடுக்கிறேன்......" என்று சொல்லிக்கொண்டே போனார் அவர்.

"அடப்பாவி! என் குடியைக் கெடுத்தவன் நீதானா? நீயும் உன் குடும்பமும் நாசமாய்ப் போக!" என்று கூவிக்கொண்டே அவர் கொடுத்த ரூபாய் நோட்டுகளை அவர் முகத்தில் வீசியெறிந்தேன். நான் இப்படிக் கூச்சல் போட்டுப் பேசியதைக்கண்டு பயந்து, அங்கிருந்துமெதுவாக நழுவி விட்டார் அந்த ஆசாமி.

அன்றிரவே ரெயிலேறி என் தாய் தந்தையர்கள் இருப்பிடமான கொள்ளிடத்திற்கு வந்துசேர்ந்தேன். கணவனிருந்தும் விதவையைப்போல் ஒரு வருஷத்தையும் கடத்திவிட்டேன்.

நேற்று திடீரென ஜெயில் அதிகாரியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் இந்தியாகுடியரசாகப்போகும் நாளின் ஞாபகார்த்தமாக சில கைதிகளை விடுதலை செய்வதில் என் கணவர் மாரிமுத்துவும் ஒருவர் என்று கண்டிருந்தது!

அக்கடிதம் கிடைத்த உடனே இதோ நானும் என் தந்தையும் சென்னைக்குக் கிளம்பிவிட்டோம்! இந்திய மக்கள் இந்தக் குடியரசு விழாவை எத்தனையோ விதங்களில் கொண்டாடுவார்கள்; அதில் நாங்கள் ஒரு விதமாக — புது வாழ்வு பெற்ற பூரிப்போடு, அப்புனித நாளை பூஜித்துக் கொண்டாடப்போகிறோம்' என்று சொல்லி நிறுத்தினாள் பொன்னி.

இதற்குள் வண்டி எழும்பூர் ஸ்டேஷனில் வந்து நின்றுவிட்டது. வெளியே எட்டிப் பார்த்தேன். எனக்காக என் கணவர் அங்கு வந்து காத்துக்கொண்டிருந்தார். அவருக்குச் சற்று தொலைவில் மாரிமுத்துகூட பொன்னியின் வரவை ஆவலோடு எதிர் பார்த்துக்கொண்டு நின்றிருந்தான்!



இந்தியாவின் குடியரசு தினத்தன்று நெதர்லண்ட்ஸ் பிரதம மந்திரி டாக்டர் டிரீஸ் மகாத்மாஜியின் உருவப்படத்தைத் திறந்துவைத்தார். இதை டச்சு சைத்ரிகர் எழுதினார். இந்திய தூதர் டாக்டர் மேத்தாவையும் படத்தில் காணலாம்.

சோதனை!

எஸ். டி. ஸ்ரீனிவாஸன்

விடியற்காலை. இன்னும் இருள் பிரியவில்லை 'சில்' லென்று காற்று வீசிக்கொண்டிருந்தது. நடைபாதையின் மேல் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த செல்லையன் சற்றுப் புரண்டுபடுத்தான் அவன் மேல் போர்த்துக்கிடந்த கந்தை வேஷ்டி இரவெல்லாம் பெய்த பனியால் நனைந்துகிடந்தது.

ஐந்து நிமிஷம் சென்றிருக்கும் தூரத்தில் எங்கோ ஒரு கடியாரம் ஐந்து முறையடித்தது அரைத் தூக்கத்திலிருந்த செல்லையன் விழித்துக்கொண்டு எழுந்திருந்தான். மேலே போர்த்துக்கொண்டு படுத்திருந்த வேஷ்டியைச்சுருட்டி பக்கத்தில் இருந்த மரத்தடியில், தன் மற்றச் சாமான்களுடன், வைத்தான் தலைக்குத் தலையணையாக வைத்திருந்த ரிக்ஷா ஸீட்டை எடுத்துத்தட்டி, சற்று தூரத்தில் விடப்பட்டிருந்த ரிக்ஷாவில் போட்டான். நேராக ரோட்டு குழாயடிக்குச் சென்று பல்தேய்த்து முகம் கழுவிக்கொண்டு வந்து, ரிக்ஷா பெட்டியைத் திறந்து ஒரு சிறு பொட்டலத்தை அதிலிருந்து எடுத்தான், அதில் விபூதி இருந்தது. அதில் கொஞ்சம் எடுத்துத் தன் நெற்றியில் பூசிக்கொண்டு மறுபடியும் அப்பொட்டலத்தைப் பெட்டிக்குள்ளேயே வைத்தான். பின் தீப்பெட்டியை எடுத்து, ரிக்ஷாவின் இரு விளக்குகளையும் ஏற்றினான் இதற்குள் ரஸ்தாவில் இரண்டு மூன்று ரிக்ஷாக்கள் 'கட கட' வென்ற சப்தத்துடன் ஓட ஆரம்பித்துவிட்டன.

செல்லையன் பக்கத்தில் இருந்த ஆலமரத்தருகே சென்றான் அங்கு அவன் மனைவி வேலாயி, ஒரு கிழிந்த கோரைப்பாயின் மேல் இரண்டு மூன்று நாட்களாக ஜுரத்துடன் அவஸ்தைபட்டுக் கொண்டிருந்த அவர்களுடைய ஒரே குழந்தை சொக்கனைவிட்டுக்கொண்டு தூங்கிக் கொண்டிருந்தாள் செல்லையன் குழந்தை அருகில் சென்றதும், அதைப் போர்த்திருந்த ஜமக்காளத்தை நீக்கிவிட்டு அதன் உடம்பைத் தொட்டுப்பார்த்தான் கை 'சுரீர்' என்றது. ஜுரவேகம் அதிகமாக இருந்தது குழந்தையின் மூடிய கண்கள் மூடினபடியே இருந்தன.

"அப்பா! என்ன காய்ச்சல் காயுது! அனல் அடிக்குதே!" என்றான் கையை எடுத்துக் கொண்டே.

செல்லையனின் குரலைக் கேட்ட வேலாயி விழித்துக்கொண்டு எழுந்திருந்தாள் அவளும் குழந்தையை ஒரு முறை தொட்டுப்பார்த்தாள் செல்லையன் அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். மங்கிய ஒளியிலும் வேலாயியின் முகத்தில் படர்ந்திருந்த சோகத்திரை நன்றாகத் தெரிந்தது அதைக்கண்ட செல்லையன் ஒரு பெருமூச்சு விட்டான்.

'நேத்து டாக்டர் அய்யா எழுதிக் கொடுத்த மருந்தை இன்னி பொழுதுக்குள்ளே வாங்கிக் கொடுக்காட்டி அப்புறம் சொல்றத்துக்கு இல்லையாம்......' என்றாள் வேலாயி அவள் குரலில் வேதனை தொனித்தது அவள் உள்ளம் பயத்தால் 'படபட' வென்று அடித்துக்கொண்டது

'இப்பவே வண்டியைபிடிச்சுக்கினு போனா ஏதாவது டேஷன் சவாரி கிடைக்கும்...... பத்துமணிக்குள்ளே சம்பாதிச்சாந்துடறேன்......' என்று சொல்லிவிட்டு மறுபடியும் ஒருமுறை குழந்தையைக்கூர்ந்து கவனித்து விட்டு எழுந்தான் செல்லையன்

நேராக ரிக்ஷாவிட்டிருக்கும் இடத்துக்குச் சென்றான். கிழக்குமுகமாக நின்றுகொண்டு கைகூப்பிக் கடவுளை வணங்கினான். பின் ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு கிளம்பினான். ரிக்ஷாவின் விளக்குவெளிச்சம் கண்களுக்கு மறையும்வரை திக்பிரமை பிடித்தவள்போல் அதையே பார்த்துக்கொண்டு நின்றிருந்த வேலாயி. சடாரென்று எதையோ பற்றி நினைத்துக்கொண்டாள். உடனே தன் புடவைத் தலைப்பில் இருந்து ஒரு சிறு துண்டுத் துணியைக் கிழித்தாள். அதை மஞ்சள் படுத்தினாள். சுருக்குப் பையில் இருந்து ஒரு இரண்டணா துண்டை எடுத்து அதில் வைத்து முடிந்து, அதைக் கையில் வைத்துக்கொண்டே இரண்டு கைகளையும் கூப்பி. "ரோவதி தாயே என் புள்ளை பிழைச்சு எழுந்தா, அடுத்த நெருப்புத் திருநாளின்போது அவனை நெருப்பு மிதிக்கச் சொல்றேன் தாயே! நீதான் அவனை எப்படியாவது காப்பாத்தனும்!" என்று தங்கள் குலதெய்வமான திரௌபதியம்மனை வேண்டிக்கொண்டாள்.

* * * *

நடை பாதையை வாசஸ்தலமாகக் கொண்டு வாழும் ஆயிரக்கணக்கான ஏழைகளில் செல்லையனும் ஒருவன் அவனுடைய பூர்வீகக் கிராமம் இளையன்குடி. ஆனால் அவனுக்குப் புத்தி தெரிந்து அவன் தன் கிராமத்துக்குப்போனதுகிடையாது. தன் பதினெட்டாவது வயதிலேயே தன் தந்தை செய்துவந்த ரிக்ஷா இழுக்கும் தொழிலை அவன் மேற்கொண்டுவிட்டான்

வேலாயியின் தாய்தகப்பன்மாரும் 'நடைபாதை வாசிகள்' தான் எப்படியோ செல்லையனுக்கும் வேலாயிக்கும் சிறுவயது முதலே ஒரு பிடிப்பு ஏற்பட்டுவிட்டது பத்து வருஷங்களுக்கு முன் அவர்களுக்குக் கல்யாணம் ஆயிற்று.

ஆலமந்தா கோயில் ஆலமரத்தடியில்தான் அவர்கள் வீடு. அங்கேயேதான் சமையல் படுக்கை எல்லாம். வெயிலுக்கு ஒதுங்குமிடமும் அதுதான்; மழைக்குப் பதுங்கும் இடமும் அதுதான்.

சண்டை நடந்து வந்த காலத்தில் செல்லையனுக்குக் கை நிறையக் காசு கிடைத்து வந்தது; ஆனால் அதற்குப் பின் அவனுக்கு நல்ல சவாரி கிடைப்பதே துர்லபமாகிவிட்டது. அதோடு, அரசாங்கத்தார் மூலை முடுக்குகளிலெல்லாம் பஸ்விட ஆரம்பித்துவிட்டனே. ரிக்ஷாக்காரர்களைச் சீண்டுவாரில்லை. அப்போது சம்பாதித்து மிகுதியாக்கி வைத்திருந்த கொஞ்சக் காசும், இந்தக் கஷ்ட காலத்தில் செலவழிந்து போயிற்று. இப்போதெல்லாம் செல்லையனுக்கு நாளுக்கு ஒரு ரூபாய் கிடைப்பதே மிகக் கஷ்டமாய்விட்டது. தினமும் அரை வயிறு சாப்பாடுதான் கஷ்டகாலத்தை முன்னிட்டு வேலாயியும் ஆபீஸ்களில் வேலை செய்யும் சில பேருக்கு அவர்களுடைய வீடுகளிலிருந்து பகல் சாப்பாடு கொண்டு போய்க் கொடுத்துச் சிறிது காசு பெற்று வந்தாள்.

வேலாயிக்கு இதுவரை இரண்டு குழந்தைகள் பிறந்து சிறு வயதிலேயே இரண்டும் இறந்துவிட்டன.

சொக்கன் அவர்களுடைய மூன்றுவது குழந்தை செல்லையன் வேலாயி இருவரும் சொக்கன் பேரில் தங்கள் உயிரையே வைத்திருந்தனர். அவனுக்கு ஐந்து வயது நடந்துகொண்டிருந்தது. இன்னும் சில தினங்களில் அவனைப் பள்ளிக்கூடத்தில் 'போட' வேண்டும் என்பது செல்லையனின் எண்ணம். 'நாம்தான் ஒன்றுமில்லாமல் போய்விட்டோம்; சொக்கனாவது படித்து நம்மைப்போல் ரிக்ஷா இழுக்காமல், ஒரு வேலைக்குப் போகட்டும்' என்பது அவனுடைய ஆசை. சொக்கனும், குழந்தைப் பருவத்திலிருந்தே புத்திசாலியாகக் காணப்பட்டான்.

மூன்று நான்கு தினங்களாக சொக்கனுக்கு ஜுரம். முதலில் தர்ம ஆஸ்பத்திரியில் வைத்தியம் பார்த்த வேலாயி, ஜுரம் குறையாமல் போகவே, தன் கையில் இருந்த இரண்டு ரூபாயைக் கொடுத்துவிட்டு ஒரு பிரைவேட் டாக்டரிடம் சொக்கனைக் காட்டினாள். அந்த டாக்டர் நான்கு ரூபாய் விலையுள்ள ஏதோ ஒரு மருந்தின் பெயரை ஒரு சீட்டில் எழுதிக்கொடுத்துவிட்டு அதை வாங்கிக்கொடுத்தால்தான் ஜுரம் குணமாகும் என்று சொல்லிவிட்டார்.

வேலாயி முதல்நாள் தனக்குத் தெரிந்த இடங்களிலெல்லாம் கேட்டுப்பார்த்துவிட்டாள்; இடைக்கவில்லை. ஆகவே எப்படியாவது கஷ்டப்பட்டு நான்குரூபாய் சம்பாதித்து அந்த மருந்தை வாங்கிவந்துவிட வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடனேயே வண்டியை இழுத்துக்கொண்டு புறப்பட்டான் செல்லையன்.

* * * *

செல்லையன் இழுத்துச் சென்ற வண்டியின் சக்கரங்கள் உருண்டுகொண்டேயிருந்தன. அவைகளுடன் போட்டி போட்டுக்கொண்டு அவன் மனதில் உருண்டுகொண்டிருந்தன அவனுடைய கடந்துபோன வாழ்க்கையைப் பற்றிய எண்ணங்களும், எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய கற்பனைகளும், நடு நடுவே 'இன்னும் சில மணி நேரத்துக்குள் நமக்கு நான்கு ரூபாய் சவாரி இடைத்துவிடுமா? சொக்கனுக்கு டாக்டர் எழுதிக்கொடுத்த மருந்தைவாங்கிக்கொடுத்து அவனைக் காப்பாற்ற முடியுமா' என்ற சந்தேகம் வேறு. அவன் உள்ளத்தில் உண்டாகி அவனை வாட்டின. நான்கு ரூபாய் கிடைக்காவிட்டால் சொக்கனின் கதி? ஒரு கணம் அவன் கால்கள் அந்த இடத்திலேயே நின்றன. மறு கணம், 'கடவுள் எப்படியும் ஒரு வழி காட்டுவார். நம் சொக்கன் எப்படியும் பிழைப்பான்' என்ற நம்பிக்கை அவன் மனதில் உருவெடுத்து நின்றது. இவ்வாறு அவன் மனம் நம்பிக்கைக்கும் சந்தேகத்துக்கும் மத்தியில் ஊசலாடிக் கொண்டிருந்தது. அதே சமயத்தில் திரௌபதியம்மன் மேல் பாரத்தைப் போட்டு, பிரார்த்தனை செய்துகொண்ட வேலாயி முனகிக்கொண்டிருக்கும் சொக்கன் பக்கத்திலேயே உட்கார்ந்துகொண்டு தன் கணவன் எப்பொழுது பணத்துடன் திரும்பி வரப்போகிறான் என்று எண்ணமிட்டுக் கொண்டேயிருந்தாள்.

பொழுதுவிடிந்த வெகு நேரம் ஆகிவிட்டது. மணி எட்டுக்கு மேலிருக்கும். அதுவரையில் செல்லையனுக்கு இரண்டு மூன்று சில்லரைச் சவாரிகளே கிடைத்தன. மொத்தம் கிடைத்த கூலி ஒரு ரூபாய்; அவன் 'நாஸ்தா' கூட செய்யவில்லை. இன்னும் மூன்று ரூபாய் சம்பாதித்துவிட்டால் குழந்தையை உயிருடன் காணலாம். இந்த வேதனை அவனை வாட்டிக்கொண்டிருக்கும்போது, வேறு எதிலும் அவன் கவனம் செல்லவில்லை.

யாராவது சவாரிக்குக் கூப்பிடுவார்களா என்று எண்ணிக்கொண்டே அவன் 'பவர் ஹவுஸ் பஸ் ஸ்டாண்'டண்டை வரும்போது எதிர் ஸ்டாண்டில் ஒரு ஸ்திரீ டவுனுக்குப் போகும் பஸ்ஸுக்காகக் காத்திருப்பது தெரிந்தது. அவள் கையில் ஒரு நோட்டுப் புத்தகமும், 'ஸ்டெதஸ் கோப்'பும் இருந்தன. அந்தச் சமயத்தில் அங்கே ஒரு பஸ் வந்து நின்றது. ஆனால் அதில் இடமில்லாமையால், பஸ் நின்றவுடன் அதில் ஏறிய அவள் உடனே கீழே இறங்கிவிட்டாள். பஸ்ஸும் போய்விட்டது. அவளைச் செல்லையன் உற்றுக் கவனித்தான். அவள் மெடிகல் காலேஜில் படிக்கும் ஒரு மாணவி. முன்பு ஒரு நாள் இதே மாதிரி இரண்டு மூன்று பஸ்ஸில் இடமில்லாமல் போனதும்—பின் செல்லையன் தன் ரிக்ஷாவில் அவளை ஏற்றிக்கொண்டுபோய் மெடிகல் காலேஜில் விட்டதும், அவள் அவனுக்கு இரண்டு ரூபாய் கொடுத்ததும் சட்டென்று ஞாபகத்துக்கு வந்தன. உடனே இன்றைக்கும் அதே இரண்டு ரூபாயை அந்த அம்மாள் கொடுப்'பாங்க' என்ற ஒரு நம்பிக்கை மனதில் தோன்றவே "அம்மா! அன்னிப்போல ரிக்ஷாவிலேயே போய்விடலாம் அம்மா! சீக்கிரம் கொண்டு போய்விட்டுடறேன்' என்று அந்த ஸ்திரீயைப் பார்த்துச் சொல்லிக்கொண்டே

எதிர்ப்பக்கம் போவதற்காக ரிக்ஷாவைத் திரும்பினான் அவ்வளவுதான்! பின் பக்கம் வேகமாக வந்த ஒரு மோட்டார் ரிக்ஷாவன் மேல் மோதி அதைச் சுக்கு நூறாக்கியது! 'தொப்' பென்று கீழே விழுந்தான் செல்லையன்! மடியில் இருந்த சில்லரைகள் தார் ரோட்டில் சிதறி ஓடின அவன் மேல் ரிக்ஷாவின் உடைந்த பாகங்கள் விழுந்தன! அவன் மூர்ச்சையானான்! கை கால் தலையெல்லாம் அடிபட்டு ரத்தம் பீறிட்டுக்கொண்டு வந்தது!

* *

செல்லையனுக்கு மறுபடியும் பிரக்ஞை வந்தபோதுதான் ஒரு கட்டிலின்மேல் படுத்திருப்பதை உணர்ந்தான். மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தான். தன்னைச் சுற்றிப் பல கட்டில்கள் போடப்பட்டிருந்தன எல்லாவற்றிலும் நோயாளிகள்! தான் இருப்பது ஒரு ஆஸ்பத்திரியில் என்பது உடனே அவனுக்குப் புரிந்துவிட்டது.

தலையில் ஒரு பெரிய கட்டு கைகளிலும் கால்களிலும் பல இடங்களில் கட்டு. உடம்பெல்லாம் ஒரே வலி கைகளையும் கால்களையும் அசைக்க முடியவில்லை.

மெதுவாகத் தலையைச் சற்றுத் தூக்கிப்பார்த்தான். இருட்டும் சமயமாக இருந்தது அப்போது அவன் மூளை வேலைசெய்ய ஆரம்பித்தது. அன்று காலையிலிருந்து நடந்த சம்பவங்கள் ஒன்றின் பின் ஒன்றாக அவன் ஞாபகத்துக்கு வர ஆரம்பித்தன. பின் பக்கம் பார்க்காமல், ரோட்டில் குறுக்கே சென்றது; மோட்டார் மோதியது; அவன் கீழே விழுந்தது—எல்லாம் மறுபடியும் அவன் நினைவுக்கு வந்தன. சட்டென்று குழந்தை சொக்கனைப்பற்றிய எண்ணங்கள் அவன் உள்ளத்தில் எழுந்தன! அவனுக்கு மருந்து வாங்கித்தர வேண்டுமே! தனக்கு நேர்ந்த கதி வேலாயிக்குத் தெரியுமோ தெரியாதோ! பணத்துக்கு அவள் என்ன செய்தாளோ?

செல்லையனின் மனது குழம்பியது அவன் உடம்பின் வலியையும் அவன் மறந்தான். மெதுவாக மறுபடியும் ஒரு தரம் தலையைத் தூக்கிப் பார்த்தான். அதே சமயத்தில் ஒரு நர்ஸ் அவன் படுக்கையண்டை வந்தாள்.

அவள் செல்லையனைப்பார்த்து, "பயப்படாதேயப்பா! உயிருக்கு ஒண்ணும் பயம் இல்லை! 'எக்ஸ்ரே' கூட எடுத்துப் பார்த்துட்டோம் எலும்பு எதுவும் முறியலை மேல் காயம்தான்! சில நாளிலே ஆறிப் போயிடும் அந்த மோட்டார் சொந்தக்காரர் ரொம்ப நல்லவர்! உன் செலவுக்கு வச்சுக்கச்சொல்லி இருபதுரூபா பணம் கொடுத்துவிட்டுப் போயிருக்கார்...இதோ... என்று சொல்லிக்கொண்டே இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளை அவனிடம் கொடுத்தாள் மிகவும் நன்றியுடன் அதை வாங்கிக்கொண்ட அவன் மனதில் என்னென்னமோ எண்ணங்கள் அலைபாய்ந்தன.

ஆமாம்! உன் பெண்ஜாதி, குழந்தைகளெல்லாம் எங்கே இருக்காங்க? அவங்களுக்குத் தகவல் அனுப்பனும்...' என்றாள் அந்த நர்ஸ்

இருபது ரூபாயைப் பார்த்தவுடனேயே, தன் மனைவியைச் சந்தித்து அந்தப் பணத்தை அவளிடம் கொடுத்து டாக்டர் எழுதிக்கொடுத்த மருந்தை வாங்கிச் சொக்கனுக்குக் கொடுக்கச் சொல்லவேண்டும் என்று துடியாய் துடித்துக்கொண்டிருந்த செல்லையன் உடனே தன் மனைவியின் பெயரையும், அவள் இருக்கும் இடத்தையும் நர்ஸிடம் சொன்னான். அவளை அழைத்துவர ஆளை அனுப்புவதாகச் சொல்லிப் போனாள் நர்ஸ்.

நர்ஸ் வெளியே சென்றதும் வேலாயியின் வரவையே எதிர்பார்த்து, வாசற்படிபக்கம் வைத்த கண் வாங்காமல் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான் மணியாக ஆக அவன் மனச் சஞ்சலமும் அதிகரித்தது

கடியாரம் எட்டடித்துக்கொண்டிருந்தது. அவசர அவசரமாக வேலாயி அவ்'வார்டு'க்குள் நுழைந்தாள். செல்லய்யனின் கண்களில் ஒரு புது ஒளி தோன்றிடச் சுடர்விட்டுப் பிரகாசித்தது உடம்பில் ஒரு விதத் தெம்பு; மனதில் ஒருவித நம்பிக்கை; தலையைத் தூக்கிப் பார்த்தான்.

வேலாயி செல்லய்யனின் கட்டிலருகில் வந்துவிட்டாள் உடம்பு பூராவும் கட்டுடன் படுத்திருந்த செல்லாயியைக்கண்டு அப்படியே திடுக்கிட்டாள் கண்களில் கண்ணீர் முட்டி நின்றது. துக்கம் தொண்டையை அடைத்தது தன் நிலையைக் கண்டுதான் அவள் அப்படித் திக்பிரமை பிடித்தவள்போல் நின்றாள் என்று எண்ணிய செல்லய்யன். வேலாயி! பயப்படாதே! எனக்கு ஒண்ணும் ஆகலை. ஏதோ கொஞ்சம் காயம் பட்டிருக்கு! ஏதோ நல்லத்துக்குத்தான் மோட்டாரும் மோதிச்சு போல இருக்கு! மோட்டார் ஓட்டியாந்தவர் என் செலவுக்கு இருக்கட்டும்னு இருபதுரூபா கொடுத்துட்டுப் போயிருக்காராம்... இந்தா ...இதை வச்சுக்கோ...... குழந்தை சொக்கனுக்கு அந்த டாக்டர் ஐயா எழுதிக்கொடுத்த மருந்தை வாங்கிக் கொடு..." என்றுசொல்லிக்கொண்டே அந்தப்பணத்தை அவளிடம் நீட்டினான்

'சடா'ரென்று வேலாயியின் கண்கள் நீரைப் பெருக்கின. இருதயம் விம்மியது

"மத்தியானமே அது தலையிலே கல்லைப்போட்டுட்டுப் போயிடுச்சே..." என்று சொல்லி 'கோ' வென்று கதற ஆரம்பித்துவிட்டாள் அவள், இதுவரை அடக்கி வைத்திருந்த அழுகை அவளையும் மீறி பீறிட்டுக் கொண்டு வந்தது.

"என்ன! என்கண்ணு போயிடுச்சா! அட தெய்வமே! அட தெய்வமே!... இந்த சமாசாரத்தைக் கேக்கவா நான் உசிரோடு இருக்கேன்..." என்று சொல்லிக்கொண்டே தன் கையில் இருந்த நோட்டுக்களை வீசி எறிந்தான். அவன் தலை பழையபடி தலையணையின்மேல் 'தொப்'பென்று விழுந்தது

செல்லையனின் வாயிலிருந்து வெளிப்பட்ட வார்த்தைகளும், வேலாயியின் விம்மலும், ஆஸ்பத்திரியின் மூலை முடுக்குகளிலெல்லாம் கூட எதிரொலித்தன.

சைக்கிள் பயிற்சி!



எஸ். ஜே.

தெருவோடு ஒரு பையன் குரங்குப் பெடலில் சைக்கிள் விட்டுக் கொண்டு போனான் அவன் சைக்கிளில் சென்ற லாகவத்தைக் கவனித்தபோது, எனக்கு பொருமை உண்டாயிற்று சில வருஷங்களுக்கு முன்னால் நான் சைகிள் கற்றுக் கொள்வதற்காகச் செய்த பகீரதப் பிரயத்னங்கள் என் நினைவுக்கு வந்தன

எங்கள் ஊரில் என்னைப்போன்ற அநேக இளைஞர்களுக்கு முதன் முதலில் சைக்கிள் விடக் கற்றுக் கொடுத்த புண்ணியம் மணியைச் சேரும் மணியின் ஜன்ம லட்சியமே பிறருக்குப் பணி செய்து கிடப்பது தான் ஹென்றி போர்டு ஒவ்வொரு அமெரிக்கனும் ஒரு மோட்டாரின் சொந்தக்காரனாயிருக்க வேண்டும் என்று விரும்பியதுபோல மணி ஒவ்வொரு இளைஞனும் சைக்கிள் விட, கற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்பினான். சைக்கிள் விடக் கற்றுக்கொள்ளும் முயற்சியால் ஊரிலிருக்கும் இளைஞர்களெல்லோரும் ஒரு ஐக்ய முன்னணியின்கீழ் வந்தார்கள் யாராவது ஒருவன் தன்னுடைய முதல் சைக்கிள் பாடத்தைக் கற்றுக்கொள்ளும்பொழுது இந்தப் பரோபகாரிகள் அத்தனை பேரும் மணியின் தலைமையின் கீழ் ஒத்துழைத்தார்கள்

ஒருநாள் மணி என்னைத் தேடிக் கொண்டு வந்தான் மணி யாரையாவது தேடிக்கொண்டு வந்தான் என்றால், சைக்கிள் விடும் முறை அந்த ஆசாமியினுடையது என்று அர்த்தம்.

"என்ன! எத்தனை நாள் தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறாய்? எல்லோரும் உனக்காக ரோட்டில் காத்துக்கொண்டிருக்கிறார்கள் இப்போது ரோட்டில் ஜன நடமாட்டமே இல்லை. கிளம்பு...பையில் கொஞ்சம் சில்லரையும் போட்டுக் கொண்டு வா!" என்று கட்டளையிட்டான்

சில நிமிஷங்களில் நான் மணியைத் தொடர்ந்து போனேன். மணியின் அதிகாரம் அத்தகையது; அதைச் சாமான்ய ஜனங்கள் மீற முடியாது. என்னையும் தன்னுடன் சைக்கிள் கடைக்கு அழைத்துக் கொண்டு போய் என்பேரில் ஒரு சைக்கிளை வாடகைக்குக் கேட்டான். சைக்கிள் கடைக்காரன் எங்கள் இருவரையும் சந்தேகத்துடன் பார்த்து விட்டு, "புதிதாக சைக்கிள் விடக் கற்றுக்கொள்ளப் போகிறீர்களா? என்று கேட்டான் "

"சே! சே! ஒரு அவசர காரியமாய் ஸ்வாமி மலைக்குப் போக வேண்டும்" என்றான் மணி.

"இரண்டு பேர் 'லோட்' போகக் கூடாது!" என்று தடையுத்தரவு போட்டான் கடைக்காரன்.

—குரங்கு பெடலில்......

"சரி, இல்லை! இதுகூடவா எனக்குத் தெரியாது? என்று சொல்லிவிட்டுச் சைக்கிளை வாங்கிக்கொண்டு புறப்பட்டான் மணி.

"இது ரொம்ப உயர்ந்த சைக்கிள். ஏதாவது ரிப்பேர் ஏற்பட்டால் நீ தான் பொறுப்பாளி!' என்று என்னைப் பார்த்துச் சொன்னான் கடைக்காரன்.

"யாரோ கத்துக்குட்டிக்குச் சொல்லுவதுபோல் சொல்லுகிறாயே! உன் சைக்கிள் ரொம்ப பத்திரமாகத்தான் இருக்கும்; கவலைப்படாதே!' என்று அவனுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு மணி சைக்கிளில் தாவிக் கிளம்பினான் கொஞ்ச தூரம் சைக்கிளில் சென்ற பிறகு எனக்காக நின்றான்.

பிறகு நாங்கள் இருவரும் எங்கள் கூட்டாளிகள் காத்துக்கொண்டிருக்குமிடத்தை நோக்கிக் கிளம்பினோம். அங்கு காத்துக்கொண்டிருக்கும் நண்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் இஷ்டப்படி கிழக்கேயும் மேற்கேயும் சைக்கிளில் சவாரி செய்துவிட்டுத் திரும்பினார்கள்.

"சைக்கிள் கடை இருக்கும் பக்கம் மட்டும் ஒருவரும் இந்தச் சைக்கிளில் போகக்கூடாது" என்ற மணியின் எல்லை நிர்ணயத்தை எல்லோரும் ஒரு முகமாக ஒப்புக்கொண்டனர் ஒவ்வொருவரும் சைக்கிள் பிரயாணத்தில் தங்கள் ஆசையைத் தீர்த்துக் கொண்ட பிறகு எல்லோருமாய்ச் சேர்ந்துகொண்டு என்னைக் கவனிக்க ஆரம்பித்தனர் ஆபத்து மிக்க ரண சிகிச்சைக்குப் போகுமுன்னால் நடுங்கும் நோயாளிபோல நான் நடுங்கிக் கொண்டிருந்தேன்.

இரண்டு பேர் சைக்கிளைப் பிடித்துக்கொண்டார்கள் மணி என்னைப் பிடித்து இழுத்து ஸீட்டின் மேல் உட்காரவைத்தான்.



...கற்றுக்கொள்ளப் போகிறீர்களா ?...

"நீ ஒன்றுக்கும் பயப்படாதே! சைக்கிள் விடக் கற்றுக்கொள்வது ரொம்ப சுலபமான விஷயம்!' என்று சொல்லிக்கொண்டே மணி பின்னாலிருந்து சைக்கிளைத் தள்ள ஆரம்பித்தான்.

"என்ன! காலை எங்கேயோ வைத்துக்கொண்டிருக்கிறாய்? பெடல் பண்ணு!" என்றான் மணி

என் மெய்க்காப்பாளர் போல் இரண்டு பக்கமும் இரண்டு நண்பர்கள் நடந்து வந்துகொண்டிருந்தனர்

'இதோ பார்! இதைப்போல் நீ வளைந்துகொண்டிருந்தால் சைக்கிளுடன் நேரே அந்தச் சாக்கடைக்குள் போய் விழப்போகிறாய்!" என்று மணி எச்சரித்தான்

இன்னும் கொஞ்ச தூரம் நான் சைக்கிளில் சவாரி செய்த பிறகு (அல்லது சைக்கிள் தள்ளப்பட்ட பிறகு) மணி வெகு ஆத்திரத்துடன், என்னடா! அஷ்ட கோணலாய் உட்கார்ந்திருக்கிறாயே! நேராக நிமிர்ந்து உட்காரப் போகிறாயா? இல்லாவிட்டால் சைக்கிளை அப்படியே விட்டு விடட்டுமா? என்றான் நான் இனி மேல் என் வாழ்நாள் முழுவதும் நிமிர்ந்து உட்காருகிறேன் என்று மொழி கொடுத்த பிறகு மணி கொஞ்சம் சாந்தமடைந்தான்.

இப்போது சைக்கிள் இடது கைப் பக்கம் சாய ஆரம்பித்தது. அதைச் சரி செய்துகொள்வதற்காக நான் செய்த முயற்சியில் வலது பக்கம் சாய்ந்து, மணியின் காலிலேயே விழுந்தது மணிக்கு அசாத்தியமான கோபம் வந்து, எனக்கு ஒரு அறை கொடுக்கப் போகிறான் என்று பயந்துகொண்டிருந்தேன். ஆனால் மணி புன்னகை செய்தான்

"பயப்படாதே! ஆரம்பத்தில் இப்படித்தான் இருக்கும். பாலன்ஸ் வந்துவிட்டால் எல்லாம் சரியாய்ப் போய்விடும்!" என்றான் மணி அவனுடைய முகத்தில் சைக்கிள் விடுவதில் தேர்ச்சி பெற்றவனுக்குரிய கர்வம் பிரதிபலித்தது

பொறுமைசாலிகளான என் நண்பர்கள், மறுபடியும் என்னைச் சைக்கிளில் வைத்துத் தள்ளிக்கொண்டு போக ஆரம்பித்தார்கள். ஆனால், இந்தத் தடவை முன்னைக் காட்டிலும் வேகமாக சைக்கிள் நகர்ந்தது நான் விரைத்தாற்போல ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டே சைக்கிளின் மீது உட்கார்ந்திருந்தேன்.

திடீரென்று என் முதுகுப் புறத்தில் ஒரு குத்து வேகமாக விழுந்தது. அதைத் தொடர்ந்து "ம்...ம்...ம்" என்ற கர்ஜனையும் கேட்டது. மணி என்னை நிமிர்ந்து உட்காரச் சொல்லுகிறான் என்று இந்த சமிக்ஞை மூலம் புரிந்துகொண்டேன்.

இப்படியே சற்று நேரமான பிறகு சைக்கிளும் நானும் வெகு வேகமாகச் சென்றுகொண்டிருந்தோம் (என் முயற்சியால் சைக்கிள் செல்லவில்லை என்பதைத்தான் இப்படிக் குறிப்பிடுகிறேன்) என் கண்ணோரத்தினால் பக்கத்தில் பார்த்தபொழுது, அருகில் இருந்த நண்பர்கள் அங்கே இல்லை என்ற தெரிந்தது. எங்கேயோ மலையுச்சியிலிருந்து கீழே விழுந்துகொண்டிருப்பது போல உணர்ந்தேன் பின்னாலிருந்து நண்பர்களின் குரல் கேட்டது

"பயப்படாமல் பெடல் பண்ணு. பக்கவாட்டில் பார்க்காதே! நிமிர்ந்து உட்காரு...அவ்வளவுதான்...உனக்கு முக்கால்வாசியும் வந்துவிட்டது!" என்று உற்சாகப்படுத்தினார்கள்

எனக்கு முக்கால்வாசி வந்துவிட்டதைப் பற்றிச் சந்தேகம் அதிகமாக இருந்தபோதிலும், எதிரில் ஒரு சைக்கிள் வந்துகொண்டிருந்தது என்பதைப் பற்றிச் சந்தேகமே உண்டாகவில்லை. யுத்தத்தில் கௌரவர்களை எதிர்க்கு முன்னால் அர்ஜுனனுக்கு ஏற்பட்ட அவஸ்தைகளெல்லாம் எனக்கும் ஏற்பட்டன. என் அவயவங்கள் அயர்ந்து போயின; வாய் உலர்ந்துபோயிற்று அர்ஜுனனின் கையிலிருந்து காண்டீவம் நழுவியதுபோல், என் கையிலிருந்து ஹாண்டில் பார் நழுவியது. எதிரி சைக்கிள் படையோ (எதிரே வந்தது ஒரு சைக்கிள்தான் இருந்தாலும் எனக்கு அப்போது இருந்த குழப்பத்தில் ஒரு பிரம்மாண்டமான சைக்கிள்படை ரோட் முழுவதையும் அடைத்துக்கொண்டு என்னுடன் யுத்தம் செய்ய வந்திருப்பதாகத் தோன்றியது) வெகு சமீபத்தில் நெருங்கி வந்துகொண்டிருந்தது.

அடுத்த நிமிஷம் ஒரு பெரும் பூகம்பம் ஏற்பட்டது சைக்கிளும் நானும் எங்கேயோ போய்விழுந்தோம்: சைக்கிள் பக்கத்திலிருந்த ஒரு விளக்குக் கம்பத்தில் மோதியது போல் தோன்றியது சில நிமிஷங்களுக்குப் பிறகு நான் கண்விழித்துப் பார்த்தபோது, என் முழங்கையில் நன்றாய்ச் சிராய்த்திருந்தது. அந்தக் காயத்திலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது முழங்காலிலும் வலி ஏற்பட்டது

மணியும் மற்ற நண்பர்களும் சைக்கிளுக்குப் பிரேத விசாரணை (போஸ்ட்மார்ட்டம்) செய்துகொண்டிருந்தனர். ஒருவரும் என்னைக் கவனித்ததாகவே தெரியவில்லை.

'ஹாண்டில் பார் இனிமேல் பிரயோஜனப்படாது. ரொம்ப வளைந்து போய்விட்டது" என்றார் ஒருவர்.

"க்ளட்ச் போய்விட்டது! என்றார் மற்றொரு 'பிரேத விசாரணை' அதிகாரி.



...சைக்கிளில் நானும்......

...சக்கரங்கள் ஒத்துழைப்பு இல்லை...

"பெல் எங்கே?" என்றார் மற்றொருவர்.

'நான் வாங்கிக்கொண்டு வந்தபோது இருந்ததோ?' என்றான் மணி.

'பேஷாய் இருந்தது! நான் அதில் போனபோது நூறு தடவை 'பெல்' பண்ணிக்கொண்டே போனேனே!" என்று தன் கூற்றுக்கு நிரூபணம் கொண்டு வந்தான் அந்த ஆசாமி.

'உன்னை யார் நூறு தடவை பெல் பண்ணச் சொன்னது?" என்று குறுக்கு விசாரணை செய்தான் மணி. 'அப்படியானால் பெல்லினால் உண்டாகும் நஷ்டத்தைமட்டுமாவது நீ கொடுக்கவேண்டும் முழு ரிப்பேர் செலவையும் ராமுவால் ஒப்புக்கொள்ள முடியாது!' என்று மணி தீர்ப்பளித்தான்

"ரொம்ப அழகுதான்! தலைகால் தெரியாமல் இத்தனை நேரம் சைக்கிள் விட்டுவிட்டு என்மேல் பழி போடுகிறீர்களா? அதெல்லாம் முடியாது!" என்று மறுதளித்தான் அந்த நண்பன்.

"ப்ரீவீல் சரியாகவில்லை!" என்றான் ஒருவன்

"இதில் எது சரியாக இருக்கிறது?" என்று கேட்டான் மணி "எல்லாம் இந்த மடையனின் வேலை. நேராக உட்காரு என்றால், கூனிக் குறுகிக் கொண்டு உட்காருகிறான் வளையாதே என்று சொன்னால். ஆயிரம் கோணல் செய்துகொள்கிறான்.

"இவ்வளவு ஆபத்திலும் ராமுவுக்குக் கொஞ்சம் நல்ல காலமும் இருக்கிறது. நல்ல வேளையாக இந்த ஒரு சைக்கிளின் நாசத்தோடு தொலைந்ததே! அதைச் சொல்லு இவன் பாட்டுக்கு எதிரே வந்த சைக்கிளின் மீது மோதியிருந்தால் அந்தச் சைக்கிளுக்கு வேறு அல்லவா தண்டம் கொடுக்கும்படி ஆகும்?" என்று எனக்கு இருந்த சொற்ப நல்ல காலத்தை மணி சிலாகித்துக்கொண்டான்!

பிறகு சைக்கிளைக் கடையில் சேர்ப்பிக்கலாம் என்பதற்காக சைக்கிளைத் தள்ள ஆரம்பித்தோம், ஆனால் சக்கரங்களின் ஒத்துழைப்பு இல்லை அதனுடைய பாகங்கள் ஒன்றும் விட்டுப்போகாமல் கயிறு போட்டுக் கட்டி இரண்டு பேராகத் தூக்கிக் கொண்டுபோய் சைக்கிளைக் கடையில் போட்டார்கள் (நான்கு பேர்களாகத் தூக்கியிருந்தால் இன்னும் கொஞ்சம் பொறுத்தமாயிருந்திருக்கும்!)

"ஸ்வாமி மலைக்குப் போகும் வழியில் சைக்கிளுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்ததா?" என்று கடைக்காரன் கேலியாகக் கேட்டான்.

'என்ன அப்பா! வெறும் ஓட்டை சைக்கிளைக் கொடுத்துவிட்டாயே!' என்று மணி கடைக்காரனைக் குற்றஞ் சாட்டினான்.

'இதை வாங்கி இன்னும் ஒரு வருஷங்கூட ஆகவில்லை புத்தப் புது வண்டி நீங்கள் ஊரிலிருக்கிற லாந்தர்க் கம்பம் குட்டிச்சுவர் எல்லாவற்றின் மேலும் மோதிக்கொண்டிருந்தால் எந்த சைக்கிள்தான் பழசாகாமலிருக்கும்? இதை ரிப்பேர் செய்யச் சாமான்கள் வாங்கவே செலவு ஐம்பது ரூபாய்க்குமேல் ஆகும், பரவாயில்லை நான் கைநஷ்டப்படுகிறேன். உங்களுக்காக முப்பது ரூபாய் போட்டுக்கொள்கிறேன் அந்தப் பணத்தை உடனே கொண்டுவந்து கொடுத்துவிட்டு மறுகாரியம் பாருங்கள்! என்றான் கடைக்காரன்.

நாங்களெல்லோரும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டு இருபத்தைந்து ரூபாய்க்கு அவனை ஒப்புக்கொள்ளும்படி செய்தோம் அவன் அதிக ஆட்சேபனைகள் சொல்லாமல் அதற்கு ஒப்புக்கொண்டது எங்களுக்கு மிகவும் ஆச்சரியமளித்தது அதற்குப் பிறகு நாங்கள் சைக்கிள் வழிக்கே போகிறதில்லை.

• • • •

இதெல்லாம் ஆகிப் பத்து வருஷங்களுக்கு மேலிருக்கும் ஒரு நாள் மெரீனா கடற்கரையில் மணியைச் சந்தித்தேன். மணியை இப்போது சுலபமாக அடையாளம் புரிந்து கொள்ள முடியவில்லை. வெகு நாளைய நண்பனைச் சந்திக்கும்போது எனக்கும் மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது அவனோடு அந்தக் குதூகலமான நாட்களையும் பழைய நினைவுகளையும் பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன்.

"என்ன மணி! உன் வீடு ஆபீசுக்குப் பக்கத்திலிருக்கிறதா? இல்லாவிட்டால் ரொம்ப தூரமா? என்று கேட்டேன்.

"அதை ஏன் கேட்கிறாய், போ! டிராம் பாஸ் வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறேன்! இந்தப் பட்டணத்து டிராம்களையும் அவற்றில் சேரும் கூட்டங்களையும் நினைத்துக் கொண்டால் நம்ப ஊர் கட்டை வண்டிகள் எத்தனையோ தேவலைபோலிருக்கிறது. இந்தச் சர்க்கார் ஏன் ஒரு கட்டை வண்டி ஸர்வீஸ் நடத்தக் கூடாது என்றுகூட எனக்குத் தோன்றுகிறது!"

"மணி! நிஜமாக நீ டிராமிலேயா போகிறாய்? நீ சைக்கிள் வைத்துக் கொண்டிருப்பாய் என்றல்லவா எதிர்பார்த்தேன்!' என்றேன் நான்.

மணி சிரித்தான் "டேய், போக்கிரி!" என்று சொல்லிவிட்டு அப்போது வந்து நின்ற பஸ்ஸில் ஏறிக் கொண்டான் மணி.

மனைவி:- "நேத்திக்கி என்னை குயிலேன்னு கூப்பிட்டேள். இன்னிக்கி என்னமோ சண்டைக்கு வரேளே?"

புருஷன்:—"உன்னை தானே 'குயில்'ன்னு சொன்னேன் உன் குரலை சொல்லவில்லையே!"

கலை மண்டபம்

நமது பம்பாய்க் கடிதம்

யஷோதரா கட்ஜு

பிரபல நடிகர் ஸ்ரீ கிஷோர் ஸாஹு பம்பாய்க்கு அருகாமையிலுள்ள செம்பூர் என்னும் ஊரில் தற்சமயம் தயார்செய்யும் ஹமாராகர்' ('நமது குடும்பம்) என்னும்படத்தின் ஷூட்டிங்கைப்பார்க்க ஒரு நாள் மத்தியானம் என் ஆபீஸிலிருந்து கிளம்பினேன் பதினாறு மைல்களுக்கப்பாலிருக்கும் செம்பூருக்குப்போய், இப்படம் தயாரிக்கும் ஸ்டுடியோவைக் கண்டுபிடிப்பதற்குள் சாயங்காலம் ஆகிவிட்டது நான் அங்கு போய்ச் சேருவதற்கும், அன்றைய ஷூட்டிங்கு முடிவதற்கும் சரியாகயிருந்தது. இப்படத்தில் நடிக்கும் பாத்திரங்கள் அப்பொழுது வெளிவந்துகொண்டிருந்தார்கள். இக்கூட்டத்தில் கிஷோர் ஸாஹு இல்லை ஆனால், இப்படத்தில்நடிக்கும் ஸ்ரீமதி யஷோதரா கட்ஜு என்னை அடையாளம் கண்டு கொண்டார். என்னைப் பார்த்ததும் 'என்ன, ஸார், நாங்களெல்லோரும் வீட்டுக்குப்போகும் சமயம்பார்த்து நீங்கள் வருகிறீர்கள்' என்று கேட்டார் "நீங்கள்தான் இரவு பகல் தெரியாமல் படங்களைத் தயாரிக்கிறீர்களே, நான் எப்பொழுது வந்தாலென்ன?" என்று விட்டுக் கொடுக்காமல் பதிலளித்தேன். "சரி, பம்பாய்க்கு திரும்பிவருவதாயிருந்தால், என்னுடன் மோட்டார் வண்டியில் வரலாம்" என்று அவர் சொல்லவே வேறு வழியில்லாமல் அவருடனேயே திரும்பினேன்.

வண்டியில் உட்கார்ந்துகொண்ட பிறகு வழியில் சினிமாத்தொழிலைப் பற்றியும், மற்ற அனேக விஷயங்களைப்பற்றியும் பேசினோம் யஷோதரா கட்ஜு இந்திய சினிமாவின் பெயர்பெற்ற விதூஷகி என்று எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. தான் ஒரு பிரபல விதூஷகி என்பதை தன் ஒவ்வொரு பேச்சிலும் காண்பித்தார். ஹாஸ்யமாக நடித்து, ஜனங்களுக்கு சிரிப்பு மூட்டுவதில் அவருக்கு மிஞ்சினவர்கள் பம்பாயில் கிடையவே கிடையாது அவரும், கோப் என்பவரும், இவ்வூரில் தயாரிக்கப்படும் அனேக படங்களில் ஹாஸ்யத்தன்மையை உண்டுபண்ணுவதற்காக ஒன்று சேர்ந்து நடிக்கிறார்கள். தென்னிந்தியாவில் கிருஷ்ணன், மதுரம் இருப்பதுபோல் கோப்பும், யஷோதரா கட்ஜுவும், இவ்வூரில் அந்த ஸ்தானத்தில் இருக்கிறார்கள். ஒரு வித்தியாஸம் என்னவென்றால், கிருஷ்ணனும் மதுரமும் தம்பதிகள். கோப்பும், யஷோதராவும் அப்படியில்லை. ஹாஸ்யமாக நடிப்பது சாதாரணமில்லை விரஸமில்லாமல், ஹாஸ்யமாகப்பேசுவதும் நடிப்பதும் ஒரு சிறந்த கலையென்றே சொல்லவேண்டும் ஹாஸ்யமாக நடிப்பதற்கு மிகுந்த திறமையும். சாதுர்யமும் தேவை.

"விதூஷக, விதூஷகிகள் சில சமயங்களில், ஆபாஸமாக நடிக்கிறார்களே, இப்படிச் செய்வது அவ்வளவு அழகாயில்லையே" என்று யஷோதராவிடம் சொன்னேன். அதற்கு அவர், "கோமாளித்தனத்தின் பாத்திரத்திற்கே எப்பொழுதும். ஒரு விதமான விபரீத லக்ஷணங்கள் உண்டு. ஒரு விதூஷகி. தன் சுய உருவை மறந்து. உண்மையில் ஹாஸ்யம் ததும்பத்தக்க வழியில் நடித்தால் ஆபாஸமாகயிருக்காது" என்று பதிலளித்தார். மேலும் தன் மனச்சாட்சி பூர்த்தியடைய நெறி தவறாமல் கஷ்டப்பட்டு நடிப்பதே தன் முக்கிய கருத்து என்றும். விதூஷக நடிப்பைக் காட்டிலும். இன்னும் கௌரவமுள்ள பாத்திரத்திலும் நடிக்க தனக்கு நல்ல திறமையிருக்கிறதென்றும், தன் திறமையைப் படமுதலாளிகள் நன்றாக தெரிந்து உபயோகப்படுத்தவில்லையென்றும் அவர் சொன்னார்.



யஷோதரா கட்ஜு

யஷோதரா கட்ஜு, தன் சுய சரிதையைப்பற்றிப் பேசிக்கொண்டே, தான் எப்படி சினிமாவில் சேர்ந்தார் என்பதையும் சொன்னார். அவர் லக்னோவில், ஜூனியர் கேம்பிரிட்ஜ் பரீட்சையை முடித்தவுடன், நடனம் பயிலும்பொழுது, அவருடைய குடும்பத்திற்கு தெரிந்த, நேஷனல் ஸ்டுடியோவைச் சேர்ந்த ஆகாஜனீ கேஷ்மீரி என்பவர், இவருடைய தகப்பனாரை மிகவும் தொந்தரவு செய்து, "லாலாஜீ' என்னும் படத்தில் இவரை நடிக்க வைத்தார் யஷோதரா கட்ஜு, மிகவும் உயர்ந்த காஷ்மீரி பிராம்மண குடும்பத்தைச் சேர்ந்த பெண். லாகூரில், ஏப்ரல் 15-ம்தேதி, 1928-ம் வருஷம் பிறந்தார். இவர்தான் குடும்பத்தின் கடைசி பெண் சகோதர, சகோதரிகள் எல்லோரும் நல்ல நிலைமையில் இருக்கிறார்கள் யஷோதரா பதிமூன்றும் வயதில் சினிமாவில் சேர்ந்துவிட்டார். எஸ் எம் யூஸப் என்னும் பிரபல டைரக்டா தான் இவரை ஒரு விதூஷகியாக தேர்ந்தெடுத்தார் அவர் பிறகு தயாரித்த 'ஆய்னா'' என்னும் படத்தில், மிகவும் வியக்கத்தக்கபடி நடித்தார். இப்படத்தில் இவருக்கு வெற்றி கிடைத்த பிறகு, அநேக பட முதலாளிகள், இவரைத், தங்கள் படங்களில் நடிக்க வைக்க நான், நீ என்று முன் வந்தனர். படத்தில் நடிக்க ஆரம்பித்தது முதல் சென்ற ஒன்பது வருஷமாக, தன் பெற்றோர்களுடன், பம்பாயில் இருக்கிறார். இதுவரையில், பதினாறு படங்களுக்கு மேல் நடித்திருக்கிறார். ஒவ்வொரு படத்திலும் நன்றாக நடித்தபோதிலும். தன் மனச்சாட்சி சாந்தமடையவில்லை என்று கருதுகிறார்.

யஷோதராகட்ஜு, ஜெமினி ஹிந்தி ".சந்திரலேகாவில்" மதுரம் நடித்த பாத்திரத்தில் ஸர்க்கஸ் கணக்கு எழுதும் பெண்ணாக நடித்திருப்பது, சினிமா நேயர்களுக்குத் தெரிந்த விஷயமே. இப்படத்தில் நடிப்பதற்குதான் சென்னைக்கு வந்து சில நாட்கள் தங்கியிருந்ததால், சென்னையின் மகிமை தனக்கு நன்றாக விளங்கிற்று என்று சொன்னா. ஒரு சிறிய பெண் பேசுவதுபோல், குதித்துக் கொண்டே சொன்னாள் 'சென்னையைப்போல் ஒரு அழகான நகரத்தை நான் பார்த்ததில்லை அங்கிருக்கும், பெருந்தன்மையுள்ள மனிதர்களும், சாந்தமான நிலைமையும், எனக்கு மிகவும் பிடித்துவிட்டன. எல்லாவற்றையும்விட, என் கவனத்தை இழுத்துச் சென்ற விஷயம் என்னவென்றால், சென்னையின் சோத்தியான கடற்கரை, "எலியட்ஸ் பீச்சை"க் கண்டு அப்படியே காதல் கொண்டேன் என்றார் இப்படிச் சொல்லி முடிப்பதற்குள் பம்பாயில், நான் மோட்டார் வண்டியைவிட்டு இறங்கும் இடம் வந்துவிடவே வந்தனோபசாரத்துடன் அவரிடமிருந்து விடை பெற்றுக்கொண்டேன்

நல்ல அழகும், வெட்டும் வாய்ந்த யஷோதரா கட்ஜு. சாதுர்யமான சம்பாஷணையில் மிகவும் சாமர்த்திய சாலி மேலும் சாந்தமான குணமும், நல்ல மரியாதையும், புத்தியையும் படைத்தவர் இவருக்கு சமையல் வேலை செய்வதில் மிகவும் பிரியம் அதிகம் ஒழிவு நேரங்களில். படித்துப் படித்து தன் கல்வியை விருத்தி செய்து கொள்கிறார் தான் ஒரு பெயர் பெற்ற சினிமா நடிகை என்ற கர்வமில்லாமல், வியக்கத் தக்க அடக்கத்துடன் இருக்கிறார் யஷோதரா.

தி. மா. ராமச்சந்திரன்—

வைக்கோல் வண்டியிலே உட்கார்ந்திருக்கும் பெண் மதுபாலா. கிராமத்திலிருந்து வெளியேறிவிடுகிறார். "நிஷானா" என்ற படத்தில் இந்தக்காட்சி வருகிறது.

பிலிம் எடிட்டர்

"டைரக்டர் கு. வேம்பு"

எடிட்டர்

படத் தொழிலில் இவரும் மிகவும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தர். பல்வேறு இடங்களில் பல்வேறு காட்சிகளை முன்னும் பின்னும் எடுப்பவைகளை எல்லாம் கதைக் கோவையில் தொகுப்பதால் இவரை எடிட்டர் என அழைக்கின்றனா படம் எடுக்கப்படும் கலையில், படம் வேறு சப்தம்வேறாகத் தனித் தனியாய் பதிவுச்செய்யப்படுகிறது எடிட்டரின் உதவிக்காக எடுக்கப்படும் ஒவ்வொரு ஷாட்டையும், எத்தனையாவது முறையாய் எடுக்கப்படுகிறது என்பனவற்றுடன் கூடிய (Clap Stick) நம்பர் பலகையை கேமிராவிற்கு முன்னால் வைத்துக்கொண்டு தட்டப்படுகிறது தட்டும் சப்தமும் பதிவு செய்யப்படுகிறது தட்டிய பின் (Claps) போன பின் நடிகர்கள் நடிக்க ஆரம்பிக்கின்றனர் தட்டும் நம்பா பலகை எடிட்டருக்கு படத்தையும் சப்தத்தையும் ஒன்றாய் பொருத்தி வெட்டுவதற்கு செளகர்யமாய் இருக்கிறது. சில சமயங்களில் படத்தில் Clap மூடும் இடம் சரியாய் தெரியாமல் இருக்கும் அந்த மாதிரி வந்தால் வேலை தொல்லை அதிகம் யூகமாய் படத்தையும், சப்தத்தையும் பொருத்தவேண்டி வரும் எடுத்த படத்தின் ஒவ்வொரு காட்சியையும் வரிசையில் வைப்பதோடு எடிட்டர் வேலை முடிந்துவிட வில்லை

படத்தின் கதையில் வரும் சம்பவம், எப்படி எடுப்பதாய் உத்தேசிக்கப்பட்டுள்ளது? என்பதின் குறிப்பு Script) இவருக்கும் கொடுக்கப்படுகிறது எடிட்டர் என்றால் எடுக்கப்பட்ட படத்தையும் சப்தத்தையும் நேருக்கு நேர் சரியாய் வைத்து வெட்டுவதும், ஒட்டுவதும் என்று எண்ணுவது அல்ல அப்படி செய்வது சிங்கர் நைஸ் (Synchronise) செய்வது என்றுதான் சொல்லவேண்டும்.

எடிட்டரும் டைரக்டரும்

அனுபவம் உள்ள எடிட்டர் டைரக்டருக்கு மிகவும் ஒத்தாசை செய்ய முடியும் எடுக்கும் காலத்தில் பல்வேறு விதமாய், பல பக்கங்களிலிருந்தும் காட்சிகளை எடுத்திருக்கலாம். ஆனால் எடிட் செய்யும்போது எந்த ஷாட்டை உபயோகிக்க வேண்டும்? ஏன் உபயோகிக்கவேண்டும்? என்பதையெல்லாம் நிச்சயமாய் தீர்மானம் செய்துகொண்டு செய்ய வேண்டிய பொறுப்பு எடிட்டருக்கு உண்டு இது விஷயமாய் டைரக்டருடன் கலந்து பேசி முடிவு செய்ய வேண்டியிருக்கிறது...

எடிட்டரும் திருத்தமும்

எடுக்கப்பட்ட காட்சிகளை விவரமாய் சொல்லும் (Editing Report) ரிபோர்ட்டும் கிடைக்கிறது அதில் விசேஷமாய் குறிப்பிடப்பட்டிருக்கும் குறிப்பின்படி செய்வதுடன், சந்தேகம் வந்தாலும் அல்லது தனக்குப்படும் யோசனைகளையும் டைரக்டருடன் கலந்துகொள்ளவேண்டும் உதாரணமாய் டைரக்டர் ஒரு பிரதம பாகத்தினர் பேசியுள்ளதை இன்னொருவர் பாவத்தின் மேல் சப்தத்தை போடும்படி (Over lap) செய்ய எடுத்திருக்கலாம் ஆனால அதற்கு எடுத்திருக்கும் (Building up by Reaction) பாவம் மட்டமாய் இருந்தால், அதை உபயோகிக்காமல் இருக்கலாமென எடுத்துச் சொல்லியும் அல்லது அந்த துண்டை போட்டுக் காண்பித்தும் தன் இஷ்டத்துக்கு டைரக்டரை திருப்பலாம் டைரக்டருக்கு தான் சொல்லுவது நியாயம் என்னும் முறையில் எடுத்துப்பேசவும் வேண்டியிருக்கிறது எடுத்த சில காட்சிகள் குறிப்பிட்டமாதிரி வராவிட்டால் திரும்பவும் எடுக்கும்படி சொல்ல வேண்டும். இம்மாதிரி ஒரு படத்தில் பல ஷாட்டுகள் எடுக்கவேண்டியிருக்கும். இதைத்தான் (Editor's Shot) என கடைசி கட்டத்தில் எடுக்கும்படி வருகிறது சில சமயங்களில் கதையின் ரூபமே எடிட்டிங் சந்தர்ப்பத்தில் மாற்றும்படி வந்தாலும்வரும் எப்படி என்றால் உதாரணமாய் ஆபத்தில் இருக்கும் கதா நாயகன் உதவியாளர் ஒருவரால் தப்புவிக்கப் படுவதாய் வைத்துக்கொள்வோம். கதாநாயகனை சிறைக்கு உள்ளாக்கும் எண்ணத்துடன் வரும் விரோதி இவன் தப்பிப் போவதையோ அல்லது தப்புவிக்கப் படுவதையோ தெரிந்துகொள்ளக்கூடாது தெரிந்தால் அந்தக்கட்டத்திலேயே கதை மாறும்படி வருகிறது அங்கேயே கதையை முடிக்கவோ, சம்பவத்தையே முடிக்கவோ வேண்டி இருக்கும். பார்ப்பதற்கு அழகாய் இருக்கும் என எண்ணி தப்பிப்போகும் சமயத்தில் எதிரி எட்டிப் பார்ப்பதாய் வைத்துக்கொள்வோம். அதன் பின் உதவியாளன் திரைக்குப்பின் மறைகிறான்; இவை எல்லாம் எதிரிக்கு தெரிந்தால், எதிரி கதா நாயகனை பின் தொடருவதும், மறைவில் இருக்கும் உதவியாளனையும் சித்ரவதை செய்ய வருவதும் சுலபம் கதையில் குறிப்பிட்ட மாதிரி கதா நாயகன் தப்பி கப்பலில் போக முடியாது ஆகையால் கதாநாயகன் தப்பிப் போன போது எதிரி பாரப்பதாய் எடுத்த ஷாட் தப்பு; அது கதையைக் கெடுத்து விடும் என்பதை டைரக்டருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இப்



சமீபத்தில் சென்னை மியூஸியம் தியேட்டரில் நடந்த நாட்டிய கலா மகாநாட்டில் சொற்பொழிவாற்றிய திருவிடைமருதூர் பரத நாட்டிய வித்வான் ஸ்ரீ கொப்பையா பிள்ளைக்கு ரமணீய கலா கேந்திர தலைவர் ஸ்ரீ கோபாலகிருஷ்ண உபசாரம் நடத்தியபோது எடுத்த படம்.

படிச் செய்வதால் தான் டைரக்டருடைய தவறையும் நிறுத்தி கதையின் லக்ஷணமும் குறையாமல் பாதுகாக்கப்படுகிறது. இதைப்போன்ற ஒரு சிறிய அம்சம் கதையை நம்ப முடியாததாகச் செய்வதுமல்லாமல் பலருக்கு முட்டாள் பட்டம் வாங்கிக் கொடுத்தும் விடும். இம்மாதிரி தவறுகள் நேராமல் பாதுகாக்கும் பொறுப்பு எடிட்டருக்கு உண்டு. எடிடர் தான் பலபேருடைய கற்பனையும் உழைப்பும் வீண் போகாமல் பாதுகாக்க வேண்டியவராகிறார்.

எடிட்டரும் உணர்ச்சியும்

எடிடர்தான் எங்கெந்த இடத்தில் ஷாட் சாவதானமாய் இருக்க வேண்டும்?" எங்கெந்த இடத்தில் ஷாட் துரிதமாய் இருக்கவேண்டும்? என்றும் தீர்மானித்து, டைரக்டருக்கு Possitive வை வெட்டிப் போட்டுக் காண்பித்து நன்றாய் இருக்கிறதா? எப்படியிருந்தால் சரியாக இருக்கும் எனத் தெரிந்து, அதற்கு தகுந்த மாதிரி Negative வை வெட்ட வேண்டும். மேலும் ஒவ்வொரு காட்சியும் எப்படி முடியவேண்டும்? ஏன் அப்படி முடியவேண்டும்? என்பதையெல்லாம் டைரக்டருடன் வாதித்து அதற்கு வேண்டிய காட்சி மறைவு (Made out) காட்சி தோற்றம் (Mo le in) காட்சி துடைப்பு (Wipe) காட்சியுடன் காட்சி கலப்பு (Dissolve) முதலியவற்றை தயார் செய்து, முடிந்தானவுடன் தக்கபடி பொருத்தி படத்திற்கு உணர்ச்சியை ஊட்டும் சக்தியும் எடிடருடையதாகிறது.

எடிடரும் ஷாட்டு திருடனும்

எடிடிங் அறையில் எவ்வளவு ஜாக்கிரதையாய் லைப்ரரி முறைப்படி எல்லாவற்றையும் ஒழுங்காய் வைத்திருந்தாலும் சில சமயங்களில் ஷாட்டைக் காணோம் என்று தேடும்படி வந்துவிடும். இவ்விதம் ஷாட்டைத் தேடுவது என்பது எடிடிங் அறையில் உள்ளவர்களுக்கு சகஜம். சில சமயம் எடிடர் தேடும் ஷாட்டு மேஜை மீதோ அல்லது அவர் தோளிலோ தான் இருக்கும். ஆனால் அவர் அதைப் பார்க்காமலே உதவியாளர்களுக்கெல்லாம் வேலை கொடுத்துவிடுவார். இது வேண்டும் எனச் செய்வது அல்ல. அம்மாதிரி கட்டம் வரும்போது கொஞ்சநேரம் வேலை செய்வதை நிறுத்திவிட்டு கப்பால் செய்வது நலம். அப்படிச் செய்தால் தோளின்மேல் இருக்கும் ஷாட் உடன் கைக்குக்கிட்டும். இதைப் போல்எனக்கு ஆப்தமாயும் குருவைப் போன்ற வருமான பெரிய எடிடர் எத்தனையோ தடவை செய்துள்ளார்.

'ராகியில்' உல்லாஸமும் காமினி கௌஷலும்.

அதை அவர் கவனக்குறைவு என நான் சொல்லமுடியாது. எடிடிங் அறையில் ஷாட்டைக் காணோம் என்றால் என்ன என்பது அனுபவம் உள்ளவர்களுக்குத்தான் தெரியும். சமுத்திர மணலில் காணாமல்போன சின்ன அரைக்கால் ரூபாய்கூட ஒரு சமயம் கிடைத்துவிடும். ஆனால் 50 அடி நீளம் உள்ள ஷாட்டுக் கிடைக்காமல் கொடுக்கும் அவதிக்கு சொல்லவேண்டாம்.

எடிட்டரும் பின்னணி கீதமும்

முதல் முதல் எடுக்கும் (Print) பிரதியைப்பார்த்து, எங்கெந்த இடங்களில் பின்னணி சங்கீதம் வேண்டும்? எத்தனை அடி வேண்டும்?" எங்கெந்த இடங்களில் பின்னணி கீதமும் வசனமும் சேர்ந்துவர (Re-recording) செய்யவேண்டும் என்பதையும் சொல்லி, தவறுகள் இருந்தால் திருத்தி அமைத்துக்கொடுத்தும், பின்னணிகீதம் பதிவு செய்யப்பட்டதும், அவைகளை அதனதன் இடத்தில் பொருத்தி, வசனங்களின் ஒலியில் ஏதேனும் தாழ்வு இருந்தால் அவைகளையும் ஒலிப்பதிவாளருக்குச் சொல்லி, அந்த துண்டையும் சரி செய்துகொள்ளவேண்டும். இப்படிச் செய்வதால் ஒலிப்பதிவாளருடைய தவறுகளும் மறைக்கப்படுகிறது.

எடிட்டரும் ரஸாயன நிபுணரும்

இப்படி எல்லாம் வேலை முடிந்து ரிலீஸ் பிரிண்ட் எடுக்குமுன் எடிட்டர் எங்கெந்த இடங்களில் பகல் காட்சி எங்கெந்த இடங்களில் இரவு காட்சி? என்பதை காப்பி அச்சடிக்க லேபரட்டரி அளிக்கும் நிபுணருக்கு தகவல் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதன் பின் எடுக்கப்படும் காப்பியைப் போட்டுப்பார்த்து ஏதேனும் குறைகள் தென்பட்டால் அதையும் சரி செய்துகொள்ளவேண்டும்.

எடிட்டரும் அவர் கடமையும்

ஒரு எடிட்டருக்கு நிதானமாய் யோசிக்கும் தன்மை வேண்டும். ஆனால் மந்தபுத்தி கூடாது. சுறுசுறுப்பு வேண்டும். பதட்டம் கூடாது. வாதிக்கும் தன்மை வேண்டும். ஆனால்விதண்டாவாதம் கூடாது. பரந்த உலகனுபவம் வேண்டும். ஆனால் எதிரியும் புத்திசாலிதான் என்பதை ஒப்புக்கொள்ளும் தன்மை வேண்டும். எடிட்டர் கொஞ்சம் அஜாக்ரதையாக இருந்தால் நல்ல படத்தையும் மோசம் என்று சொல்லும்படி செய்துவிடலாம். கெட்டிக்காரத்தனமாயும், ஜாக்கிரதையாக இருந்தாலும்,நல்ல படத்தை மெருகு இட்டவும் முடியும். ஆனால் இவை எல்லாவற்றிற்கும் மேலாய் தான் கையாளும் நளின வஸ்துவான பில்மில் கோடு விழாமலும், அதற்கு வேறு எந்த விதமான ஆபத்தும் ஏற்படாமல் பாதுகாக்கும் பய பக்தியும் வேண்டும். சற்று அலட்சியமாய் இருந்தால் படம் மழை பெய்யும் காட்சிதான் சுலபமாய் கிட்டும்.

கதை எழுதுபவர், வசன கர்த்தா, ஆர்ட் டைரக்டர், மேக்-அப் நிபுணர், ஆடையணி நிபுணர், ஒளிப்பதிவாளர், ஒலிப்பதிவாளர், நடிகர்கள், சங்கீதக்காரர், டைரக்டர், முதலாளி உள்பட எல்லோருடைய தலை எழுத்தும், இவர் கையில்தான் உள்ளது.

மிகவும் நேர்த்தியான முறையில் தயாரிக்கப்படும்

மித்திரனின்

விக்ருதி வருஷத்திய பஞ்சாங்கம்

மார்ச்சு மாதம் இரண்டாம் வாரம் வெளிவரும்.

மொத்த வியாபாரிகளுக்கு பஞ்சாங்க காப்பிகள் கீழ்க்கண்ட விற்பனை விகிதங்களில் சப்ளை செய்யப்படும்.

100 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அனுப்பும் ஆர்டர்களும் நூற்றுக்கணக்கில்தான் இருக்கவேண்டும்.

சப்ளை விகித விலை விவரம் :

100 காப்பிகளுக்கு		ரூ 24.
200 ,,	100-க்கு	ரூ. 23.
300 ,,	,,	ரூ 22.
500 ,,	,,	ரூ. 21.
1000 அல்லது மேற்பட்ட காப்பிகளுக்கு	,,	ரூ. 20.

ஆர்டர்களை சுதேசமித்திரன் ஏஜண்டுக்கோ அல்லது நேரில் ஆபீஸுக்கோ அனுப்பி பதிவு செய்துகொள்ளவும்.

வி. பி கிடையாது. முன் பணம் அனுப்பவேண்டும்

பஞ்சாங்கம் ஸ்ரீ கே. எஸ். ராமமூர்த்தி சர்மாவால் கணிக்கப்பெற்றது.

தனிப்பிரதி விலை 4 அணா.] [தபால் மூலமாக விலை அணா 5.



ஸங்கீத பாரிஜாதகம்

பண்டித கிருஷ்ணமாச்சார்யா

स्वरः पश्चान्निवृत्तश्चेत् कोमलादिभिरीरितः ।
71. एकश्रुतिपरित्यागात् स्वरः कोमलसंज्ञकः ।
श्रुतिद्वयपरित्यागात् पूर्वशब्देन मन्यते ॥

ஸ்வர பஸ்சாந்நிவ்ருத்தஸ்சேத்
கோமளாதிபி ரீரித:3 4
ஏகச்ருதி பரித்யாகாத்3
ஸ்வர : கோமள ஸம்ஜ்ஞக:
ச்ருதி3த்வய பரித்யாகாத்3
பூர்வசப்3தே ந மந்யதே

ஒரு ஸ்வரம் தனக்குப் பின்னுள்ள சுருதிகளில் இறங்கியிருப்பின் (ஒன்று, அல்லது இரண்டு சுருதிகளைத் தழுவியிருப்பின்) கோமளம் முதலிய பெயர்களால் வழங்கப்படுகின்றது. அதாவது... ஒரு ச்ருதியை விடுவதால் 'கோமளம்' என்ற பெயரையும் இரண்டு சுருதிகளை விடுவதால் 'பூர்வம்' என்ற பெயரையும் அடைகின்றது.

72. स्वरः पश्चान्निवृत्तः सन् कोमलादित्वमेति चेत् ।
तदुत्तरस्वरे गच्छन् तीव्रतादिकमेति चेत् ॥
73. यस्मात् शुद्धस्वरादेवं प्राप्तसंज्ञाः श्रुतीर्जगुः ।
साधारण्यं भवेत्तेषां अन्यश्रुतिगतत्वतः ॥

ஸ்வர : பஸ்சாந்நிவ்ருத்த : ஸந்
கோமளாதி3த்வமேதிசேத
தது3த்தரஸ்வரே க3ச்ச2ந்
தீவ்ரதாதி3க மேதி சேத்
யஸ்மாத சு3த்34ஸ்வராதே3வம்
ப்ராப்தஸம்ஜ்ஞா ச்ருதீர்ஜகு:
ஸாதா4ரண்யம் ப4வேத் தேஷாம்
அந்யச்ருதி க3தத்வத:

ஒரு சுத்தஸ்வரமானது தனக்குப் பின்னுள்ள (கீழுள்ள) சுருதிகளைத் தழுவியிருப்பின் கோமளம் முதலிய பெயர்களையும், அதே ஸ்வரம், தனக்கு முன்னுள்ள (மேலுள்ள) சுருதிகளை அடைந்திருக்குமேயானால் தீவ்ரம் முதலிய பெயர்களையும் அடைகின்றது என்று கூறினோம். இவ்வாறு அந்தஸ்வரமானது தனக்கு முன் பின்னுள்ள அந்ய ஸ்வரங்களின் சுருதிகளைத் தழுவியிருப்பதால் அது ஸாதாரணம் என்று கருதப்படுகிறது.

74. साधारणो रिस्तीव्रस्यादिति सूरिविनिश्चयः ।
साधारणान्तरौ गौस्तः तीव्रतीव्रतराविति ॥

ஸாதா4ரணோ ரிஸ்தீவ்ரஸ்யாதி3தி
ஸூரிவிநிஸ்சய:
ஸாதா4ரணாந்தரௌ கௌ3ஸ்த:
தீவ்ர தீவ்ரதராவிதி

75. तथा तीव्रतमो गोपि मृदुर्म इति कीर्तितः ।
साधारणान्तरौ मौस्तस्तीव्रतीव्रतराविति ॥

ததா2 தீவ்ரதமோ கோ3பி
ம்ருது3ர்ம இதி கீர்த்தித:
ஸாதா4ரணாந்தரௌ மௌஸ்த
ஸ்தீவ்ர தீவ்ரதராவிதி

76. मश्च तीव्रतमोप्युक्तो मृदुः प इति पण्डितैः ।
साधारणो धस्तीव्रः स्यादिति प्रोक्तं मुनीश्वरैः ॥

மஸ்ச தீவ்ரதமோப்யுக்தோ
ம்ருது3: ப இதி பண்டி3தை:
ஸாதா4ரணோ த4ஸ்தீவ்ர:
ஸ்யாதி3தி ப்ரோக்தம் முநீஸ்வரை:

77. साधरणः काकलीति तथाकैशिक इत्यपि ।
तीव्रतीव्रतरस्तीव्रतमोऽप्युक्तो मनीषिभिः ॥

ஸாதா4ரண: காகலீதி
ததா2 கைசிக இத்யபி
தீவ்ர தீவ்ரதரஸ் தீவ்ரத
மோப்யுக்தோ மநீஷிபி4:

78. सकल्पत्वान्मृदुर्निः स इति तीव्रतमो भवेत् ।

ஸகல்பத்வாந்ம்ருது3ர்நி: ஸ
இதி தீவ்ரதமோ ப4வேத்

ஸாதாரண ரிஷபமே, தீவ்ரரிஷபமாகின்றது என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். ஸாதாரண காந்தாரம், அதனையடுத்த காந்தாரம் இவவிரண்டும் முறையே 'தீவ்ர—க' 'தீவ்ரதர—க' என்ற பெயர்களையடைகின்றன. தீவ்ரதம காந்தாரமே, ம்ருதுமத்யமமாகின்றது. ஸாதாரண மத்யமம், அதனையடுத்துள்ள மத்யமமும் 'தீவ்ர—ம' 'தீவ்ரதர-ம' என்று முறையே வழங்கப்படுகின்றன. 'தீவ்ரதம மத்யமம்' ம்ருதுபஞ்சமம் என்று அறிஞர்களால் கூறப்படுகின்றது. ஸாதாரண தைவதத்தைத் 'தீவ்ர—த' என்பர். ஸாதாரண நிஷாதம், காகலி நிஷாதம், கைசிக நிஷாதம் இவைகள் முறையே 'தீவ்ர-நி' 'தீவ்ரதர-நி' 'தீவ்ரதம-நி' என்று கூறப்படுகின்றன. தீவ்ரதம நிஷாதம் ம்ருது ஷட்ஜமும் ஆகின்றது.

79. एवं शुद्धस्वराणां च विकृतानां च लक्षणम् ।
सङ्गीतशास्त्रवेत्तारः प्रवदन्ति मुनीश्वराः ॥

ஏவம் சு3த்34ஸ்வராணாம் ச
விக்ருதாநாம் ச லக்ஷணம்
ஸங்கீ3த சாஸ்த்ர வேத்தார:
ப்ரவத3ந்தி முநீஸ்வரா:

இவ்வாறு சுத்தஸ்வரங்கள், விக்ருத ஸ்வரங்கள் இவைகளுடைய லக்ஷணத்தை, ஸங்கீத நூலறிவாளிகளான முனிவர்கள் கூறுகின்றனர்.

இந்நூலில் கூறியுள்ள சுருதிகள், ஜாதிகள், சுத்த, விக்ருத—ஸ்வரங்கள் இவைகளை நன்கு அறிவதற்காக இத்துடன் ஒரு அட்டவணையும் சேர்க்கப்பட்டுளது:—

சுத்த - விக்ருத - ஸ்வரங்களின் அட்டவணை

★

	சுருதிகளின் பெயர்கள்	சுத்தஸ்வரங்கள் ஜாதிகள்.	விக்ருத — ஸ்வரங்கள். கோமளம் முதலியவை.	தீவ்ரம் முதலியவை.
1	தீவ்ரா	தீப்தா .	. .	தீவ்ர நி
2.	குமுத்வதீ	ஆயதா .	. .	தீவ்ரதர — நி
3	மந்தா	ம்ருது .	. .	தீவ்ரதம — நி
4.	சந்தோவதீ	மத்யா ஸ	. .	. .
5	தயாவதீ	கருணா .	பூர்வ — ரி	. .
6	ரஞ்ஜநீ	மத்யா .	கோமள — ரி	. .
7	ரதிகா	ம்ருது ரி	பூர்வ — க	. .
8	ரௌத்ரீ	தீப்தா .	கோமள — க	தீவ்ர — ரி
9	க்ரோதா	ஆயதா க	. .	தீவ்ரதர — ரி
10	வஜ்ரிகா	தீப்தா .	. .	தீவ்ர — க
11	ப்ரஸாரிணீ	ஆயதா .	. .	தீவ்ரதர — க
12	ப்ரீதி	ம்ருது .	. .	தீவ்ரதம — க
13	மார்ஜநீ	மத்யா ம	. .	அதிதீவ்ரதம — க
14	க்ஷிதி	ம்ருது .	. .	தீவ்ர — ம
15	ரக்தா	மத்யா .	. .	தீவ்ரதர — ம
16	ஸந்தீபநீ	ஆயதா .	. .	தீவ்ரதம — ம
17	ஆலாபிநீ	கருணா ப	. .	. .
18	மதந்தீ	கருணா .	பூர்வ — த	. .
19	ரோஹிணீ	ஆயதா .	கோமள — த	. .
20	ரம்யா	மத்யா த	பூர்வ — நி	. .
21.	உக்ரா	தீப்தா	கோமள — நி	தீவ்ர — த
22.	க்ஷோபிணீ	மத்யா நி	. .	தீவ்ரதர — த

நவரஸ நந்தவனம்

'கனல்'

3

அகப்பொருள் நாடகம்

★

நாவியரசர்கள் மகா சாமர்த்தியசாலிகள் இல்லாவிட்டால் நிகழக் கூடாததொன்றை நிகழ்கின்றதாகக் கூறி, மக்கள் மனத்தைப் பண்படுத்தி உயர்த்தும் ஆற்றலை அவர்கள் பெற்றிருக்கமுடியாது 'இல்லது இனியது, நல்லது' என்று மூன்றுவகைப் படுத்தி இல்லது என்னும் வகைக்குள் அகப்பொருள் நாலை நிறுத்தி அதன் மூலம் உயர்ந்த பண்பாடுகளையும் சிருங்கார ரஸத்தையும் அளித்த பழம் புலவர்கள் உண்மையிலே தமிழா தம் பெருமைக்குக் காரணகாத்தர் ஆவார்கள்

அக்ப்பொருள் தனிப்பட்ட தான ஒரு குடும்பத்தோடு சம்பந்தமுடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதற்காகத் தோன்றியதன்று உயர்ந்த மனோபாவனையோடு கற்பனையுடன் கலந்துவெளியிட்ட உயர்ந்த நிகழ்ச்சிகளைத்தான் அகப் பொருள் வெளியிடுகிறது. அகப்பொருள் நாலுக்குள் நுழைந்து சுவைகாண விரும்புவோருக்கு உயர்ந்த மனோபாவனை வேண்டும் என்பார்கள் பெரியோர்கள் ஏனென்றால் அகப்பொருளின் கருத்துக்கள் நுண்ணியவை உள்ளம் உள்ளத்தோடு பழகும்போது வெளியே மின்னும் தூய அன்பின் ஒளியே அதன் உறுதிமார்க்கம் அதைத் தேவாமுதமென இலக்கியச் சுவை காணும் பெரியோர்கள் கருதுவார்கள் குறுந்தொகையின் சில ரஸமான கருத்துக்கள் இங்குத் தரப்படுகின்றன அவை சிருங்காரத்தின் பெருமையைக் காட்டுகின்றன.

• • •

அவனுடைய முகத்தில் என்றும் காணும் ஓர் அமைதி அன்று தென்படவில்லை அவனுடன் நெருங்கிப் பழகும் அந்தரங்க சகா அவனை ஊடுருவிப் பார்த்தான்! 'எங்கே போயிற்று பழைமையிலே? அவன் தன் அமைதியிழந்து அறிவற்றவனாய் ஏதேதோ பிதற்றுகிறானே. அதன் காரணம் என்ன?' என்பது அவனுக்குப் புரியாத புதிராகிவிட்டது ஆகவே அவனை மிகவும் அன்புடன் நோக்கி நண்பா! உன்னை நீ இழந்துவிட்டாய் என்பது எனக்குத் தெரிகிறது! நான் அதற்காக மிகவும் வருந்துகிறேன் ஆனால் உன்னை நீ யாரிடம் அப்படி இழக்கும்படி நேர்ந்தது? அஞ்சாதவீரன் ஆயிற்றே நீ! யாரிடமோ அடிபணிந்து விட்டாயே! என்றான்

'மேலும் நீ ஏதாவது கூறப்போகிறாயா? இல்லை இவ்வளவுதானா?......' என்றான் அவன் தன் சகாவை ஏளனமாய்ப் பார்த்தவண்ணம்.

நண்பனான அந்தப் பாங்கன் கொஞ்சமும் பதறாமல், 'ஏன் இவ்வளவுதான்! தயைசெய்து நான் கேட்டதற்குப் பதில்சொல்லு' என்றான்

'என் முகமே உனக்குப் பதில் சொல்லியிருக்குமே! என் அனல் மூச்சின் ஒவ்வோரணுவும் காற்றில் கலந்துவந்து உன் காதில் என் நிலையைப் பறைசாற்றவில்லையா? சரி. கேள். சொல்கிறேன்

பூப்போன்ற கண்கள்; பொன்னை நிகர்த்தமேனி. அதன் நறுமணம் தாயமலரின் மணத்தையும் மிஞ்சிய தெய்விகத் தன்மையுடையது விதி எனக்களித்த பரிசுதான் அத்தலையும் ஆனால்......!"

'ஆனால்...?'

'அதை இழந்து தவிக்கிறேன் இப்போது...?

'அதை நீ இழந்தாயா? அல்லது அது உன்னை இழந்ததா?'

'இருவரும்தான் ஒருவரை ஒருவர் இழந்து தவிக்கிறோம...'

நீயா இப்படிப் பேசுகிறாய்? என் நண்பனா இப்படிப் பேசுகிறான்......! எனக்கு வெட்கமாக இருக்கிறது உன் பேச்சு!"

"நண்பா! என் நிலையை முழுவதும் அறிந்தால் நீ வெட்கமா அடைவாய்! மாட்டாய்! உடனே ஓடிப்போய்...!'

"சரி அப்படியானால் அந்த நிலையை ஆதியோடந்தமாய்ச் சொல்லித்தான் விடேன்!"

இதோ பார் நண்பா! என்னைக் கேலி செய்யாதே! நான் இப்பொழுது கையற்றவனாய்விட்டேன்! என்ன செய்வேன்! அவள் கானல் முனை போன்ற கூரிய பற்களை உடையவள்! வளைகளணிந்த மலர்க் கரங்களை உடையவள்! என்னை இந்த நிலையில் நிறுத்தியவள் அவளேதான்! என் பேரில் யாதொரு குற்றமுமில்லை மானைத் தொடர்ந்து நான் சென்றேன் அப்பொழுதுதான் அவளைப் பார்த்தேன்! நீண்ட பல பிறப்புக்களில் அவளுக்கு என் உள்ளம் இடம் அளித்து வந்திருக்கிறது என்பதை ஒரு நொடியில் உணர்ந்தேன்! அவளைப் பிரிந்த பிரிவால்தான் இன்று இவ்வாறு...!"

"நண்பா! இப்பொழுது உன் நிலை எனக்கு நன்றாகத் தெரிகிறது! ஆனால் காமம் என்பது மிகவும் பேதைமை உடையது மிகவும் வெறுக்கத் தக்கது தருந்தவரிடத்தில் அது சென்றால்தான் நலம் தரக்கூடும். இல்லையேல்...",

"பாங்கனே! நீயே இவ்வாறு கூறினால் நான் என் சொல்வேன்! பாறை மீது ஒருவன் வகையின்றி இருந்த

கதையாக இருக்கிறது என் நிலை. அவன் கையற்றவன். போதாக்குறைக்கு வாயில்லாதவனும்கூட வெண்ணெயைக் காத்திருந்தான் அவன் சூரியனோ கொதிக்கிறான். அதன் உஷ்ணத்தால் வெண்ணெயோ உருகுகிறது கையில்லையே, என்ன பண்ணுவான்? மற்றவர்கள் எவரையாவது கூப்பிட்டு அதை எடுக்கச் செய்யலாமென்றாலோ, வாயில்லையே, பேச! இந்நிலையில் பாறையில் வெண்ணெய் உருகிப்பரந்தோடுகிறது! நான் பெற்ற நோயும் அதே போன்றதுதான்! கையில்லாதவன் போல் செயலில்லாதவனானேன்; வாயற்றவன்போல் வகையற்றவனானேன்! வெண்ணெய்போல் துன்பம் பரவுகிறது!..." என்றான்.

தலைமகனது இந்தச் சோகம் புதைந்த மொழிகளைக்கேட்டும்கூடப் பாங்கனது உள்ளம் அதை ஒப்பவில்லை 'தலைமகன் நன்றாக ஆலோசித்துத் தக்க இடத்தில் தான் மனத்தைப் பறிகொடுத்திருக்கிறானா, அல்லது அது பொருந்தாத செயலா, என்பதுபற்றி அவனால் உண்மையை விரைவில் ஊகித்துவிட முடியவில்லை.

ஆகவே அவன் கூறினான்.

"மன்னனே! உன் உள்ளமும் உடைந்தது என்றால், உடையா நெஞ்சை நான் இனி எங்கே காண்பேன்!" என்றான் தலைமகன் அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. அவனுடைய தூய பிரேமையின் முன் பிரிவின் வெப்பத்தின் முன் அவ்வார்த்தைகள் காதில் விழாததிலும் 'வியப்பில்லை தன் நிலையில் மேலும் ஏதோ கூறிக்கொண்டே சென்றான்!

"வெண்மையான நிறத்தையுடையதொரு பாம்பு; உருவத்திலே மிகவும் சிறிது; பலத்திலோ மிகவும் சாமானியமானது! ஆனால் யானையோ உருவத்தில் உயர்ந்தது! வலியிலும் மேம்பட்டது ஆயினும், அந்தச் சிறிய அரவின் வாய்ப்பட்டுப் பெரிய களிறு அல்லலடைந்துவிடும் அல்லவா? இவளோ வயசிலே சிறியவள்! மெல்லியலாள்! களிறனைய என்னைத் தன் கண் விஷத்தால் எங்கோகொண்டு போய்விட்டாள்! நான் என் செய்வேன்!"

அவனது இந்த வார்த்தைகள் பாங்கனின் மனத்தில் சற்றே மாறுதலை உண்டுபண்ணாமல் இல்லை ஆனாலும் பாங்கன் அவனுக்காகத்தான் அது விஷயமாய்ச் செய்யவேண்டிய பேருதவிக்கு இன்னும் தயாராகாமல் இருந்தான்! மகனுக்கு உற்ற துணைவனாய், உயிரின் மற்றொரு அம்சமாய் உள்ள அந்தப் பாங்கன் ஒன்றும் உறுதியாகத் தன் மனத்திற்கு ஒத்த நன்மொழிகளைக் கூறாத காரணத்தால் தலைவனது உள்ளம் மிகவும் ஏங்கியது. தனக்குள்ளேயே கூறிக்கொண்டான். "பேதை நெஞ்சே! உன் அறியாமையைப் பற்றி நினைத்தால் எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது பொருள் இல்லாதவன் போகம் எல்லாம் அடைய ஆசைப்படுவதுபோல், பெறுவதற்கு அருமையான ஒன்றைப் பெற விரும்புகின்றாய் நீ! தலைவி எவ்வளவு நல்லவளோ, எவ்வளவு இனிமையுடையவளோ. அவ்வளவு அருமையும்உடையவள் என்பதைஅறியாமல் இருக்கிறாயே!" என்று கூறிக்கொண்டு தரையில் சாய்ந்தான் அவனுடைய தாபத்திற்கு அவனை வருத்தும் சக்திதான் உண்டு. ஆனால் அவனை மாற்றும் சக்தி கிடையாது அல்லவா? எண்ணத்தால் அவன் வருந்தப்பின் வாங்கமாட்டான்! எண்ணத்தை இனி மாற்றுக்கொள்வதென்பதும் நடவாது!" என்பதைப் புரிந்துகொண்டான் பாங்கன்!

நண்பனின் செயலில் நியாயமும் இயற்கை நிலையும் அமைந்திருப்பதை அவனது மனம் வற்புறுத்திக்

கூறவே தலைவனின் அருகில் சென்று "சரி அவள் எங்கிருக்கிருள்?" என்ருன்.

"தோழனே! அதோ பார்! பெரிய மலையிலிருந்து ஓர் அருவி வீழ்கிறதல்லவா? அதன் அருகே மலர்கள் செறிந்த ஒரு சோலையும் தெரிகிறது பார்; அந்த நந்தவனத்திலுள்ள சிறிய குடிசையில் உள்ள சிறு பெண் அவள் பருத்த தோள்களையுடையவள்; தண்ணீரைவிடத் தண்மை நிறைந்தவள் என் வலியோ நெருப்பை ஒத்தது என்பது உனக்கே தெரியும்! ஆம்! தண்ணீர் போன்ற அவளது சாயல் அனலையொத்த என் வலிமையை அழித்துவிட்டது!" என்ருன் தலைமகன்

'சரி; கலங்காமலிரு உங்கள் இருவருடைய அன்பும் தூயதாளுல், முன்னர்ச் சேர்த்துவிட்டவிதி பின்னும் சேர்த்துவைக்கும்,' என்று முடிவாகக் கூறினன் பாங்கன் அதன் பின் அவன் முயற்சியால் தலைவியைக் காணும்பேறு தலைவனுக்குக் கிட்டியும் விட்டது

• • •

தன்னந் தனிமையாய்க் கன்னத்தில் கையூன்றியவாறு ஒரு மேடையில் தலைமகள் உட்கார்ந்திருந்தாள் அப்போது ஊடுருவிய பார்வையும், வாழ்வின் எதிர காலத்தை வகுக்கும் திட்டமும் அவளைச் சேர்ந்திருந்தன!

'அவர் திரும்பவும் வருவாரோ? என்னை வந்து மணம்செய்து கொள்வாரோ? வானேங்கிவளர்ந்த மரங்களையும், எங்கு பார்த்தாலும் பலா மரங்களையும், அதனில் தொங்கும் கனிகளையும் உடைய, செழித்த நாட்டுக்குத் தலைவரான அவர் திரும்பவும் வந்து என்னை அடைவாரோ!

மணம் முடித்துக்கொள்ள விரைவில் வருவேன்' என்று கூறிப் போனவர், வாக்களித்துச் சென்றவர் இன்னும் வரவில்லையே! ஐயோ! மன்றத்தில் தெய்வம் உண்டல்லவா? கொடியவரை அது வருத்தும் என்று சொல்வார்களே! ஆ! தெய்வமே! என் காதலரை ஒன்றும் செய்துவிடாதே அவர் கொடியவர் அல்லர்! நான் அவரை விரும்பினேன்; அதனுல் பசலைபூத்த மேனியள் ஆனேன் என் தோள்களும் அதன் காரணமாய் நெகிழ்ந்தன. ஆனுல் அவர்மேல் குற்றம் ஏதும் இல்லை......!"

என்றுதான் அவள் தனக்குள் கூறிக்கொண்டிருந்தாள் கற்புக்கு ஒரு திலகமாக வாழவிரும்பும் அவள், உண்மையில் அவளது தூய காதலைப் பெற்ற அவனைநினைத்த அந்த நினைப்பிலேயே பேரானந்தம் உற்ருள்! ஆனுல் பிரிவு தாங்கவில்லை! அப்படி ஒன்றும் நீண்ட நாளின் பிரிவும் ஏற்பட்டுவிட வில்லை ஆயினும், கணநேரம் கூடக் கருத்தில் சலனம் ஏற்படாமல் இல்லை. "சொன்ன சொல்லைக் காக்கும் தன்மை தலைவனுக்குண்டு என்பது அவள் நம்பிக்கை ஒரு சமயம் அவ்வாறு அவர் அதைக் காப்பாற்ருவிட்டாலும்—அவர் நன்ருக இருக்க வேண்டும்" என்று அவள் நினைப்பதில்தான் அவள் கற்பின் பூரணபாகமும் பரிணமிக்கிறது. தெய்வத்தையும் கலக்கத்துடன், பய பக்தியுடன் வேண்டிக்கொள்கிருள் அவனைக் காக்கும்படி.

அவளுக்கு அப்பொழுது இன்னெரு கலக்கமும் ஏற்பட்டது அது அவளைப் பலமாகத் தாக்கவும் செய்தது. திண்ணமாய்த் தலைவன் தன்னிடம் வருவான் என்பதை நம்ப முடியாதபடி அவள் மனத்தில் முளைத்த அந்

தச் சந்தேக விதையே அவளுடைய அந்தக் கலக்கத்துக்குக் காரணம்.

"அவர் ஒரு கள்வர்!" என்று அவள் வாய் முணுமுணுத்தது அப்போது

மனம் மேலும் அவளைக் கிளறியது "ஆம், அவர் கள்வர்தாம்! என் மனத்தைக் கவர்ந்தார்; என் உடல் நலத்தைக் கவர்ந்தார். அழகையெல்லாம் கொள்ளை கொண்டார் காட்டிலே நறுமணம் கமழும் நந்தவனத்திலே அவரைக் கண்டேன்! என் நிறை எப்படியோ அழிந்தது! என் நலத்தைத் திருடிய அக்கள்வர் 'அதை ஒப்புக் கொள்ளாமல் 'இல்லை' என்று ஒரு கால் சாதித்துவிடுவாரோ நாங்கள் காந்தருவம் புரிந்துகொண்ட அவ்வேளையில் இனிய சொற்களால் எனக்கு உறுதியளித்தாரே அதை 'இல்லை' என்று கூறிவிட்டால் அப்புறம் நான் என்ன செய்யமுடியும்? அந்தோ! அப்பொழுது எம்மைக் கண்டவர் வேறு எவரும் இல்லையே! நான் எப்படிக் கூறி அவரை மெய்ப்பிப்பேன்...' என்று நினைப்பின் பாரம் நெஞ்சை அடுத்தவே சிறிது நேரம் அசைவற்ற நிலையிலே இருந்தாள் அவள் திடீரென்று அதற்கு விமோசனம் போன்ற ஓர் ஆறுதல் மனத்தில் லேசாகத் தென்படலாயிற்று.

"அப்படியே அவர் சாதித்தாலும் என்னிடம் அவர் தப்பமுடியாது அவருக்கு உண்மையை, உணர்த்தும் வழி எனக்குத் தென்பட்டுவிட்டது நானும் அவரும் காந்தர்வம்புரிந்த காலத்தில்குருகுஒன்றுமரக்கொம்பில் அமர்ந்திருந்தது அது என் பக்கமே உறுதியாகச் சாட்சி சொல்லும்! அவரைக் கள்வர் என்று கூறி எனக்காக வாதாடும் நான் இனி கவலைப் படவேண்டாம்..." என்று ஆறுதல் கூறிய மனத்தை அவள் மெச்சிப் பாராட்டினுள் ஆனுல் அது அப்பொழுது வேறென்றைக் கிறிவிட்டது!

"ஆமாம்! குருகு மரக் கொம்பில் இருந்தது உண்மைதான்! ஆனுல் அது ஓடுகின்ற நீரில் வருகின்ற மீன்களை அல்லவா எதிர்பார்த்திருந்தது? உயிரைக்கொன்று தின்று உடலைப் பேணி வளர்க்கும் கொக்கு எப்படி நன்மை செய்யக்கூடும்? அவரைச் சேர்ந்த காலத்திலோ கொக்கைத் தவிர்த்து வேறெதுவும் கண்ணில் தென்படவில்லையே!"

இவ்வாறு தன்னைத்தானே விண்டு கொண்டு முடிவு காணுமல் தவித்துக் கொண்டிருந்த தலைவியின் முன் அவளது அந்தரங்க சகி வந்தாள்.

"என்ன சமாசாரம்? ஏன் இப்படிக் கலங்கித் தவிக்கிருய்!" என்று அவள் கேட்டுக்கொண்டிருக்கவில்லை. அவளை ஒரு முறை பார்த்த பார்வையிலேயே அவள் நிலையைப் புரிந்து கொண்டுவிட்டாள்.

"தலைவி! கவலைப்படாதே! நான் எல்லாம் அறிவேன். அவர் உன்னை விரைவில் வந்தடைவார்" என்று உடனே, அவள் அளித்த ஆறுதல் மொழிகள் தலைவிக்குத் தேவாமுதம் போல் இருந்தன என்றுதான் சொல்லவேண்டும் 'வாழ்தல் அன்ன காதல், சாதல் அன்ன பிரிவு' என்பதை அந்தத் தோழி நன்கு அறிவாள் மேலும் தலைவியிடம் அவளுக்கு அளவற்ற அன்பும், மதிப்பும் உண்டு தலைவியின் நிறையைக் கவர்ந்தவன், உண்மையில் ஒரு தூய வீரனுகத்தான் இருப்பான் அது அவள் நம்பிக்கை. அதனுல்தான் ரத்னச் சுருக்கமாக ஆறுதலைக் கூறி விட்டாள்.

• • •

அவன் கையில் தழையும் மலரும் இருந்தன! அவன் மனத்தில் தாபம் மிகுந்திருந்தது அவன் அதிவேகமாய் அங்குவந்தான்......எதிரே நின்று அவனைப்பார்த்து, "நீ யார்?" என்ருள் தோழி!

"நான் யாரா? உன் தலைவியைக் கேள்? தடாகத்தில் அன்று பூக்கொய்த உன் தலைவியைக் கேள்! அவளும் ஒரு சமயம் என் உள்ளம் உணர்ந்தாளோ, இல்லையோ! ஆனுல் என் உள்ளம் பள்ளியானைபோல் உயிர்த்து அவள் முன்னிலையிலேயுள்ளது!" என்று கூறித் தழையையும் மலரையும் நீட்டினுன்

"ஓகோ! மிகவும் நல்லது...ஆனுல் ...எங்கள் மலை காந்தளால் நிறைந்தது! நீங்கள் கொணர்ந்துள்ள தழையை ஏற்றுக்கொள்வதற்கில்லை" என்ருள் தோழி.

"என் குறையைத் தயைசெய்து மறுக்காதே! காலையிலிருந்து விடியல் வரை ஒவ்வொரு நாளும் தலைவியை நினைந்து வருந்தும் என் நிலை பொய்யாகுமா?" என்று கூறிய தலைவனின் மொழிகள் தோழியின் உணர்ச்சியில் நம்பிக்கையை அளித்துவிட்டன. தலைவியிடம்சென்று. "தோழி, நீ அவனைக் கருதியிருப்பதை அவன் அறியான் 'வெப்பத்தால் சுருண்ட காலைபோல், உன் நலத்தை நினைந்து வேதனையடைகிருன்" என்று கூறி, அவளது உடன்பாட்டைப் பெறுகிருள்:

"உண்மையில் நீங்கள் இருவரும் இணைந்த அன்பினர்! ஆகையினுல் ஒன்றியிருந்து ஊழியில் வாழுங்கள்!" என்கிறது தோழியின் திருவாய்

பாங்களின் உதவியுடன் பாங்கியின் உதவியும் தனக்குக் கிடைத்துவிட்டதை எண்ணி எண்ணி அவள் அடைந்த உவகைக்கு அளவில்லை. அவள் வாழ்த்துக்களுக்கு அவர்கள் பெரிதும் பாத்திரமானுர்கள்.

• • •

பழந் தமிழ்ச் செய்யுட்களில் ஏராளமான அகப்பொருட் கருத்துக்கள் திகழ்கின்றன என்பதும், அவை மிகவும் மேலான நிலையில் விளக்கப்பட்டிருக்கின்றன என்பதும் மேற்கண்ட விளக்கத்தின் மூலம் ஓரளவு அறிந்துகொள்ள இயலலாம் சிறுகதைகள் போலவும் கற்பனைக் கட்டுரைகள் போலவும் தலைமக்கள் உறவு முறை விளக்கப்படுகிறது. தலைவி எனப்படும் அங்கங்கை தலைமைப் பண்பு நிறைந்தவள். 'கற்பும் காமமும். நற்பாலொழுக்கமும்" உடையவள் தலைமகன் எனப்படுபவன் ஆண்மையும் தூய்மையும் உடையவன். கவிஞாகளின் அகப்பொருள் நாடகத்துக்குக் கதாநாயக, நாயகிகள் இவ்விருவருமேயாவார்கள் ஒருமைப்பாடுள்ள குலமும், குணமும் அழகும் அறிவும் அன்பும், பாசமும் உடையவர்கள் அவ்விருவரும். அதனுல்தான் அவர்கள் தொடர்பு உலகத்துக்கே நல்வழி காட்டும் தூய காவியமாக மலர்வதாகிறது அத்துடன் ரஸிகர்களின் கலை ஞானத்திற்கும் தகுந்த விருந்தை அளிக்கிருர்கள் அந்தப் பாத்திரங்கள்! அத்தனைக்கும் மூலமான அக்கவிஞர்களின் கலையுள்ளம் எண்ணி எண்ணிப் பாராட்டத்தக்கதேயல்லவா?

ஸ்டர்லிங் பிராந்திய டாலர் வர்த்தகம்

★

ஜான் கிங்ஸ்லி

(நிதி பொருளாதார விஷயங்களில் பிரபல விமர்சகர்)

★

அண்மையில் கொழும்புவில் நடைபெற்ற காமன்வெல்த் அந்நிய மந்திரிகள் மகாநாட்டில் விவாதிக்கப்பட்ட பல்வேறு விஷயங்களுள் டாலர் பிரச்னைக்கான பரிகாரமும் அடங்கியிருந்தது ஆகவே ஸ்டர்லிங் பிராந்தியத்தின் டாலர் பிரச்னை என்னவென்பதை புள்ளி விவரங்களுடன் நான் இக்கட்டுரையில் விளக்குகிறேன்.

1950 வருடம் ஜூன் மாதத்துடன் முடிவடையும் வருடத்தில் பிரிட்டன் தனது டாலர் மார்க்கட்டுகளுக்கான ஏற்றுமதிகள் மூலம் 70 கோடிடாலர்கள் சம்பாதிக்கலாமென எதிர்பார்க்கிறது கடந்த வருடம் டாலர்ஏற்றுமதிகளின்மூலம் பிரிட்டன் சம்பாதித்த தொகை சுமார் 70 கோடி டாலர்களாகும். 1949 வருடத்தில் அமெரிக்க வாத்தகத்தில் ஏற்பட்ட வியாபார மந்தமும், சில பிரிட்டிஷ் ஏற்றுமதி சரக்குகளின் குறைந்த டாலர் விலைகளுமே டாலர்வருமானம் குறைந்ததற்கு காரணமென கூறப்படுகிறது

இருந்தபோதிலும் 1951-52 வருடத்தில் டாலர் நாடுகளுக்கான பிரிட்டிஷ் ஏற்றுமதிகளின் மதிப்பு 85 கோடி டாலர்களாக உயர்ந்துவிடுமென நம்பப்படுகிறது வட அமெரிக்க மார்க்கட்டுகளில் பிரிட்டிஷ் சரக்குகள் இலகுவாக போட்டியிடுவதற்கு செலாவணி மதிப்பு குறைப்பு நடவடிக்கை அதிகம் உதவியுள்ளது ஆகவே அமெரிக்காவில் (மறுபடியும் வியாபார மந்தம் ஏற்படாதிருந்தால்) பிரிட்டிஷ்மார்க்கெட்டுகள்விஸ்தரிக்க அதிகப்படியான சந்தர்ப்பமிருக்கிறதென்று பிரிட்டிஷ் சர்க்கார் நம்புகின்றனர்.

பிரிட்டன் உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளின் ஏற்றுமதிமூலம்தான் பெரும்பான்மையான டாலர்கள் சம்பாதிக்கிறதென்பது இதிலிருந்து விளங்கும் ஆனால் இதர ஸ்டர்லிங் நாடுகள்—தென்னாப்ரிக்காவைத்தவிர்த்து—கச்சாப் பொருள் ஏற்றுமதிமூலம்தான் டாலர்கள் சம்பாதிக்கின்றன ரப்பர், கொக்கோ, டின், கம்பளி, சணல் ஆகியவை இக்கச்சா சரக்குகளில் மிக முக்கியமானவை. பிரிட்டனைத் தவிர்த்த இதர ஸ்டர்லிங் நாடுகளின் டாலர் வருவாய் அடிக்கடி மாறுபடக்கூடிய தன்மைவாய்ந்தது தற்போது ஸ்டர்லிங் பிரதேசம் (பிரிட்டனைத் தவிர) வருடத்திற்கு 80 கோடி டாலர் சம்பாதித்து வருகிறது 1948 வருடம் அதாவது விலை வாசிகள் ரொம்ப சாதகமாக இருந்தபோது அமெரிக்கா அதிகப்படியான சரக்குகளை சேமித்து வந்தபோது—இதர ஸ்டர்லிங் நாடுகளின் டாலர் வருமானம் 110 கோடி டாலர்களையும் எட்டியிருந்தது

இனி அடுத்தபடியாக ஸ்டர்லிங் பிரதேசத்தின் டாலர் இறக்குமதிகளை ஆராய்வோம். முதலாவதாக இவ்வருடம் அதாவது 1950 வருஷம் ஜூன் மாதம் முடிய—பிரிட்டன் டாலர் மார்க்கட்டுகளிலிருந்து 13890 லக்ஷம் டாலர்கள் மதிப்புள்ள சரக்குகளை இறக்குமதி செய்யுமென மதிப்பிடப்பட்டுள்ளது கடந்த ஆண்டு பிரிட்டன் இறக்குமதி செய்த டாலர் சரக்குகளின் மதிப்பு 15760 லக்ஷம் டாலர்களாகும். அடுத்த வருடம் டாலர் இறக்குமதிகளை 118 கோடி டாலர்களாக குறைத்துக்கொள்ள பிரிட்டன் திட்டமிட்டுள்ளது இவ் வருடம் இதர ஸ்டர்லிங் நாடுகள் டாலர் மார்க்கட்டுகளிலிருந்து 110 கோடி டாலர். மதிப்புள்ள சரக்குகள் இறக்குமதி செய்யுமென மதிப்பிடப்பட்டுள்ளது

இப்புள்ளி விவரங்களிலிருந்து இன்றைய டாலர் பற்றாக்குறைக்கு பிரிட்டன்தான் "முக்கிய குற்றவாளியோ" வென்று நினைக்கத் தோன்றலாம் ஏனெனில் பிரிட்டனின் தற்போதைய டாலர் வருமானம் 60 கோடி டாலர்களுக்குச் சற்று மதிகமாகும்; ஆனால் செலவினங்களோ சுமார் 140 கோடி இதர டாலர்கள். ஸ்டர்லிங் நாடுகளின் தற்போதைய டாலர் வருவாய் 80 கோடி டாலர். செலவு 110 கோடி டாலர். என்றாலும் ஒரு முடிவுக்கு வருமுன் இங்கு இரு முக்கிய அம்சங்களை கவனிக்கவேண்டும். வர்த்தகத்தின் பரம்பரையான அமைப்பு முதலாவது அம்சம். ஸ்டர்லிங் பிராந்தியத்தில் பிரிட்டன் வகிக்கும் ஸ்தானம் இரண்டாவது அம்சமாகும்

யுத்த முற்கால நிலைமை

டாலர் பிரச்னையை ஒழுங்கான வழியில் ஆராயவேண்டுமானால் இன்றைய டாலர் நிலைமையை யுத்தத்திற்கு முன்பிருந்த நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டியது அவசியமாகும். இவ்விதம் ஒப்பிட்டுப் பார்த்தால் யுத்த முற்காலத்தில் பிரிட்டனின் டாலர் செலவினங்களுக்கும், இதர ஸ்டர்லிங்நாடுகளின் டாலர் செலவினங்களுக்குமுள்ள பெருத்த வேற்றுமை விளங்கும். உதாரணமாக 1934-வருடத்திற்கும் 1938க்குமிடையில் பிரிட்டன் வருடமொன்றுக்கு 80, 90 கோடி டாலர் வரை செலவிட்டுவந்தது பிரிட்டனின் இன்றைய டாலர் செலவினம் 13890 லக்ஷம் டாலர்களாகும். இதிலிருந்து பிரிட்டனின் தற்போதய டாலர் செலவினம் இரண்டு மடங்குக்கும் குறைவாகவேவைக்கப்பட்டுள்ளதென்பது தெரியவரும் ஆனால் இதர ஸ்டர்லிங் நாடுகளோ யுத்தத்திற்குப் பின் வருடமொன்றுக்கு 25 கோடி டாலர்களே செலவிட்டுவந்தது. இரு நாடுகளின் இன்றைய டாலர் செலவினம் 110 கோடி டாலர்களாகும்—அதாவது யுத்த முற்காலத்தைவிட நான்கு மடங்குக்கு அதிகமாகும்.

அடுத்தபடியாக ஸ்டர்லிங்பிரதேச வர்த்தகத்தின் தன்மையையும் நாம் இங்கு ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும் யுத்த முற்கால வர்த்தக அமைப்பில் பிரிட்டனுக்கும் இதர ஸ்டர்லிங் நாடுகளுக்குமிடையில் நடைபெற்ற வர்த்தகத்தில் பிரிட்டனுக்கு சாதகமாகவே வாக்கு விழுந்து வந்தது. ஆகவே ஸ்டர்லிங் பிரதேசம் கொடுக்க வேண்டியிருந்த பாக்கித் தொகையில் ஒருபகுதியை பிரிட்டன் டாலர்களாக மாற்றிக்கொண்டு வந்தது.

ஆனால் இன்று இது சாத்தியமில்லை. ஏனெனில் இதர ஸ்டர்லிங் பிரதேசத்தின் அதிகப்படியான டாலர் செலவினங்கள் காரணமாக இதர ஸ்டர்லிங் நாடுகளின் டாலர் வாத்தகத்தில் பாதகமாக பாக்கியிருந்து வருகிறது. இப்புது நிலைமை நீண்ட காலத்திற்கு நீடித்திருக்க முடியாது இதர ஸ்டர்லிங் பிராந்தியத்திற்கு பெரும் மூலாதார யந்திரங்கள் சரக்குகள் சப்ளை செய்யும் நடவடிக்கையை பிரிட்டன் தொடர்ந்தும் பூரணமாக நிறைவேற்ற வேண்டுமானால், ஸ்டர்லிங் உபரி வருமானத்தின் ஒரு சிறு பகுதியையாவது பிரிட்டன் டாலர்களாக மாற்றிக் கொள்ள மீண்டும் சக்தி பெற்றிருக்கவேண்டும்.

தனது தற்போதைய டாலர் செலவினமான 140 கோடி 'டாலர்களை' 1950—51-ம் வருஷத்தில் 100 கோடியாக குறைக்கவும். அதே சமயத்தில் டாலர் மார்க்கட்டுகளுக்கான ஏற்றுமதி அதிகரிக்கவும் பிரிட்டன் திட்டமிட்டுள்ளது அப்படியிருந்தும் இதர ஸ்டர்லிங் நாடுகளிலிருந்து சிறிது உபரி டாலர்கள் பிரிட்டனுக்குத் தேவைப்படும்.

இந்தியக் குடியரசு விளக்கம்

எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி

இந்திய சரித்திரத்தில் ஈடு-இணையற்றதொரு சகாப்தம் ஆரம்பமாகி யிருக்கிறது. நம்மை ஆளும் மன்னர்கள் தற்போது ஒருவரல்ல, இருவரல்ல; பாரத சமுதாயத்திலுள்ள முப்பத்திரண்டு கோடி மக்களும் மன்னர்கள்தான். இவ்வளவு பேரும் ஆட்சிப் பொறுப்பை வகிப்பதென்பது எவ்வாறு? இதை விளக்கி வைப்பதுதான் இந்தியக் குடியரசுச் சட்டம்

இச்சட்டம் நூற்றுக்கணக்கான ஷரத்துகளடங்கியது. இவைகளோடு பல அட்டவணைகள் இவ்வளவையும் படித்து மனதில் பதிய வைத்துக்கொள்வது சிறிது சிரமமான காரியம். எனினும் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவர்கள் ஆட்சி முறையின் அடிப்படையான அம்சங்களையாவது அறிந்திருப்பது அவசியமல்லவா? அறிந்தாலல்லாது தங்கள் குடியரசின் கீழ்தம் கடமைகளையோ, உரிமைகளையோ நேரான முறையில் செலுத்துவது சாத்தியமல்ல மேற்குறித்த அடிப்படையான அம்சங்களைக் கூடியவரை சுலபமாக அறிந்து கொள்ள உதவும் பொருட்டு, கேள்வி—பதில் ரூபத்தில் சில கட்டுரைகள் வெளியிடவிருக்கிறோம். இவற்றில் முதலாவது கட்டுரை இன்று வெளியாகிறது.

★

நோக்கங்கள்

கேள்வி:—நமது அரசியல் சட்டத்தின் அடிப்படையான நோக்கங்களென்ன?

பதில்:—இந்தியாவில் பூரண சுதந்திரத்தோடு கூடிய ஒரு ஜனநாயகக் குடியரசை ஸ்தாபிப்பது ஒன்று. இந்த தேசப் பிரஜைகள் எல்லோருக்கும் சமூக பொருளாதார. ராஜீயத் துறைகளில் நீதியும் சிந்தனை பேச்சு அல்லது எழுத்து, மத நம்பிக்கை வழிபாடு போன்ற விஷயங்களில் சுதந்தரமும், அந்தஸ்திலும். சந்தர்ப்பங்கள் பெறுவதிலும் சமத்துவமும். தனி நபருக்குரிய பெருமையையும் தேசீய ஒற்றுமையையும் வளர்க்கக்கூடியவாறு சகோதரப் பான்மையும் ஏற்படச் செய்வது இன்னொரு நோக்கம்

கே:—இந்திய யூனியனில் எவ்வளவு ராஜாங்கங்கள் உண்டு; அவை யாவை?

ப:—மொத்தம் 28 ராஜாங்கங்கள் அடங்கியது இந்திய யூனியன் அவை இந்திய அரசியல் சட்டத்தின் முதலாவது அட்டவணையில் மூன்றுபகுதிகளாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன முதல் பகுதியில் குறித்த ராஜாங்கங்கள் 9 அவை 1 அஸ்ஸாம், 2 பீகார். 3 பம்பாய். 4 மத்தியப் பிரதேசம். 5 சென்னை, 6 ஒரிஸா. 7. பஞ்சாப். 8 உத்தரப் பிரதேசம், 9. மேற்கு வங்காளம், இரண்டாவதுபகுதியிலுள்ள ராஜாங்கங்கள் 9. அவை: 1. ஹைதராபாத், 2 ஜம்மு-காஷ்மீர். 3. மத்திய பாரதம் 4. மைசூர். 5. பாடியாலா கிழக்கு பஞ்சாப் சமஸ்தானங்கள் யூனியன், 6. ராஜஸ்தானம், 7. ஸௌராஷ்டிரம். 8 திருவாங்கூர்—கொச்சி 9 விந்தியப் பிரதேசம் மூன்றாவது பகுதியிலுள்ள ராஜாங்கங்கள் 10. அவை 1. ஆஜ்மீர். 2 போபால் 3 பிலாஸ்பூர் 4 கூச் பீகார், 5 குடகு. 6 டில்லி. 7 ஹிமாசலப்பிரதேசம், 8 கட்ச் 9 மணிப்பூர். 10 திரிபுரா.

இந்தியப் பிரதேசம்

கே:—இந்தியப் பிரதேசம் என்பது எதைக்குறிக்கும்?

ப:—ஏற்கனவே எடுத்துக்காட்டிய ராஜாங்கங்களின் பிரதேசங்களோடு அந்தமான். நிகோபா இவ்விரு தீவுகளையும், இனி இந்திய யூனியன் புதிதாக மேற்கொள்ளக்கூடிய பிரதேசங்களையும் குறிக்கும்.

கே:—ராஜாங்கங்களின் எல்லையை மாற்றியமைக்க முடியுமா? புதிய ராஜாங்கங்கள் ஏற்படுத்தும் முறை யென்ன? இதில் அதிகாரம் யாருக்கு?

ப:—பார்லிமெண்டு சட்டத்தின் மூலம் ஒரு ராஜாங்கத்தின் எல்லையை மாற்றி யமைக்கலாம் அல்லது அதன் பெயரை மாற்றலாம் அதே முறையில், பார்லிமெண்டு ஒரு ராஜாங்கத்தின் பிரதேசத்தைப் பிரித்தோ, அல்லது சிலராஜாங்கங்களை அல்லது அவற்றின் பகுதிகளை ஒன்று சேர்த்தோ அல்லது ஒரு ராஜாங்கத்துடன் எந்தப் பிரதேசத்தையும் சேர்த்தோ ஒரு புதிய ராஜாங்கம் ஏற்படுத்தலாம். ஆனால் ஜனாதிபதியின் சிபார்சின்பேரிலேயே பார்லிமெண்டில் மேற்குறித்த நோக்கத்துடன்கூடிய ஒரு மசோதாவைக் கொண்டுவரலாம்.

பிரஜா அந்தஸ்து

கே:—பிரஜா அந்தஸ்துக்கு உரியவர்கள் யாவர்?

ப:—இந்த அரசியல் சட்டம் அமுலுக்குவருகையில் இந்தியாவில் நிலையாக வசித்துவருவோரில் இந்தியாவில் பிறந்தவர்கள். இந்தியாவில் பிறந்த தாய் அல்லது தந்தையைக் கொண்டவர்கள். இந்த அரசியல் சட்டம் அமுலுக்கு வருமுன்பாக குறைந்தது ஐந்து வருஷகாலம் இந்தியப் பிரதேசத்தில் வசித்து வந்தவர்கள் ஆகியோர் இந்தியப் பிரஜைகளாக மதிக்கப்படுவர் மேலும் இந்த அரசியல் ஆரம்பமாகையில் பாகிஸ்தான் பிரதேசத்திலிருந்து இந்தியாவுக்கு வந்து குடியேறி யிருந்தவர்களும் இந்தியப் பிரஜைகளாகக் கருதப்படுவார்கள் ஆனால் அத்தகையோர் அல்லது அவர்களது தாய்மார் அல்லது தந்தையர் அல்லது அவர்களது பாட்டன்மார்களில் எவரேனும்

1935-ம் வருஷத்திய இந்திய அரசியல் சட்ட விவரணைப்படியுள்ள இந்தியாவில் பிறந்தவர்களாயிருக்க வேண்டும் மேலும் அவர்கள் 1948-ம் ஆண்டு, ஜூலை மாதம் 19-ந்தேதிக்கு முன்னதாக இந்தியாவுக்கு வந்தவர்களாயிருந்து அப்போது முதல் இந்தியப் பிரதேசத்திலேயே வசித்து வருவோராயிருக்க வேண்டும். அத்தேதிக்குப் பிறகு வந்தவர்கள் இந்த அரசியல் சட்டம் அமுலுக்குவரு முன்பாக இந்திய சர்க்காரால் இதற்கென்று நியமிக்கப்பட்ட அதிகாரியிடம் மனுச்செய்து கொண்டு இந்தியப் பிரஜைகளாகப் பதிவு பெற்றிருக்க வேண்டும்

கே:— வெளி தேசத்தில் வசிப்பவர்கள் இந்தியப் பிரஜைகளாக முடியுமா?

ப:—இந்தியாவில் பிறந்தவர்களாயிருந்து. அல்லது இங்கு பிறந்த தாய்மார் அல்லது தந்தையரைக் கொண்டவராயிருந்து சாதாரணமாக வேறொரு தேசத்தில் வசித்து வருவோரும் இந்தியப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் அவர்கள் தாங்கள் வசிக்கும் தேசத்திலுள்ள இந்திய ஸ்தானிகரிடம் இந்த அரசியல் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்போ, பிறகோ மனுச் செய்துகொண்டு இந்தியப் பிரஜைகளாகப் பதிவு பெற்றிருக்கவேண்டும்

மூலாதார உரிமைகள்

கே:- மூலாதார உரிமைகள் என்பதென்ன?

ப:—அவை எல்லாப் பிரஜைகளுக்குமுள்ள அடிப்படையான உரிமைகளைக் குறிப்பவை இந்த உரிமைகளைப் பறிக்கக்கூடிய அல்லது ஒடுக்கக்கூடிய ஒரு சட்டத்தை சாதாரண நிலையில் எந்த ராஜாங்கமும் இயற்றக்கூடாது

கே:—அவ்வுரிமைகளில் எவ்வளவு வகையுண்டு? அவை யாவை?

ப:—அவை ஏழு வகையானவை (1) சமத்துவ உரிமை, (2) சுதந்திர உரிமை, (3) சுரண்டலுக்கு ஆளாகாதிருக்கும் உரிமை (4) மத சுதந்திரம் (5) கலாசார—கல்வி உரிமைகள். (6) சொத்து உரிமை (7) சட்ட பூர்வமாகப் பரிகாரம் பெறும்உரிமை

கே:—சுதந்திர உரிமை என்ற இனத்தின் கீழ் வரும் முக்கிய உரிமைகள் என்ன?

ப:—எல்லாப் பிரஜைகளுக்கும் தங்கள் கருத்தைப் பேச்சு மூலமும், வேறு வகைகளிலும் வெளியிடவும், அமைதியாகவும், ஆயுதமின்றியும் கூடவும், சங்கங்கள் அல்லது சபைகள் அமைத்துக்கொள்ளவும், இந்தியப் பிரதேசம் முழுதும் தாராளமாக நடமாடவும் தடை இராது மேலும் இந்தியப் பிரதேசத்தின் எப்பகுதியிலும் வசிக்கவும், நிரந்தரமாகக் குடியேறவும் சொத்துகளை வாங்கவும், வைத்திருக்கவும், விக்கிரயம் செய்யவும், எந்தத் தொழிலிலும் வர்த்தகத்திலும் ஈடுபடவும் அவர்களுக்கு உரிமையுண்டு.

விசாரணையின்றி சிறையிடுதல்

கே:— குற்றம் செய்யக்கூடியவர்கள் என்று சந்தேகத்துக்கு உள்ளானோரை முன்னதாகக் கைது செய்து காவலில் வைக்க சர்க்கார் சட்டம் செய்யலாமா?

ப:—செய்யலாம். ஆனால் அச்சட்டம் மேற்குறித்தவர்களை சாதாரணமாக மூன்றுமாத காலத்துக்கு மேல் காவலில் வைக்க சர்க்காருக்கு அதிகாரமளிப்பதாயிருக்கக்கூடாது அதற்குமேல் காவலில் வைப்பதாயிருந்தால், ஹைகோர்ட் நீதிபதிகள் அல்லது அப்பதவியை வகிக்கக் கூடியவர்கள் அடங்கிய ஒரு போர்டின் ஆலோசனையையொட்டி காவல் காலத்தை நீடிக்க அச்சட்டத்தில் தக்க வசதிசெய்ய வேண்டும்.

கே:—மேற்குறித்தவாறு காவலில் வைக்கப்படுவோர்க்கு அதற்கான காரணங்களைத் தெரிவிக்க அதிகாரிகள் கடமைப்பட்டவர்களா?

ப:—சாதாரண நிலையில் காவல் உத்தரவைப் பிறப்பிக்கும் அதிகாரி கூடிய சீக்கிரத்தில் அதற்கான காரணங்களை கைதாகும் நபருக்குத் தெரிவிப்பதுடன் அவ்வுத்தரவுக்கு எதிராக முறையிட்டுக்கொள்ள அவருக்குச் சந்தர்ப்பமளிக்கவும் வேண்டும் ஆனால் இது சம்பந்தமாக எந்தத் தகவலை வெளியிடுவது பொது நலத்துக்கு விரோதமென்று அவ்வதிகாரி கருதுகிறாரோ, அதை அவர் வெளியிட்டாகவேண்டிய அவசியமில்லை

கே:—சுரண்டலுக்கு ஆளாகாதிருக்கும் உரிமை என்பதென்ன?

ப:—மனிதவர்க்கத்தினரைக் கொண்டு துன்மார்க்கத் தொழில் நடத்தல், கட்டாய முறையில் வேலை வாங்குதல் இவற்றில் யாரும் ஈடுபடக்கூடாது இதை மீறுவது சட்டப்படி தண்டனைக்குரிய ஒருகுற்றம் ஆனால் பொது நலத்தை முன்னிட்டு சர்க்கார் எந்த இடத்திலும் கட்டாய சேவை முறையை அமுலுக்குக் கொண்டுவரத் தடையில்லை 14-வயதுக்குக் குறைந்த சிறுவர்களை ஒரு தொழிற்சாலையிலோ, சுரங்கத்திலோ அல்லது அபாயகரமான எந்த வேலையிலுமோ அமர்த்தக்கூடாது

சமத்துவ உரிமை

கே:— சமத்துவ உரிமை என்பதன் கீழ் வரும் முக்கிய இனங்களென்ன?

ப சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படவும், அதன்படி சம அளவு பாதுகாப்புப் பெறவும்எல்லா நபர்களுக்கும் உரிமையுண்டு. எந்தப் பிரஜையையும் அவரது மதம், ஜாதி, வருப்பு பால் அல்லது பிறப்பிடம் பற்றிய காரணங்களுக்காக மட்டும் சர்க்கார் வித்தியாசமாக நடத்தக்கூடாது ஆனால் ஸ்திரீகளுக்கும். குழந்தைகளுக்கும் தனி ஏற்பாடுகள் செய்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

தீண்டாமை அடியோடு ஒழிக்கப்பட்டு விட்டது இனி அந்தப் பழக்கத்தையொட்டி யாரும் எவ்வித இடையூறும் விளைப்பது சட்டப்படி தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும்.

சர்க்கார் உத்யோகங்கள்

கே:—சமத்துவ உரிமை சர்க்கார் உத்தியோகங்களைப்பற்றிய வரை எவ்வாறு அமுலாகும்?

ப:—இத்தகைய உத்தியோகங்களுக்கு நியமனம் செய்யும் விஷயத்தில் எல்லாப் பிரஜைகளுக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் இதில் ஒருபிரஜையின் மதம், ஜாதி வகுப்பு பால், வம்சம், பிறப்பிடம் அல்லது வசிக்குமிடம் காரணமாகமட்டும் அவரை அருகதையவற்றவராக்கக்கூடாது ஆனால் உத்தியோகங்களில் போதியளவு பிரதிநிதித்துவம்பெறாதவர்களென்று சர்க்காரால் கருதப்படும் ஒரு பிற்பட்ட வகுப்பினருக்கு உத்தியோகங்களை ஒதுக்க சர்க்காருக்கு அதிகாரமுண்டு

மத சுதந்திரம்

கே:—மதசுதந்திரம் என்பதென்ன?

ப:—பொது அமைதிக்கும், ஒழுக்கத்துக்கும், சுகாதாரத்துக்கும், உட்பட்ட முறையில் தங்கள் மனச் சாட்சிப்படி நடக்கவும் தங்களுக்கு இஷ்டமான மதத்தைத் தாராளமாக அனுசரிக்கவும், பிரசாரம் செய்யவும் அனைவருக்கும் உரிமையுண்டு மேற்குறித்த நிபந்தனைக்கு உட்பட்டவாறு ஒவ்வொரு மதத்தினரும் மத அல்லது தாம நோக்கங்களுக்காக ஸ்தாபனங்கள் ஏற்படுத்திக்கொள்ளவும், ஸ்தாவர ஜங்கம சொத்துகளைவாங்கி அவற்றை நிர்வகிக்கவும் தடையிராது

கே:—கல்வி ஸ்தாபனங்களில் மத போதனை நடத்தலாமா?

ப:-சர்க்கார்கொடுக்கும் பணத்தை மட்டும்கொண்டு நடக்கும் எந்தக் கல்வி ஸ்தாபனத்திலும் மதபோதனை நடத்தக்கூடாது ஆனால் ஒரு ஸ்தாபனம் சர்க்கார நிர்வாகத்திலிருந்த போதிலும், அந்தஸ்தாபனம் ஏற்படுவதற்குக் காரணமான ஒரு தர்ம ஏற்பாட்டின்படி அதில் மத போதனை நடத்தவேண்டியிருக்குமாயின், அதற்கு தடையிராது சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அவர்களிடமிருந்து பண உதவி பெறும் ஒரு ஸ்தாபனத்தில் கல்வி பெறுவோரை அதில் நடக்கக்கூடிய எவ்வித மத போதனைக்கும் உள்ளாகும்படி நிர்ப்பந்திக்கக்கூடாது.

விலைவாசிகள்

[சில்லரை விலைகள்]

(விற்பனை வரி தனியாக செலுத்தவேண்டும்)

சென்னை, பிப் 14—

அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பண்டங்களின் விலைவாசிப் போக்கைக் குடும்பத்திலுள்ளவர்கள் தெரிந்து கொள்வதற்கு உதவியாகச் சென்னை நகரிலுள்ள நிலவரத்தைக் கீழே பிரசுரித்திருக்கிறோம். இவையெல்லாம் அவ்வப்போது மாறுதலுக்குட்படக்கூடியவை. எனவே இதில் கொடுக்கப்பட்டிருப்பதைப் போலவே சில பண்டங்கள் கிடைக்கலாம். அல்லது சற்று ஏறத்தாழவும் சில இடங்களில் விற்கப்படலாம். இருப்பினும் பொதுவாக விலைகளின் ஓட்டத்தை உணர்ந்துகொள்ள இது பயன்படும். இப்புதிய பகுதி இனி பிரதி இதழிலும் இடம் பெறும்.

		ரு	அ	பை.
உப்பு	9 ஆழாக்கு	0	1	3
துவரம் பருப்பு	1-படி	0	14	6
உளுத்தம் பருப்பு	,,	1	1	0
பைத்தம் பருப்பு	,,	1	2	0
உளுந்து	,,	0	14	0
எள்ளு	,,	1	4	0
கடுகு	1 வீசை	2	0	0
வெந்தியம்	,,	1	12	0
மிளகு	,,	17	8	0
மிளகாய்	,,	4	4	0
தனியா	,,	1	12	0
புளி [புதுசு]	,,	1	8	0
புளி [பழசு]	,,	1	10	0
சீரகம்	,,	4	8	0
வெல்லம்	,,	1	3	0
நாட்டு சர்க்கரை	,,	1	5	0
அஸ்கா சர்க்கரை	,,	1	5	0
மஞ்சள்	,,	2	4	0
குங்குமம்	,,	1	8	0
பாதாம்	,,	3	8	0
சீயக்காய்	,,	1	3	0
சீயக்காய் பொடி	,,	1	1	0
நல்லெண்ணெய்	,,	2	15	0
தேங்காய் எண்ணெய்	,,	3	12	0

		ரு	அ	பை.
கடலெண்ணெய்	,,	2	7	0
நெய்	,,	7	0	0
கற்பூரம்	1-பலம்	0	7	0
பெருங்காயம்	,,	0	4	0
திராக்ஷை	1-வீசை	4	12	0
மிந்திரிபருப்பு	,,	4	8	0
குடிகூரா பவுடர்	1 டின்	1	15	0
ஸன்லைட் சோப்	பெரியது	0	5	3
,,	சிறியது	0	3	0
ஹமாம் சோப்		0	6	0
லைப்பாய்		0	5	6
டாம்கோ 501 பார்		1	3	0
லக்ஸ்		0	6	0
ரெக்ஸோனா		0	7	0
கடலைப் பருப்பு	1-படி	0	9	9
கடலை		0	8	10
விளக்கெண்ணெய் பாட்டில்	பெரிசு	2	0	0
,,	சிறியது	0	11	0
ஓவல்டின்		3	6	0
கொக்கோ		1	6	0
தீப்பெட்டி, 1 டஜன்		0	8	6
'டால்டா' வனஸ்பதி 10 ப		11	8	0
ஷை 5 ப		6	0	0
ஓவல்டைன் 1 ப		3	7	0
மைலோ (பெரியது)		2	5	9
கரி 1 மூட்டை (56 ப.)		4	0	0
நீம் டூத் பேஸ்ட்		0	15	0
காட்ரீஜ் சோப்	நெ 1	0	11	0
ஷை	நெ 2	0	8	6
கேசவர்த்தினி தைலம்		0	13	0
"பினைல்" பாட்டல்		0	13	0
'ரௌண்டிரீஸ் (R. T.) கொக்கோ ½ ப		1	6	0
வாஷிங் சோடா 1 வீசை		0	9	0
மெடிகோ டாயிலட் சோப்		0	8	0
'டம்கோ' ஹேர் ஆயில் (சிறிய பாட்டில்)		1	1	0
ஷை (பெரிய பாட்டில்)		2	11	0
மார்கோ சோப்பு		0	8	6
மைசூர் "ஸாண்டல்" சோப்		0	9	0
கேரளா 'ஸாண்டல் சோப்பு		0	7	0
எல் ஜி பெருங்காயம் 1 சேர்		2	2	0
ஷை ½ சேர்		1	2	0
அமிர்தாஞ்சனம்		1	0	0
சாம்பிராணி	1 பலம்	0	6	6
களிப்பாக்கு	1 வீசை	5	4	0
காப்பிக்கொட்டை	பீபரி	5	9	0
,,	'A'	5	3	0
,,	"R" பீபரி	4	15	0

Zam-Buk வெட்டுப் புண், காயம்

புள்ளி, பரு, சிறங்கு, புண்களுக்கு

சீக்கிரத்தில் பூரணமாக குணமாக்கும்.

ஜாம்பக் மெழுகு மூலிகை எண்ணைகள் நிறம்பியது சருமத்தினூடே புகுந்து வேலை செய்து ஜாம்பக் வலியையும், புண், எரிச்சலையும் நிறுத்தும் சருமத்தை சுத்தமாக்கி, கிருமிகளைக் கொன்று சீயை நிறுத்தி சுலபமான நிவாரணத்திற்கு உதவும் ஜாம்பக் சகல சரும நோய்கள், கால் நோய்கள் வெட்டுப் புண்கள், பூச்சிக் கடிகள், தீப்பட்ட புண், காயங்கள் மூலம் இவற்றை குணமாக்கும் மகோன்னத மெழுகு இதில் மிருகக் கொழுப்பு சேரவில்லை என்ற உத்தரவாதம். ஏஜண்டுகள்: தாதா & கோ, பி டி. மதராஸ்

ஜாம்பக் — உலகின் மகோன்னத சருமக் களிம்பு



சங்கீதபூஷணம் R. சண்முகசுந்தரம் 16-2-50ல் திருச்சி ரேடியோவில் வீணை வாசித்தார். இப்பொழுது அவர் திருப்பனந்தாள் ஆதீனத்தில் இருந்து வருகிறார்.

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924.

பிரபல ஜோதிஷர்

★

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ 5 ஆரும் 3 கேள்விகளுக்கு ரூ 2 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

★

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,

"தபோ நிதி"

தியாகராய நகர், மதராஸ் 17.

தபால் பெட்டி 1417.

சுதேசமித்திரன்

சந்தா விகிதங்கள்:

	தினப்பதிப்பு (இந்தியா, இலங்கை தபால் மூலம்)	சென்னை	வாரப்பதிப்பு (எல்லா இடங்களுக்கும்)
	ரூ அ	ரூ அ.	ரூ. அ
1 வருடம்	21—0	22—0	13—0
6 மாதம்	12—4	11—0	7—0
3 மாதம்	6—4	5—8	3-12

தனிப்பிரதி 1 அணா. வெளிநாடு ரூ 57—0—0

தனிப்பிரதி அணா 4. ரூ 18—0—0

குறிப்பு:—தினசரி வாரப்பதிப்புகளுக்கு 3 மாதத்திற்குக் குறைந்த சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது

சர்க்குலேஷன் மானேஜர்
சுதேசமித்திரன்.

அட்டைப்படம்

சூரியன் கீழ்த்திசையில் உதயமாகும்போது இருள் பிரிகிறது. மலர்களெல்லாம் மந்தகாஸமாக தம் இதழ்களை விரித்து மலர்ச்சி பூத்து நிற்கின்றன! தேனை நினைந்திருக்கும் வண்டுகளையெல்லாம் ஒளியின் சிறப்பைக் கண்ட பூக்கள் தங்கள் மலர்ந்த வதனத்தோடு வரவேற்கின்றன. ஒளிக்கிரணங்கள் வரும் திக்கை நோக்கி ஆனந்தப்படும் மலர்களில் 'சூரியகாந்தி' முக்கியமானதாகும் அதுவே இவ்விதழின் அட்டையில் மலர்ந்து நிற்கிறது இவ்விதழில் அதிகப் பக்கங்களுடன் அதிகமான சில அம்சங்களும் மலர்ந்திருக்கின்றன வழக்கமாகவுள்ள பகுதிகளோடு புதிய பகுதிகளையும் சேர்த்து வாசகர்கள் மணம்பெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது

ஹிந்தி பாடங்கள்

'பண்டிட்ஜி'

முன்னுரை

ஜய் ஹிந்த்!

நேதாஜி ஸுபாஷ் சந்த்ர போஸ் 'ஜய் ஹிந்த்' என்ற கோஷத்தைக் கிளப்பிவிட்டார். அந்த கோஷம் இன்று நம் நாடு முழுவதிலும் எதிரொலித்துக்கொண்டிருக்கிறது. 'ஜய் ஹிந்த்' என்று சொல்வது இன்று மோஸ்தர் ஆகிவிட்டது! தேசபக்தர்களின் செவியிலும் சிந்தனையிலும் அது அவ்வளவு இனிக்கிறது!

ஜய் ஹிந்தீ!

பாரத நாட்டின் அரசியலை வகுத்த அறிவாளிகள் நேதாஜியைப் பின்பற்றி இன்னொரு கோஷத்தையும் கிளப்பி விட்டிருக்கின்றனர். அதுதான் 'ஜய் ஹிந்தீ' என்பது! முதல் கோஷத்தைப்போல் இந்த இரண்டாவது கோஷமும்வெகு சீக்ரத்தில் மோஸ்தர் ஆகிவிடுமென்பதில் ஐயமில்லை.

ஹிந்த்-ஹிந்தீ உறவின் தன்மை

சிவனுடன் சக்தியையும் சேர்த்துப் போற்றுவதுதானே நம் மரபு! சிவனுக்கும் சக்திக்குமுள்ள உறவு தான் ஹிந்த் என்பதற்கும் ஹிந்தீ என்பதற்கும்! ஹிந்த் என்பது நம் தேசத்தைக் குறிக்கும் சொல் ஹிந்தீ என்பது நம் தேச பாஷையைக் குறிக்கும் சொல் சக்தியைப் ப்ரயோகிக்கும் ஸாதனமல்லவா பாஷை?

பழங் கதை

பாரத நாட்டின் பழங் கதையைச் சரித்ரத்தில் படித்திருக்கிறோம். எத்தனையோ வெளிநாட்டு மக்கள் இந்த நாட்டின்மீது படையெடுத்து வந்திருக்கின்றனர். அப்போதெல்லாம் ஸிந்து நதிக்கரை ப்ரதேசங்கள் மிக மிகச் செழிப்பாக இருந்தன வெல்லம் இருக்குமிடத்தில் ஈக்கள் வந்து மொய்ப்பதுபோல், அந்த ஸிந்து நதிக்கரைப் ப்ரதேசங்களில் ஏராளமான ஜனங்கள் குடியேறி ஸுகமாக வாழ்ந்து வந்தனர். அந்தச் செழிப்பையும் செல்வத்தையும் பார்த்த வெளிநாட்டு மக்கள் அப்படியே ப்ரமித்துப் போய்விட்டனர். ஸிந்து நதி ப்ரதேசம் அவர்களுடைய நெஞ்சைப் பூர்ணமாகக் கவர்ந்து விட்டது!

ஸ்டாலினுடைய திறமையைக் கண்டு வியக்கும் நம்நாட்டுக் கம்யூனிஸ்ட் தோழர்கள்கூடத் தங்கள் வீட்டுக் குழந்தைகளுக்கும்ஸ்டாலின், மாலடோவ் என்றெல்லாம் பெயர் வைப்பதில்லையா? காந்தி மஹாத்மாவைப் பாராட்டிப் பேசும் சில பெரியார்கள் நம் தேசத்தை காந்தி தேசம்' என்று சொல்வதில்லையா? அதேமாதிரிதான் அந்த வெளிநாட்டு மக்களும் இந்த தேசத்தை 'ஸிந்து தேசம்' என்று குறிப்பிடத் தொடங்கினர்!

நாம் வங்காளம் என்று சொல்கிறோமே, அதை அந்த மாகாணத்தவர்கள் 'பங்கால்' என்றுதான் சொல்லுகிறார்கள். நாம் வந்தேமாதரம்' என்று சொன்னால் அவர்கள் 'பந்தே மாதரம்' என்கிறார்கள்! 'வ' என்ற ஒலியை 'ப' என்று உச்சரிப்பது அவர்களுடைய வழக்கமாகிவிட்டது அதேபோல் 'யமுனா'வை 'ஜமுனா' என்கிறார்கள் 'யோகி'யை 'ஜோகி' என்கிறார்கள். 'ய'வின் ஒலியை மாற்றி 'ஜ' ஆக்கிவிட்டார்கள்.

இந்த வங்காளிகளின் போக்கு முன்சொன்ன வெளிநாட்டவர்களிடமும் காணப்பட்டது 'ஸிந்து தேசம்' என்ற பெயரைத் தேய்த்துத் தேய்த்து 'ஸிந்த்தேசம்' ஆக்கினார்கள் பிறகு 'ஸ'வின் ஒலியை மாற்றி 'ஹ' ஆக்கினார்கள் அதன் விளைவாக நம் தேசத்துக்கு 'ஹிந்த் தேசம்', அல்லதுசுருக்கமாக 'ஹிந்த்' என்றபெயர் ஏற்பட்டது.

இந்த ஹிந்த் தேசத்தின் பாஷை தான் ஹிந்தீ! 'ஹிந்த்' ஆண்பால்; 'ஹிந்தீ' பெண்பால். ஆகவே ஹிந்த், ஹிந்தீ இரண்டிற்குமுள்ள உறவு என்ன ஸாதாரணமானதா? சிவனுக்கும் சக்திக்கும் உள்ள உறவல்லவா அது! இணைந்து இறுகிய உறவாயிற்றே!

ராஜபாஷை

தேவநாகரீ லிபியில் எழுதப்படும் ஹிந்தீக்கு நம் அரசியல் நிர்ணய ஸபா அங்கத்தினர்கள் பாரதநாட்டின் ராஜபாஷை என்ற பட்டத்தைச் சூட்டிவிட்டனர் அது சட்டமாகி இன்று நம் குடியரசு சாஸனத்திலும் இடம்பெற்றுவிட்டது. இன்னும் பதினைந்து ஆண்டுகளில் நம் ராஜாங்க அலுவல்களெல்லாம் அந்த

பாஷையிலேயே நடக்கத் தொடங்கி விடும் உத்யோகத்துக்கு மட்டுமின்றி, வ்யாபாரத்துக்கும்,வெளியூர் ப்ரயாணத்துக்கும்கூட அந்த பாஷை தெரிந்திருப்பது இன்றியமையாததாகிவிடும். இப்போது ஆங்கிலத்துக்குள்ள செல்வாக்கு இனிவரும் இந்தியாவில் ஹிந்திக்கு ஏற்பட்டு விடும்.

முன் ஜாக்ரதை வேண்டும்

எனவே தமிழர்கள் இப்போது முதற்கொண்டே முன் ஜாக்ரதையுடன் உழைத்து ஹிந்தி பாஷையைக் கற்றுக்கொள்வதில் முனைய வேண்டும். எதிர்காலத்தில் பெருமையுடன் வாழ அதுதான் வழி.

இதர பாடங்கள்

அந்த ஹிந்தியைக் கூடியவரையில் எளியமுறையில், பேச்சுத் திறமை ஏற்படுத்தும் நோக்கத்துடன் கற்பித்தலே இப்பாடங்களின் குறிக்கோள்.

தமிழில் ஸம்ஸ்க்ருத வார்த்தைகள்

ஹிந்தி பாஷையில் ஏராளமான ஸம்ஸ்க்ருத் வார்த்தைகள் வழங்கி வருகின்றன. எனவே அவற்றை ஹிந்தியில் எழுதும்போது குழப்பம் ஏற்படாமலிருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், இந்தப்பாடங்களில் வரும் ஸம்ஸ்க்ருத வார்த்தைகள் தமிழிலும் கூடியவரை ஸம்ஸ்க்ருத உச்சரிப்பையொட்டி எழுதப்பட்டிருக்கின்றன உதாஹரணமாக தமிழிலும் 'பிரயோகம்' என்பதற்குப் பதிலாக 'ப்ரயோகம்' என்றே எழுதப்பட்டிருக்கிறது இது புதிதாக ஹிந்தியைக் கற்றுக்கொள்ளும் தமிழர்களின் ஸௌகர்யத்தைமுன்னிட்டே.

ஜயமுண்டு! பயமில்லை!

ஹிந்திக்கும் தமிழுக்கும் பல விஷயங்களில் ஒற்றுமையும், சில விஷயங்களில் மட்டும் வேற்றுமையும் உண்டு. இவைவிரிவாக அவ்வப்போது பாடங்களில் குறிப்பிடப்படும் இப்போது தமிழில் வழங்கி வரும் ஏராளமான ஸம்ஸ்க்ருதச் சொற்களைச் சிறு மாறுதல்களுடன் ஹிந்தியிலும் உபயோகித்துவிடலாம். உதாஹரணமாக, தமிழில் வழங்கும் 'புஸ்தகம்' என்ற சொல்லை 'புஸ்தக்' என்று சொன்ஞல் அது ஹிந்தி வார்த்தையாகிவிடும்! இவற்றைத் தவிர, 'தயார்' 'தகராறு' 'தாஜா' போன்ற எத்தனையோ ஹிந்தி வார்த்தைகள் இப்பொழுதே தமிழர்களுக்குத் தெரியும். எனவே தமிழர்கள் ஹிந்தியைக் கண்டு பயப்படவேண்டியதில்லை. ஜயமுண்டு என்ற நம்பிக்கையுடன் இதில் ஈடுபட வேண்டும் எவ்வளவுக்கவ்வளவு பாடு படுகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு சீக்ரமாகப் பலன் கிட்டும்.



பயிற்சிப் பாடங்கள்

புதிதாகக் கற்றுக்கொள்பவர்களுக்குப் பயிற்சிப் பாடங்கள் அத்யாவசியமானவை. எனவே ஒவ்வொரு வாரப் பாடத்தின் முடிவிலும் பயிற்சிப் பாடம்கூடக் கொடுக்கப்படும். அதற்கடுத்த வாரத்தில் அந்தக் கேள்விகளுக்கான விடைகளும் பிரசுரிக்கப்படும் கற்றுக் கொள்பவர்கள் அவற்றையொட்டித் தங்கள் விடைகளைச் சரிபார்த்துக் கொள்ளலாம்.

உத்ஸாஹமும். உழைப்பும் இருந்தால் எதிலும் முன்னேற்றம் ஸாத்யமாகும்.

முதல் பாடம்

ஹிந்தி பாஷை பெரும்பாலும் தேவநாகரீ லிபியில்தான் எழுதப்படுகிறது.

எதிர்ப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளதேவநாகரீ எழுத்துக்களைப்படித்து எழுதிப் பழகுங்கள் எங்கே தொடங்கி, எப்படித்தொடர்ந்து சென்று, கடைசியில் எங்கே முடிக்கவேண்டும் என்ற விவரங்களை விளக்கப் படத்தில் ஒவ்வொரு எழுத்துக்குள்ளும் எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றையொட்டி 1-ல் ஆரம்பித்து 2, 3....... என்று வரிசை க்ரமமாகத் தொடர்ந்து எழுதுங்கள்.

ஒரு தரத்துக்குப் பத்துதரமாக இந்த எழுத்துக்களை நீங்கள் படித்து, எழுதிப் பழக்கிக்கொண்டால் பிறகு அவை உங்களுக்கு ஸஹஜமாகிவிடும். கற்றுக்கொள்பவர்களின் ஸௌகர்யத்தையொட்டித்தான் எழுத்துக்கள் மேலேகண்ட முறையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன; தேவநாகரீ லிபியின் எழுத்து வரிசையையொட்டி அல்ல.

மேலேயுள்ள எழுத்துக்களை நீங்கள் நன்ருகக் கற்றுக்கொண்டுவிட்டால் கீழே கொடுக்கப்படும் வார்த்தைகளையும் படிக்கத் தொடங்கலாம்.

एक—இது 'ஏக' என்பது உங்களுக்கு இப்போது தெரியும். ஆனுல் இதை ஹிந்தியில் படிக்கும்போது 'ஏக்' என்றுதான் படிக்கவேண்டும்.

இதேமாதிரி मन என்பதை 'மன்' என்றுதான் படிக்கவேண்டும்.

आ—அல்லாத வேறு உயிரொலியில் முடியும் வார்த்தைகளை அப்படியே படித்துவிடவேண்டும். உதாஹரணமாக [illegible] என்பதை 'கா' என்றுதான் படிக்கவேண்டும்.

முன்னுரையில் சொல்லியிருப்பது போல், எத்தனையோ ஹிந்தி வார்த்தைகளும், ஸம்ஸ்க்ருத வார்த்தைகளும், இங்கிலீஷ் வார்த்தைகளும் நமக்குத் தெரிந்தும், தெரியாமலும் இன்று நம் தமிழில் வழங்கி வருகின்றன எனவே இப்போது அவற்றை ஹிந்தி எழுத்துக்களில் படிக்கும்போது அவற்றின் பொருளைத் தெரிந்துகொள்வதில் நமக்குக் கஷ்டம் இராது உதாஹரணமாக 'ஒரே ஸமயத்திலே' என்று சொல்வதற்குப் பதிலாக 'ஏக காலத்திலே என்றும் சொல்லுகிறோம். எனவே 'ஏக' என்ருல் 'ஒன்று' என்பது நமக்குத் தெரியும் அதுதான் ஹிந்தியில் 'ஏக்' என்று சொல்லப்படுகிறது அதேபோல் 'மன் என்ருல் 'மனம்' என்பதும் நமக்கு விளங்கும்.

பயிற்சி 1.

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஹிந்தி வார்த்தைகளைப் படித்து, எழுதிப் பழக்கிக்கொள்ளுங்கள். வார்த்தைகளைத் தனியாக ஒரு நோட் புஸ்தகத்தில் எழுதி வைத்துக்கொண்டு, பிறகு அவற்றின் ஒலிகளையும் தமிழில் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். சில வார்த்தைகளின் பொருளைக்கூட நீங்கள் ஒருவாறு யூகித்து எழுதிக்கொள்ளலாம். அடுத்தவாரம் பாடத் தொடக்கத்தில் அந்த வார்த்தைகளின் தமிழ் ஒலிகளும், பொருளும் பிரசுரிக்கப்படும். அப்போது அவற்றையொட்டி நீங்கள் உங்கள் விடைகளைச் சரி பார்த்துக்கொள்ளலாம்.

जल, तन, कम,

[illegible], लट, [illegible],

[illegible], [illegible], जन,

आम, [illegible], कप,

[illegible]

ஜய் ஹிந்த்! ஜய் ஹிந்த்!!

ஊம்...சொல்லு 'மாதா பிதா செய்த வினை மக்கள் தலையில் என்பதற்கு உதாரணமாக என்ன சொல்லுவாய்? சொல்லு?

"அதான்ஸார்...என் வீட்டுக் கணக்கை என் அப்பா போடுகிருர்!...அதற்காக நான் இங்கே வந்து குட்டுப் படுகிறேன்"!

வாழ்க்கைச் சுழல்

இந்து

10

வீட்டுக்காரமாமி கடிதத்தில் பின் வருமாறு எழுதியிருந்தாள் :

'இவளுக்கு ஏன் இந்த வீண் தொல்லையெல்லாம்? இந்த புகைப்படங்களெல்லாம் இவளுக்கு எப்படி அகப்பட்டது?' என்ற எண்ணம் முதன்முதலில் உன் மனதில் தோன்றலாம். நானும் என் கணவரும் வெகு நேரம்வரை யோசித்த பிறகுதான் இதைச் செய்யத் துணிந்தோம். நான் ஏதோ மூட்டிக் கலகம் செய்து உன் குடும்பத்தைக் கெடுக்கும் நோக்கத்துடன் இதெல்லாம் செய்வதாக நினைத்துவிடாதே. உன் குடும்பம் உருப்பட்டு நன்றாக இருக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன்தான் இதையெல்லாம் செய்கிறேன்.

கொஞ்ச நாட்களாக உன் கணவருடைய போக்கில் எனக்கு ஏதோ சிறிது சந்தேகம் தட்டியது அதனால் அவருடைய ஜோலிகளைச் சிறிது கவனிக்க ஆரம்பித்தேன் கொஞ்சம் புரியும்படியாகச் சொல்லவேண்டுமானால் வீ ஆடி வேலையில் ஈடுபட்டேன் என்று வைத்துக் கொள்ளேன்.

அவர் கிராப் வைத்துக்கொண்டு வந்து நின்றபோதே என் மனதில் 'பக்' என்றது இவ்வளவு கிதானபுத்தியுடன் இருந்த பிள்ளைக்கு கிராப் வைத்துக் கொள்ளும் துணிவு இவ்வளவு சீக்கிரத்தில் ஏற்பட்டிராது இது ஏதோ சகவாசதோஷத்தின் விளைவுதான் என்று மாத்திரம் தீர்மானித்துவிட்டேன் இவருடன் வீட்டுக்கு வரும் சிநேகிதர்களும் அப்படிப்பட்ட பேர்வழிகளாகத்தான் காணப்பட்டார்கள்.

முதன் முதலாக கிராப் வைத்துக்கொண்ட பெருமை போட்டோ எடுத்துக்கொண்டார். அதன் காப்பி ஒன்றை என் கணவரிடம் கொடுத்தார்.

அதைத்தான் முதலில் நான் உனக்கு அனுப்பி வைத்தேன்.

நான்கு மாதத்துக்கு முன் எதிர் வீட்டில் யாரோ புதுக் குடித்தனம் வந்தார்கள்—தாயார், பெண், இரண்டு பேர்கள். பெண்ணுக்கு பதினேழு அல்லது பதினெட்டு வயதிருக்கும் இன்னும் கலியாணம் ஆனதாகத் தெரியவில்லை. தலை கவிழ்ந்து போகிற நாகரிகம்!

நேற்றுதான் கேள்விப்பட்டேன் வீட்டுக்காரர்களுக்கும் இவர்களுக்கும் ஒத்துக்கொள்ளவில்லையாம்' ஆகவே இவர்களை வீட்டைக் காலிசெய்யச் சொல்லிவிட்டார்களாம் அதனால்வேறு வீடு பாத்துக்கொண்டிருக்கிறார்களாம்.

நேற்று காலை மாடிக்குச் சென்றிருந்தேன் அங்கே ஜன்னலின் மீது ஒரு புத்தகம் வைக்கப்பட்டிருந்தது என்ன புத்தகம் என்று பாரப்பதற்காக அதை எடுத்துப் பிரித்தேன் அதனுள் ஒரு புகைப்படம் இருந்தது அதை பார்த்தேன். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது.

உடனே அதை எடுத்துக்கொண்டு போய் என் கணவருக்குக் காட்டினேன் 'சரிதான். நாம் சந்தேகப்பட்டது சரியாகத்தான் போய்விட்டது.' என்றார் என் கணவர் சிரித்துக்கொண்டே.

அந்தப் புகைப் படத்தை உடனே உனக்கு அனுப்பி வைக்காவிட்டால் நான் உனக்குப் பெருந்துரோகம் செய்தவள் மாதிரி தோன்றி விட்டது எனக்கு அதனால் தான் அதை உனக்கு அனுப்பி வைத்திருக்கிறேன்.

ஒருவர்தான் உன் கணவர். இன்னொருத்தி இருக்கிறாளே அவள் யார் என்று புரியவில்லையா? ஆமாம் எப்படிப் புரியும் பாவம், உனக்கு? அவள் தான் எதிர் வீட்டில் குடி வந்திருக்கும் பெண்!

நீ இனி அங்கு தாமதிக்கும் ஒவ்வொரு செகண்டும் உன் கழுத்துக்கு வளரும் சுருக்குக் கயிறுதான் ஆகையால் உடனே இங்கு வந்து சேரவும்.

மேற்கொண்டு அதிகம் கடிதத்தில் எழுதுவதற்கில்லை நேரில் விவரமாய்ச் சொல்லுகிறேன் அது ஒரு பெரிய 'பாரதம்' போயேன்' என்று எழுதியிருந்தாள். வீட்டுக்கார மாமி

கடிதத்தைப் படித்து முடித்ததுதான் என் தலை கிறுவென்று சுழன்றது சரி, குடி முழுகிப் போய்விட்டது என்று அப்பொழுதே தீர்மானித்துவிட்டேன். அந்த நிமிஷமே சென்னைக்குப் புறப்பட்டுவிட வேண்டும்போலிருந்தது எனக்கு. அப்பொழுதே புறப்பட்டால் இதையெல்லாம் அப்பா, அம்மாவிடம் சொல்ல வேண்டும். அவர்கள் வீணாகக் கஷ்டப்பட்டுப் போகிறார்கள். எப்படியும் இன்று இல்லாவிட்டால் ஒரு நாளைக்கு இது அவர்களுக்குத் தெரியாமல் இருக்கப் போகிறதில்லை. அப்பொழுது தானாக தெரியட்டும். என்னமோ நான்கு மாதங்கள் கழிந்தமாதிரி இந்த ஒரு நாளும்தான் கழியட்டுமே. மறு தினமே போகலாம் என்றுபேசாமல் இருந்துவிட்டேன்.

அன்று ஒரு வேலையிலும் என் புத்தி செல்லவில்லை. சாப்பிடப்பிடிக்கவில்லை. படுத்தால் தூக்கம் வரவில்லை கஷ்டப்பட்டுச் சிறிது கண்ணயர்ந்தாலும் புகைப் படத்தில் காணப்பட்ட அந்த 'எதிர் வீட்டுக்காரி' கொசவம் வைத்த புடவை, பப் வைத்த ரவிக்கை, கோண வகிடு, தொடைவரையில் தொங்கும் பின்னல், அதில் கொத்து கனகாம்பரம், காதில் தொங்கட்டம், கழுத்தில் ஒரு வடம் செயின் கையில் இரண்டு வளையல்கள் ஆகியவைகளுடன் சொப்பனத்தில் எதிரேவந்து நிற்கிருள். அவள் வந்து நிற்பதோடு மாத்திரமில்லை. என் கணவர் அவளுடன் ஸரஸ ஸல்லாபங்கள் செய்து கொண்டிருக்கிறார் அப்படியே அவளைச் சுட்டுத்தள்ளிவிடலாமாவென்று ஆத்திரம் பொங்கிக்கொண்டுவந்தது. இந்த கோரக் காட்சியைப்பாரத்துச் சகிப்பதைவிட மென்னியைப் பிடித்துக்கொண்டு பிராணனை விட்டுவிடலாம் என்று எனது மென்னியை இரு கைகளாலும் அழுத்திப் பிடித்துக் கொண்டேன். அடுத்த செகண்டே 'ஓ...'வென்றுகூச்சலிட்டிருக்கிறேன்.

இதைக் கேட்டுவிட்டு, என் பக்கத்தில் படுத்துக்கொண்டிருந்த என் தாயார், 'கல்யாணி! கல்யாணி! என்னது இது! எழுந்திரு! எழுந்திரு' என்று என்னை எழுப்பினுள்.

உடனே விழித்துக் கொண்டேன்.

'ஆகா! என்ன பயங்கரமான சொப்பனம்! வீட்டில் திருடன் புகுந்துவிட்ட மாதிரி சொப்பனம் அம்மா' என்று உண்மையைச் சொல்லாமல் விஷயத்தைக் கொஞ்சம் திரித்துக் கூறினேன்.

அதற்குப் பிறகு எனக்குத் தூக்கமே வரவில்லை மனதில் அலை அலையாக எண்ணங்கள் வந்து மோதி என்னை என்னவோ செய்துவிட்டன சித்திரவதை என்று சொல்லுவார்களே அந்த மாதிரி சொல்ல முடியாதபடி மனது தவியாய்த் தவித்துவிட்டது அன்றைய இரவு எல்லா இரவையும் போலா இருந்தது! நரக ராத்திரியாகவல்லவோ இருந்தது!

மெதுவாக அன்றைய பொழுது கழிந்து மறுநாள் சென்னைக்குப் புறப்பட்டுவிட்டேன் 'முதன்முதலில் குழந்தையைச் சுபமாகக்கொண்டு விடுறோம் யாராவது சுமங்கலிகள், கூடப்போக வேண்டும்' என்று என் தாயார் என்னுடன் வந்தாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு மணியிருக்கும் ஸ்டேஷனிலிருந்து ஒரு ஜட்காவை அமர்த்திக்கொண்டு வீடு வந்து சேர்ந்தோம்.

என் கணவர் மாடியில் நின்றுகொண்டிருந்தார் அந்த 'எதிர் வீட்டுக்காரி'—சொப்பனத்தில் தோன்றிய மாதிரியே—எதிர் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தாள் மனதில் கொஞ்சநஞ்சமிருந்த சந்தேகமும் நிவாத்தியாகிவிட்டது.

வண்டியை விட்டிறங்கி நாங்கள் உள்ளே சென்றோம்! 'வாடியம்மா, வா!' என்று வரவேற்றுவிட்டு 'ஜெயா வாடி நீ! அப்பாவை அப்படியே உரித்துக்கொண்டு வந்திருக்கிருள்.' என்று சொல்லிக்கொண்டே அம்மா இடுப்பில் இருந்த குழந்தையை எடுத்துக்கொண்டு அதன் தலையை முகர்ந்துவிட்டு நெற்றியிலும் தாடையிலும் கணக்கில்லாத முத்தங்களை இட்டாள் வீட்டுக்கார மாமி

மாடியில் இருந்த என் கணவர் கீழே இறங்கி வரவே இல்லை. சாவியை வாங்கிக்கொண்டு வருவதற்காக மாடிக்குச் சென்றேன்:

நாங்கள் வந்தபோது வெளிவராந்தாவில் நின்றுகொண்டு தெருப்பக்கம் பார்த்துக்கொண்டிருந்த என் கணவர் இப்பொழுது மாடியறையில் உட்கார்ந்துகொண்டு ஆழ்ந்து படிக்கிறமாதிரி ஏதோ புத்தகத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார், நான் மெதுவாக அவரருகில் போய்நின்றேன் நான் வந்தது தெரியாததுபோல புத்தகத்தைப் பார்த்தபடியே தலையைக் கவிழ்த்துக்கொண்டிருந்தார்

'ரொம்பவும் சுவாரஸ்யமான கட்டம்போலிருக்கிறது!' என்றேன் மெதுவாக.

உடனே அவர் தலையை நிமிர்த்தி என்னைப்பார்த்து 'என் கடிதம் வந்ததா இல்லையா?' என்ருர.

'வந்தது' என்றேன்.

'அப்படியானல் எதற்காக இப்பொழுது வந்தாய்? நான்தான் பிறகு எழுதுகிறேன் என்று எழுதியிருந்தேனே?" என்ருர.

சரிதான் வரும்பொழுதே வரவேற்பு நன்ருகத்தானிருக்கிறது என்று எண்ணிக்கொண்டு. 'அப்படித்தான் எண்ணிக்கொண்டிருந்தேன் அப்புறம் நாள் ஒன்றும் நன்ருக இல்லை இந்த நாள்தான் நன்ருக இருக்கிறது என்ருர் அப்பா அதனல் இன்றே வந்துவிட்டேன் என்றேன்.

'நான் ஒன்று சொன்னல் நீ ஒன்று செய்கிறது! இந்த வீண் பெரியதனமெல்லாம் உனக்கு எதற்கு? அப்படியானல் உன் அப்பாவினுடைய வார்த்தைக்குத்தான் மதிப்பு? என்னுடைய வார்த்தைக்கு மதிப்பு இல்லை?' என்ருர்.

'உங்களுடைய வார்த்தைக்கு மதிப்பு இல்லைஎன்று யார் சொன்னது? நாள் நன்ருக இருக்கிறதேயென்று வந்தேன் என்றேன்.

'நாளுமாயிற்று நட்சத்திரமுமாயிற்று சொன்ன வார்த்தைக்கு மதிப்பில்லையாது! கூட இன்னும் யார் வந்திருக்கிறது?' என்று அதட்டிய குரலில் கேட்டார்.

'கூட அம்மா வந்திருக்கிருள்' என்றேன்.

அதற்குமேல் அவர் ஒன்றும் சொல்லவில்லை மறுபடியும் தலையைக் கவிழ்த்துக்கொண்டு முன்பு விட்ட இடத்திலிருந்து படிக்கிறமாதிரி பாவனை செய்தார்.

'உள்சாவி வேண்டும்' என்றேன்.

உடனே மேஜைமேலிருந்த சாவிக்கொத்தை எடுத்துக் கீழே போட்டார்

இதற்குமேல் அங்கு அதிகம் ஒன்றும் பேசக்கூடாதென்று சாவியை எடுத்துக்கொண்டு கீழே இறங்கிவந்துவிட்டேன்.

சமையல் அறையைத் திறந்து சமையல் செய்தேன். அவர் மாடியிலிருந்து இறங்கி வெளியே போய்விட்டார். இரவு எட்டுமணிக்குதான் வீடு திரும்பினர்.

'அதென்ன குழந்தையைப் பார்க்காமலே போய்விட்டார்? ஸங்கோஜம் போலிருக்கிறது பாவம்!' என்ருள் என் தாயார.

அவளுக்கு என்னதெரியும் பாவம்! பழையமாதிரி என்று எண்ணிக்கொண்டிருக்கிருள். நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

அன்றிரவு அவர் என்னுடன் சரியாகவே முகம் கொடுத்துப் பேசவில்லை உம்மென்று வைத்துக்கொண்டிருந்தார் முகத்தை

மறுநாள் அம்மா ஊருக்குப்போய்விட்டாள்.

புருஷர்கள் ஆபீஸுக்குப்போய்விட்டார்கள் வீட்டில் நானும் வீட்டுக்கார மாமியும்தானிருந்தோம்.

எதிர் வீட்டில் அவர்கள் குடித்தனம் வந்து எவ்வளவு நாளாயிற்று மாமி? என்று வீட்டுக்கார மாமியைக் கேட்டேன்

'நாலு மாதமாகிறது' என்ருள்

'அவர்கள் இரண்டே பேர்தானு?' என்றேன்.

'அவர்கள் இரண்டு பேர்தான் இருக்கிறார்கள் தகப்பனர் இருப்பதாகவும் அவர் கல்கத்தாவில் உத்தியோகத்தில் இருப்பதாகவும் பெண் சொல்லுகிருள் அண்டை அயலில் உள்ளவர்கள், தாயார்காரி பால்யத்திலேயே கணவனை விட்டுப் பிரிந்து நாடகக் கம்பெனி ஒன்றில் சேர்ந்துவிட்டதாகவும். அப்பொழுது ஒரு மிராசுதாருக்கும் இவளுக்கும் சிநேகம் ஏற்பட்டதாகவும், அந்த மிராசுதாருக்கு இந்தப் பெண் பிறந்ததாகவும். இது மிராசுதாரின் குடும்பத்தினருக்குத் தெரிந்து. தகராறு ஏற்பட்டு. மிராசுதார ஜீவனும்சம் கொடுத்து இவளுடன் இருந்த தொடர்பைக் கத்தரித்துக்கொண்டதாகவும். பிறகு அந்த நாடகக் கம்பெனி திவாலாகி. இவள் கெட்டழிந்துக் கடைசியாக இங்கு வந்திருப்பதாகவும். பெண் சினிமாவில் நடிப்பதாகவும் சொல்லுகிருர்கள் அது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியாது அவர்கள் இரண்டு பேரைத் தவிர அவர்களுக்குப் புருஷ சகாயம் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை என்ருள் மாமி.

'ஆமாம் இவர்கள் இரண்டுபேரும் எப்பொழுது ஒன்ருகப் போட்டோ பிடித்துக்கொண்டார்கள்!' என்றேன்.

'அதெப்பொழுது பிடித்துக்கொண்டார்களோ அம்மா. ஒரு நாள் மாடிக்குச் சென்றபோது அங்கே ஒரு புத்தகத்தினுள் இது இருந்தது அவ்வளவுதான் எனக்குத் தெரியும் ஆனல் தாயார, பெண் இரண்டு பேருடைய நடத்தை மாத்திரம் மொத்தத்தில் நன்ருக இல்லை யென்று கேள்வி எதிர் வீட்டில் அவர்கள் பாவம் இவர்களுடைய பூர்வோத்திரங்கள் தெரியாமல் இவர்களுக்கு இருக்க இடம் விட்டுவிட்டார்கள், கடைசியில் பார்த்தால் காலையிலும் மாலையிலும் விதம் விதமாக மோட்டார்களிலும், ரிக்ஷாக்களிலும் மனிதர்கள் வந்து இறங்குவதும் அவைகளில் இவர்கள் ஏறிக்கொண்டு போவதும் வீட்டுக்காரர்களுக்குப் பிடிக்கவில்லை அதனல் அவர்கள் இடத்தைக் காலி செய்யச் சொல்லிவிட்டார்களாம், அவர்களும் வேறு வீடுபார்த்துக்கொண்டிருக்கிருர்களாம், என்ருள்.

சரிதான். இவர் வேறு வீடு பார்ப்பதின் மர்மம் தெரிந்துவிட்டது என்று மனதில் எண்ணிக்கொண்டு, அவர்கள் இங்கு வந்து போகும் வழக்கம் உண்டா? என்று சிரித்துக்கொண்டே கேட்டேன்.

'அவர்கள் யாரும் இங்கே வருவது கிடையாது. அங்கிருந்து அவர்கள் வீட்டு வேலைக்காரி மாத்திரம் உன் கணவரிடம் ஏதாவது கடிதம் கொடுத்துவிட்டுப் போவது வழக்கம். 'உன் கேள்வியின் அர்த்தத்தை நான் புரிந்து கொண்டுவிட்டேனடியம்மா' என்ற தோரணையில் மாமியும் சிரித்துக்கொண்டே பதில் சொல்லிவிட்டு, அந்த வேலைக்காரி இங்கு அடிக்கடி வந்துபோவதிலிருந்தும அந்த போட்டோவைப் பார்த்ததிலிருந்தும் எனக்கு ஏதோ சந்தேகம் தட்டியது அதனல்தான் உனக்கு அந்த மாதிரி கடிதம் எழுதினேன் என்று ரொம்ப சமத்காரமாகச் சொன்னுள்

'நான் ஊருக்குப் போன பிறகு என் மாமியார், நாத்தனர்! யாரும் வரவில்லையா? இங்கே' என்றேன்.

'உன் மாமியார ஒருதரம் இங்கே வந்திருந்தாள் ஊரில் நிலம் ஏலத்தில் போய்விடுகிறது பணத்துக்கு என்ன செய்வது? என்று கேட்டாள் 'இப்பொழுது கையில் பைசாகூடக்கிடையாது நான் நேரில் வந்து பார்த்துக்கொள்கிறேன் நீ போய்ச் சேர்' என்று பதில் சொல்லி மறு தினமே அவளை ஊருக்கு அனுப்பிவிட்டார் முன் மாதிரி அவளுக்கு செலவுக்குப் பணம் கூடச் சரியாக அனுப்புவது கிடையாதாம் ரொம்பவும் கஷ்டப்பட்டுக் கொண்டாள் பாவம்!' என்று சொல்லி விட்டு 'இன்னெரு விஷயம் சொல்ல மறந்துவிட்டேனே உன்னுடைய நல்ல காலம்தான் என்று நினைக்கிறேன் நீ வரும் வேளைக்கு அவர் ஊரில் இருந்தாரே நான்கு மாதம் ஆயிற்று. அவர் சேர்ந்தாற்போல் ஒரு வாரம் வீட்டில் தங்கியதில்லை 'ரொம்ப அலைச்சல் போலிருக்கிறது? ஆபீஸ் நிர்ப்பந்தமோ? என்று என் கணவர் ஒருநாள் பேச்சுவாக்கில் கேட்டார் 'புதிதாக ஒரு மானேஜர் வந்திருக்கிருர் அவர் எல்லா பொறுப்புகளையும் என் மீதே சுமத்திவிட்டார் அத்துடன் தான் எங்கு போனலும் நான் கூடவே வரவேண்டுமென்கிருர் ரொம்ப நிர்ப்பந்தமாக இருக்கிறது என்று பதில் சொன்னர் உன் கணவர். "அதெல்லாம் நல்லதுக்குத்தான் ஸார் இதனல் உங்கள்மீது மானேஜருக்கு அதிகமான விச்சுவாஸமும் நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கிறது என்றுதான் அர்த்தம். ஏதாவது சம்பளத்தில் உயர்வு உண்டா?" என்று கேட்டார். 'அதற்கென்ன. இருபத்தைந்து ரூபாய் உயர்த்தியிருக்கிருன். பல அதிகாரங்கள் கொடுத்திருக்கிருன். எல்லாம் உண்டுதான். இருந்தாலும் தொல்லை அதிக

மாய் இருக்கிறதே! நேற்று தான் மதுரையிலிருந்து வந்தோம் நாளைக்கு பெங்களூருக்குப்போக வேண்டுமாம். அலைச்சல் உடம்புக்கு ஒத்துக்கொள்ளவில்லையே' என்ருர் மறுநாள் பெங்களூருக்குப்போவதாகவும் வருவதற்கு இரண்டு மூன்று தினங்களாகுமென்றும் சொல்லிவிட்டுப் போனார். அவர் சொல்லிவிட்டுச் சென்ற மறுநாள் மாலை என் கணவர் பீச்சுக்குப் போயிருந்தார். அப்பொழுது உன் கணவர் அங்கே யாரோ ஓர் பெண்ணுடன் வேகமாகப் போய்க்கொண்டிருந்தாராம். பார்த்தால் எதிர வீட்டுக்காரி மாதிரிதான் இருந்ததாம், ஆனால் சரியாகப் பார்க்கவில்லையாம். கொஞ்ச தூரத்தில் அவர்கள் போய்க்கொண்டிருந்ததால் நன்ருகத் தெரிந்துகொள்ள முடியவில்லையாம் அருகில் சென்று பார்க்கவேண்டும் என்ற யோசனைதானும் ஆனால் ஏதாவது விபரீதமாக நினைத்துக் கொள்ளப்போகிருரேயென்று பேசாமல் இருந்துவிட்டாராம். கூடச் சென்றவள் யார் என்று நிச்சயமாகத் தெரியவில்லையாமே தவிர அவர் மாத்திரம் உன் கணவர்தானும் அதில் சந்தேகமே இல்லையாம் என் கணவர் பீச்சுக்குப் போய்விட்டு ராத்திரி வந்து 'ஒரு அதிசயம் தெரியுமோ உனக்கு?' என்ருர் திடீரென்று இந்த மாதிரி கேட்டால் என்னவென்று பதில் சொல்வது? 'எனக்கு ஒன்றும் தெரியாதே' என்றேன் 'இவ்வளவுதானு நீ! பெங்களூர், திருவல்லிக்கேணி பீச்சுக்கு வந்துவிட்டது' என்ருர் சிரித்துக்கொண்டே. நான் ஒன்றும் புரியாமல் விழித்தேன் 'விளையாட்டெல்லாம் அப்புறம் இருக்கட்டும் விஷயத்தைச் சொல்லுங்கள்; என்றேன். அப்புறம்தான் அங்கு கண்ட மேற் சொல்லிய விஷயத்தைச் சொன்னார். நம்முடன் பெங்களூருக்குப் போய் வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றவர் திருவல்லிக்கேணி பீச்சில் 'யாருடனோ ஜோராக உலவிக்கொண்டிருக்கிருர்! எப்படியிருக்கிறது விவகாரம்? இந்தக் காலத்தில் யாரையுமே நம்புவதற்கில்லை,' என்று கஷ்டப்பட்டுக்கொண்டார்' என்று மாமி சொல்லிக்கொண்டிருக்கையில் என் கணவர் ஆபீஸிலிருந்து வந்தார்.

'சரிதான் கல்யாணி லேசுப்பட்டவளில்லை வீட்டு வழி திரும்பாதவரை ஆபீஸ் விட்டவுடனே நேராக வீட்டுக்கு வந்து சேரும்படி செய்துவிட்டாளே பேஷ்! பரவாயில்லை. கெட்டிக்காரிதான் என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே மாமி எழுந்து உள்ளே சென்றுவிட்டாள்

இவர் மாடிக்குச் சென்று ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் கீழே இறங்கி வந்தார். நான் காப்பியை எடுத்துக்கொண்டு வந்து அவரிடம் கொடுக்கப் போனேன்

'நான் இப்பொழுதுதான் மானேஜருடன் ஹோட்டலில் காப்பி சாப்பிட்டுவிட்டு வருகிறேன். ஆகையால் எனக்கு காப்பிவேண்டாம். மானேஜரும் நானும் ஒரு ஆட்டத்துக்கு சினிமாவுக்குப் போகிறோம்' ராத்திரி வர நேரமாகும். அதைச் சொல்லிவிட்டுப் போவதற்குத்தான் வந்தேன் எனக்காகக் காத்துக்கொண்டிருக்க வேண்டாம். நீ சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொள்ளலாம் ராத்திரி நான் வந்தாலும் வருவேன் இல்லாவிட்டால் மானேஜா வீட்டிலேயே படுத்துக்கொண்டாலும் படுத்துக்கொண்டுவிடுவேன்' என்று சொல்லிவிட்டு என் பதிலைக்கூட எதிர்பார்க்காமல் போய்விட்டார்.

'கல்யாணியின் 'மருந்து' பிரமாதமாக வேலைசெய்துவிட்டது. பேர்வழி அடியோடு மாறிவிட்டார் என்றல்லவோ பார்த்தேன் இவ்வளவுதானு ஸமாசாரம்?' என்ருள் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த மாமி.

எனக்கு அழமாட்டாத துக்கம், பேசாமல் உள்ளே போய்விட்டேன்

சாப்பிடப் பிடிக்கவில்லை எல்லாவற்றையும் அப்படியே மூடிவைத்துவிட்டு மாடியறைக்குப் போய்விட்டேன்

மனதில் ஒரே கலவரம். இன்னது செய்வதென்று தோன்றவில்லை. இனி இதற்கு ஏதாவது வழிகாணு விட்டால் அடியோடு விபரீதமாய்ப் போய்விடும் என்று தோன்றிவிட்டது. இந்த ஸமயம் மாமியாரை இங்கு வரவழைப்பது நல்லதென்று தோன்றியது. கொஞ்ச நாளைக்குக் குழந்தைக்கு சகாயமாய் வந்திருந்தால் நல்லது என்று உடனே வரும்படியும் அவருக்கு ஓர் கடிதம் எழுதினேன்

கடிதம் எழுதி முடித்ததும் கடிதம் எழுதுவதற்காகக் கீழே வைத்துக் கொண்டிருந்த புத்தகத்தை நான் மாட்டினும் பிரித்துப் பார்த்தேன் அதனுள் ஓர் கடிதம் இருந்தது

அதை எடுத்துப் படித்தேன் சிறிது நேரம் மூச்சே நின்றுவிட்டது மார்பு வெடித்துவிடும் போலிருந்தது!



பழைய பேப்பர் வியாபாரி:—'அடே நீ என்னு சாமி; கரைக்டா நிறுக்கறுங்கிறியே!! இது என்னு சவாரு; கூருர்ரா எடைபோட!!!'

(தொடரும்)

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்று கல்யாணமாகவேண்டிய பெண்களைப்பற்றிப் பேசுகையில் சொல்வது வழக்கமல்லவா? ஆனால், எனக்குத் தை பிறப்பதற்கு முன்பே வழி பிறந்துவிட்டது. ஆனால், அதனால் எனக்கு ஏற்படவேண்டியது அளவு கடந்த சந்தோஷமல்லவா? எல்லோருக்கும் ஏற்படக்கூடியது அதுதானே? எனக்கு ஏற்பட்டது கொடிய துக்கம் தான், அப்போது. அதாவது எனக்கு விவாகயத்தனம் நடந்தபோது.

நான் கல்லூரியில் சேர்ந்த மறுவாரத்திலேயேஎன் உள்ளக்கோயிலை ஆக்கிரமித்துக்கொண்டவள் வனஜா. கள்ளங் கபடமற்ற அவளது பேச்சும், கலீர் கலீர் என்ற சிரிப்பும் நொடிப்பொழுதிலே உலகமெல்லாம் சுற்றிவரக்கூடிய நயனங்களின் வீச்சும், குலுக்கி மினுக்கி... தளுக்கான நடையும் 'அப்டு டேட்டாக' விதவிதமாகச் செய்து கொள்ளும் அலங்காரங்களும் ஒன்றுகூடி என்னை அந்த மோகினிக்கு அடிமையாக்கின அவளது ரூபலாவண்ய... சிங்காரமெல்லாம் ஒருபுறமிருக்க... அவளது போக்கும் கொள்கைக... எனக்கு மிகவும் பிடித்திருந்தன ...ண்டு கைகளும் கூடித் தட்டினால்தானே சத்தம்? நான் மட்டும் வனஜாமீது காதல்கொண்டு என்ன பிரயோசனம்? அவள் உள்ள நிலை யாதோ? அதை எப்படித் தெரிந்து கொள்வது? சரித்திர காலத்துத் தலைவன்போல சதா காலமும் இதைப்பற்றியே எண்ணமிட்டு ஏங்கிக்கொண்டிருந்தேன். கடைசியாக என் தபசுக்கு அந்தப் பெண் தெய்வம் இரங்கிற்று என்றுதான் சொல்லவேண்டும். சமயசந்தர்ப்பங்கள் எனக்கு அனுகூலமாக, வசமாக அமைந்து கொண்டன அவளது உள்ள நிலையை உணர்ந்துகொள்ள வனஜா என் காதலை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டாள். இந்த நற்செய்தியை அறிந்தபோது என் மனம் கொண்ட சந்தோஷத்தை விவரிக்கச் சொற்களே இல்லை.

ஆனால், என் சந்தோஷம் நீடிக்க நான் கொடுத்து வைக்கவில்லை. வனஜாவை எட்ட இருந்து கண்டு களித்தது மூன்று மாதம் கிட்ட நெருங்கிச் சல்லாபித்தது மூன்றே நாள் அந்த மூன்று நாட்களுக்குள் என்னத்தைப் பிரமாதமாகப் பேசிவிட முடியும்? அறிமுகப்படலம் கூடச் சரிவரப் பூர்த்தி பெறவில்லை. அதற்குள் பேரிடிபோன்ற செய்தி. திங்களன்று கல்லூரியில் அவளைக் காணவில்லை என் மனம் வேதனைபட்டது பிறகு செவ்வாய் புதன்... என்று நாலைந்து நாட்களாயின. வனஜாவை காணவேயில்லை யாரைக் கேட்பது; எப்படிக் கேட்பது? வகை புரியாமல் தவித்துத் தத்தளித்துக்கொண்டிருந்தேன். ஊமையன் கண்ட கனவை வெளியிட முடியாமல் தவிப்பதுபோல சுமார் இருபது நாட்களுக்குப்பின் மெல்ல ஒரு தகவல் கிடைத்தது. அவள் தாயார் மரணப் படுக்கையிலிருப்பதாக அவள் மாமா வந்து கையோடு அழைத்துப்போய் விட்டாராம். 'கண்ணிலான் பெற்றிழந்தான்' என்கிற கதை போலாயிற்று என் நிலை. முன்பின் தெரியாத வனஜாவின் தாயார் குணம் பெறவேண்டுமெனத் தெய்வத்தை பிரார்த்தித்தேன். குணம பெற்ருல் அவள் வராவிட்டாலும் துயர வருவாள் ஏற்படாமலிருக்குமல்லவா மாவது தன் தாய் சம்பந்தமாக? அவள் துயரற்ருல் என் மனம் பொறுக்குமா?

எத்தகைய பைத்தியக்கார நினைவு? நான் அவள் சம்பந்தமாக இப்படியெல்லாம் ஏதேதோ சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் அவள்? அவள் என்னைப்பற்றி ஏதாவது எண்ணுவாளா? என் ஞாபகமாவது இருக்குமா? எப்படி இருக்கும்? உறவெல்லாம் மூன்றே நாட்கள்தானே? மறந்திருப்பாள்—இப்படியெல்லாம் எண்ண அலைகள். நாட்கள் வாரமாகி, பட்சமாகி, மாசமாகி முடிவில் வருஷம் என்கிற மலையாகவும் வளர்ந்துவிட்டது ஆனால்வனஜா பற்றி ஒரு தகவலுமில்லை. எனக்கோ கனவிலும் நனவிலும் அவளைப்பற்றின சிந்தனை தவிர வேறில்லை. இந்நிலையில் திடுதிப்பென்று என் தகப்பனாரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

"அன்புள்ள சீனுவுக்கு.

இப்பவும் வருகிற உத்தராயணத்தில் உனக்குக் கல்யாணம் செய்துவிடுவதென்று நாங்கள் தீர்மானித்திருக்கிறோம் மூன்றுவருஷமாய் ஜாதகத்தின் மேல் ஜாதகமாக வந்து மோதிக்கொண்டிருக்கின்றன இதுவரை ஒன்ருவது மனசுக்கு சமாதானமாக இல்லாததால் இதைப்பற்றி இதுவரை உன்னிடம் பிரஸ்தாபிக்கவில்லை ஆனால் சில தினங்கள் முன்வந்த ஜாதகமொன்று மனதிற்கு ரொம்பவும் பிடித்தமாக இருந்தது அதிர்ஷ்டமுள்ள ஜாதகம் இடமும் நல்ல இடம்: குலங்கோத்திரம் பரம சிரேஷ்டம் எல்லாவற்றையும்விட முக்கியமான அம்சமென்னவென்ருல் பெண் பத்தரைமாற்றுத் தங்கம், நாங்கள் போயப் பெண்ணைப் பார்த்து வந்தோம் மற்ற விஷயங்களும் பேசி முடித்து விட்டோம். நீ பெண்ணைப் பார்த்துச் சம்மதம் கொடுத்தால் தை பிறந்ததும் முதல் முகூர்த்தத்திலேயே கல்யாணத்தைச் செய்துவிடலாம். ஏனென்ருல் பெண்ணின் தாயாருக்கு உடல் நலமில்லையாம் துரிதமாகக் கல்யாணத்தை நடத்திவிடவேண்டுமென்று பெண் வீட்டார் துடிக்கிருர்கள் பெண் பிடித்தமில்லை என்று நீ சொல்லிவிட்டால், உன்னை நாங்கள் கட்டாயம் செய்யவில்லை திருக்கழுக்குன்றத்திலே தான் பெண் இருக்கிருள் விலாசமும் இத்துடன் வைத்திருக்கிறேன் வருகிற ஞாயிற்றுக்கிழமை நீ வரு

வதாக நானே கடிதம் அவர்களுக்கு எழுதிவிட்டபடியால், தவருமல் போய் வந்து திங்கட்கிழமைத் தபாலிலேயே, எங்களுக்குப் பதிலெழுது. மற்றவை பிறகு. ஆசீர்வாதம்.

—சங்கர நாராயணய்யர்''

இந்தக் கடிதத்தால் எனக்கேற்பட்ட மனக் கசப்புக்கு அளவே இல்லை உள்ளத்தை எங்கேயோ பறி கொடுத்துவிட்டு மூளை கலங்கி நிற்கிற சமயத்திலே 'சிவபூஜையிலே கரடி புகுந்தது' போலத் தகப்பனுரிடமிருந்து இப்படி ஒரு கட்டளை வந்தால் எந்த வாலியன் உள்ளம்தான் கசந்து வழியாது? என்ன செய்வதென்று புரியாமல் ஒருநாள் பூராவும் தவித்தேன். உடம்பு சரியில்லை என்றோ. வேறு ஏதாவது காரணம் காட்டியோ எழுதினல் சும்மாவிட மாட்டார் அப்பா போக இஷ்டமில்லை என்றெழுதினலோ வந்தது மோசம்! வனஜாவைப் பார்த்த கண்ணுல் மற்றொரு பெண்ணைப் பார்க்கவோ இஷ்டமில்லை அவளைப் பற்றின தகவலோ ஒன்றுமேயில்லை அவள் விலாசம் கூடத் தெரியாது எனக்குத்தான் அவள் விலாசம் தெரியாதே தவிர அவளுக்கு என் விலாசம் பிரமாதமல்ல பெயரைப் போட்டுக் காலேஜ் விலாசத்திற்குக் கடிதமெழுதினல் 'ஜாம் ஜாம்' என்று என் கையில் வந்து சேரும். அவள் எழுதவில்லை ஏன் எழுதவில்லை? அதுதான் புரியவில்லை.

வனஜா விஷயம் ஒரு புறமிருக்க அப்பா கடிதத்திற்கு என்ன செய்வது? நான் சின்னக் குழந்தை முதலே பெற்றோருக்கடங்கிய பிள்ளை என்பது பிரசித்தம். ஊரில் அக்கம் பக்கம் உள்ள பெற்றோர்கள் தத்தம் பிள்ளைகளைக் கண்டிக்கும்போது 'பட்டாமணியகாரராத்து சீனுவைப் பார், எத்தனை சமத்தாய் அப்பா அம்மாக்கு அடங்கி நடக்கிருன் என்று நீயும் இருக்கிருயே!' என்று என்னை உதாரண புருஷனய்ச் சுட்டிக் காட்டுவது வழக்கம் அதிலே எனக்குப் பெருமை அசாத்தியம் 'தொட்டில் பழக்கம் இடுகாடு மட்டில்' என்பது போலச் சின்னக் குழந்தையிலிருந்து ரத்தத்தில் ஊறி உரம்பெற்ற இந்தச் சுபாவம், வயது வந்து வளர்ந்து "காலேஜ் ஸ்டுடெண்ட்" ஆன பிறகும் என்னிடமிருந்து மாறவில்லை ஆகவே திருக்கழுக்குன்றம் போய்க் கடனைக் கழித்துவிட்டு வருவது என்று முடிவு கட்டினேன். ஆம் அங்கே பெண் நன்ருயிருக்கமாட்டாள் என்பது என் தீர்மானம் அவள் அழகாயிருந்தாலும் வனஜா கொலுவிருக்கும் என் இதயக் கோயிலில் அவளுக்கு இடம் கிடைக்கப் போவதில்லை ஆகவே. 'தங்கள் உத்தரவுப்படியே போனேன். வந்தேன் பெண் எனக்குப் பிடிக்கவில்லை' என்று தட்டிக் கழிக்க வேண்டியதுதானே? அது கடனைக் கழிக்கிற முறைதானே? ஆகவே மேற்கண்ட என் தீர்மானத்தை உடனே இரண்டு வரியில் எழுதித் திருக்கழுக்குன்றத்திலேயே போஸ்ட் செய்துவிடுவது என்கிற தீர்மானத்துடன் கையில் ஒரு தபால் கவரும்கூடத் தயாராக எடுத்துக்கொண்டு ஞாயிறன்று திருக்கழுக்குன்றத்தை நோக்கிப் பிரயாணமானேன்.

திருக்கழுக்குன்றம் ஒரு திவ்யமான ஸ்தலம் என்றும், அங்கே உச்சிவேளையில் எங்கிருந்தோ ஒரு கழுகு வந்து பிட்சை செய்து செல்லுகிறதென்றும் இன்னும் அந்த க்ஷேத்திரத்தைப்பற்றி என்னவெல்லாமோ கேள்விப்பட்டிருந்தேனே தவிர அதுவரையில் அந்த ஊருக்குப் போனதே கிடையாது

செங்கல்பட்டிலே ரெயில் நின்றதும் இறங்கி ஒரு கப் காப்பி சாப்பிட்டுவிட்டு ஸ்டேஷனுக்கு வெளியே வந்து அங்கே தயாராக நின்றுகொண்டிருந்த திருக்கழுக்குன்றம் செல்லுகிற பஸ்ஸிலே ஏறி உட்கார்ந்தேன். நான் உட்கார்ந்தபோது பஸ்ஸிலே மொத்தம் மூன்றே பேர்தான் இருந்தார்கள். சிறிது நேரத்தில் பஸ் அனேகமாக நிறைந்து விட்டது. இருந்தும் டிரைவருக்கும் கண்டக்டருக்கும் பஸ்ஸை ஓட்டிச் செல்ல மனமில்லை தெற்கேயிருந்து வருகிற ரெயிலை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். நான் பெருமூச்சுவிட்டு என்ன பயன்?

தெற்கேயிருந்து ரயில் வந்தது. திமு திமுவென்று நாலைந்து பேர் வந்து பஸ்ஸில் ஏறினர்கள். டிரைவர், கண்டக்டர் இருவர் முகங்களும் மலர்ந்தன. "இந்தக் கார் திருக்கழுக்குன்றம்தானே போறது?" என்ற குரல் கேட்டுப் பக்கவாட்டிலே திரும்பிப் பார்த்தேன். பஸ்ஸை யொட்டினற்போல கீழே ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவரது தோற்றம் எனக்கு அருவருப்பாக இருந்ததால் பதில் சொல்ல எடுத்த வாயை மூடிக்கொண்டு வேறு பக்கம் திருப்பிக்கொண்டேன் முகத்தை. ஆனல் 'தூண்டில்காரனுக்கு மிதப்பிலே கண்' என்பது போல இருந்த டிரைவர் பளிச்சென்று. "ஆமாம் சாமீ. ஏறிக்குந்துங்க. இதோ வண்டி புறப்படப்போவுது" என்ருன். சற்று நேரத்திற்கெல்லாம் எப்படியோ தட்டித் தடுமாறிக்கொண்டு நான் உட்கார்ந்திருந்த இடத்திற்கே வந்து சேர்ந்துவிட்டார் அந்த ஆசாமி. 'இதேதடா கஷ்டகாலம்!' என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டேன். நல்லவேளையாய்ப் பக்கத்திலே இடமில்லாததால் எதிர் ஸீட்டிலே உட்கார்ந்துகொண்டார். ஆனல் பின்னல் தோன்றிற்று. 'இவர் எதிர் ஸீட்டில் உட்கார்ந்ததைவிடப் பக்கத்திலேயே இடமிருந்து உட்கார்ந்திருக்கக்கூடாதா' என்று.

வயது ஐம்பதுக்குமேலிருக்கும். ஆனல் கட்டுவிடாத சரீரம். அழுக்கேறிய வஸ்திரம். சட்டை கிடையாது. தலையிலே, இரண்டொரு ரோமங்கள் காற்றிலே பறந்துகொண்டிருந்தன. இடது கையில் ஒரு சிறிய மூட்டை, வலது கையிலே ஒரு குடை. அதில் ஒடியாத கம்பி ஒன்றுகூட இல்லை. துணியோ ஒரே கிழிசல் இதெல்லாம் எப்படியாவது தொலைந்து போகிறதென்ருல் அவரது சேஷ்டைகள்தாம் எனக்குச் சகிக்கக் கூடாதவையாயிருந்தன. வண்டி புறப்படும் சமயத்தில் நச்சென்று ஒரு தும்மல் தும்மினர். பிரயாணிகள் அத்தனை பேரும் டிரைவர் கண்டக்டர் உள்படச் சட்டென்று அவர் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். சிலர் சிரித்தனர். சிலர், 'பஸ் நல்லபடியாய் ஊர் போய்ச் சேரவேண்டுமே' என்று முணுமுணுத்தனர். 'ஸ்டார்ட்' பண்ணின பஸ்ஸை நிறுத்திச் சற்றுப் பொறுத்துக் கிளம்பினன் டிரைவர்.

ஆனல் இதொன்றையும் கவனித்ததாகத் தெரியவில்லை அந்த ஆத்மா. மூக்கைச் சிந்தி வெளியே போடுவதும் வண்டியிலே கையைத் துடைப்பதும் தனக்குத்தானே ஏதோ பேசிக்கொள்வதுமாக இருந்தார். அடிக்கடி சிரித்துக்கொள்ளவும் செய்தார். 'அரைப் பைத்தியம் போலிருக்கு' என்று நான் எண்ணிக்கொண்டேன். பொடி போடுவதுபோலச் சற்றைக்கொருதரம் வலது கைப் பெருவிரலையும் ஆள்காட்டி விரலையும் இணைத்து நாசியில் வைத்து முகர்ந்துகொண்டேயிருந்தார் ஆனல் பொடி போடுவதாகவும் தெரியவில்லை நிமிஷத்திற்கொருதரம் தும்முவதும் மூக்கைச் சிந்துவதும், தானே பேசிக்கொள்வதும் சிரித்துக்கொள்வதும் ஓய்வதாக இல்லை. அது மட்டுமா? வலது காலை மாற்றி இடது கால் மேலும் இடது காலை மாற்றி வலது கால்மேலும் போட்டுக்கொண்டேயிருந்தார். அப்படிச் செய்யும்போது ஒவ்வொரு தடவையிலும் தவருமல் எனக்கு ஓர் உதை வீதம் கிடைத்துக்கொண்டேயிருந்தது. தவிர அந்த மூட்டையையும் பீத்தல் குடையையும் இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கத்திற்கும் அந்தப் பக்கத்திலிருந்து இந்தப் பக்கத்திற்கும் நடுநடுவே மடிக்குமாக மாற்றி வைத்துக்கொண்டேயிருந்தார் அப்போதெல்லாம் குடைக்கழி என் கண்ணைக் குத்த வந்து நல்லவேளையாக மூக்கையும் உதட்டையும் நெற்றியையும்மட்டும் கீறி விட்டுக்கொண்டேயிருந்தன நானே வேண்டா வெறுப்பாக அந்தப் பிரயாணத்தைச் செய்து தொலைக்கிறேன் அதிலே இது வேறு தொல்லையா? எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது ஆனலும் போனல் போகிறது என்று பொறுத்துக்கொண்டிருந்தேன் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா? ஒருமுறை அவர்

தும்மும்பொழுது காற்றுவாக்கிலே என்மேல் தாவாரமடித்தது என்னலதைச் சகித்துக்கொண்டு இருக்க முடியவில்லை "ஓ" என்றேன் ஆத்திரமாக. வேண்டுமென்றே செய்தது போலச் சிரித்துக்கொண்டே, 'மேலே தெறிச்சுதா?' என்ருரவர். நான் மௌனமே வகித்தேன் என்னைப் போலவே இவரது சேஷ்டைகளைச் சகிக்காத அவர் பக்கத்திலிருந்தவர் மெல்ல "திருக்கழுக்குன்றமா போகிறீர்கள்?" என்று அவரைக் கேட்டார் "ஆமாம். கல்யாண காரியமாப் போறேன்" என்ருர் கிழவர். "உருப்பட்டாப்போலத்தான் உம் கல்யாண காரியம்" என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டேன்.

'கல்யாணகாரியம் என்ருர்?' என்று கேட்டார் அந்த மூன்ருமவர்.

"நம்ம கொழந்தையைப் பொண் பார்க்க வரா இன்னிக்கு' என்ருர் கிழவர்.

'உம்ம குழந்தையும் உம்மாட்டமாத்தான் இருக்கும். குரங்குதான் உம்ம பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும் மூஞ்சியைப் பார். மூஞ்சியை!'' என்று முணுமுணுத்தேன் சட்டென்று எனக்கு ஏதோ நினைவு வந்தது பின்னேடு, 'சேச்சே! இவ்வளவு மட்டமான இடத்திலா அப்பா சம்பந்தம் பேசி இருப்பார்? இது யாரோ! என்று சமாதானம் செய்துகொண்டேன். மேலும், எப்படி இருந்தால்தானென்ன? நாம் கடன் கழிக்கத்தானே போகிறோம்! என்றும் எண்ணிக் கொண்டேன் இப்படி சொந்த விஷயத்திலே சிந்தனை செல்லவே, கிழவரைப்பற்றி அதற்குமேல் அதிகமாகக் கவனிக்கவில்லை

திருக்கழுக்குன்றம் கடை வீதியிலே வந்து பஸ் நின்றதும் எல்லோரும் இறங்கி மூலைக்கொருவராகச் சென்றனர் நானங்கிருந்த வண்டியொன்றைத் திட்டம் செய்து, அதிலேறிக் குறிப்பிட்ட விலாசத்திற்குச் சென்றேன் சுமார் இரண்டு பர்லாங் ஓடி, ஒரு தெருவை யடைந்தது வண்டி. கெம்பரை விசாரித்துக்கொண்டு

குறிப்பிட்ட நெம்பருள்ள வீட்டின் முன் போய் நான் வண்டியிலிருந்து இறங்கினபோது. அங்கே வராண்டாவில், சிவந்த மேனியும், சுருள் சுருளான கிராப்பும், தங்க பிரேம் மூக்குக் கண்ணாடியும், மூண்டா பனியனும், கையில் தினசரிப் பத்திரிகையுமாக உலாவிக்கொண்டிருந்த ஒருவர் புன்முறுவலுடன் என்னை வெகு நாள் பழக்கமுள்ளவர்போல் வரவேற்று, உள்ளே அழைத்துச்சென்று, கூடத்திலே விரித்திருந்த ரத்தின கம்பளத்தில் அமரச் செய்துவிட்டு, சமையற் கட்டுப் பக்கம் சென்றார்

"பட்டணத்திலிருந்து வரவாகூட வந்தாச்சு. உங்க அத்திம்பேருக்கு இன்னம் வந்து சேரப் போதாகவில்லே "

"சரி சரி. அவர் வரபடி வரட்டும். நீ டிபன் காப்பியைக் கொடு. அவருக்கு ரயில் லேட்டோ. பஸ் கிடைக்கல்லையோ, என்ன கூத்தோ; யார் கண்டா?"

"உம்...அப்பா!...அம்மா!..."

"ஏன் அம்மா? உடம்பை என்ன செய்கிறது?"

இப்படிப் பல குரல்கள். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு எவ்வித உணர்ச்சியுமின்றி உட்கார்ந்திருந்தேன். அடிக்கடி கைக்கடிகாரத்தைக் கவனிப்பதும் குளிர் காலமாயிருந்தும் கைக்குட்டையால் ஓயாமல் முகத்தைத் துடைத்துக்கொண்டும் பெருமூச்சுவிட்டுக்கொண்டும் உட்கார்ந்திருந்தேன் டிபன் வந்தது. பெருக்கு விரலால் தொட்டுப் பதம் பார்த்தேன் காப்பியிலும் ஒரு வாய் குடித்தேன்.

"அம்மா! இங்கேவா வந்து நமஸ்காரம் பண்ணு" என்றாரம் மனிதர் எங்கோ பட்டாடை சலசலத்தது கீழ்ப்பார்வையாக நோக்கினபோது ஜோடி வெண்புறு தத்திக் குதிப்பது போல இரண்டு பாதங்கள் என்னை நோக்கி நடந்துவருவது தெரிந்தது 'பாதகங்களே இத்தனை அழகாய்... ஆனால் எப்படி யிருந்தாலென்ன? நம் வனஜாவுக்கு இணையாகுமா? இதெல்லாம் கடனைக் கழிக்கத்தானே?' இப்படிப்பல எண்ணங்கள் இதற்குள் பெண் என்னைச் சமீபித்தாள் நமஸ்கரித்தாள். எழுந்து நின்றாள் போய்விடப் போகிறாள். அதற்குள் எல்லாவற்றிற்கும்—கடனைக் கழிப்பதையும் முறையோடு கழிப்பதற்காகவாவது—முகத்தைப் பார்த்துவிட வேண்டாமா? மெல்ல நிமிர்ந்தேன். ஆ!.........

நேருக்கு நேராக மின்னலைக்கண்ட கண்கள் எப்படிக் கூசுமோ அப்படிக் கூசின என் கண்கள் ஒரே பிரமை! ஒரு நிமிஷம் மூச்சே நின்றுவிடும் போன்ற திகைப்பு! உள்ளத்தில்?...

"இது நிஜந்தானா?" என்று என்னையும் மறந்து வாய்விட்டுக் கேட்டுவிட்டேன் வனஜா வாய்திறந்து பதிற் சொல்லவில்லை இதற்கிடையிலே ஒரு புன்முறுவலை நெளிந்தோடவிட்டு. அந்தப் பொல்லாத கண்களிலே நமிட்டு விஷமம் ததும்ப என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டுத் துள்ளி அப்பால் சென்று மறைந்துவிட்டாள். நான் குருடன் போலானேன்.

"ஹரேராம்! சீதாராம்!..."

வாசற்புறத்திலே திரும்பிப் பார்த்தேன் ஐயையோ! பஸ்ஸிலே வந்த கிழவர்! என் தேகம் கிடுகிடென்று ஆடிற்று

"வாங்கோ அத்திம்பேரே ஏன் இத்தனை நாழி? ரயில் லேட்டா; அல்லது பஸ் கிடைக்கல்லையா?" என்று வினவினார் தன்னை வரவேற்ற மனிதர் "அதெல்லாம் ஒண்ணுமில்லை பஸ் ஸ்டான்டிலேருந்து நடந்து வரத்தான் இத்தனை நாழி" என்று சொல்லிவிட்டு என்னைக் கூர்ந்து நோக்கினார் கிழவர். எனக்கு சப்த நாடியும் ஒடுங்கிப்போய்விட்டது ஆனால் அவரோ சிரித்துக்கொண்டே, "அடா! நீங்கதானா?" என்றார் நிதானமாக எனக்கும் போன பிராணன் திரும்பிற்று.

அந்தக் கிழவர் பெயர் ரகுநாத தீக்ஷிதர். செங்கல்பட்டிற்கும், விழுப்புரத்திற்கும் இடையேயுள்ள ஒரு கிராமத்திலே மிராசுதார அவருக்கு இரண்டே பெண்கள் பிள்ளை கிடையாது மூத்த பிள்ளைத்தன் மைத்துனனுக்கே கொடுத்திருந்தார். அவர் தான் என்னை வரவேற்றவர். இரண்டாவது பெண்தான் வனஜா வனஜாவின் தான் தாய்க்கு டி பி இருக்கழுக்குன்றத்திலே வாசம் செய்தால் நோய் தீரும் என்று கேள்விப்பட்டு அங்கே வந்து தன் சகோதரனும், மாப்பிள்ளையுமான வெங்கடாசலத்தின் ஆதரவில் இருந்துவந்தாள் கிழவருக்கு நில புலங்களை விட்டுவர மனமில்லை கிராமத்திலேயே தன் தம்பி வீட்டிலே சாப்பிட்டுக்கொண்டு ஊரோடு இருந்து வந்தார். எல்லாம் சரிதான் போட்ட புள்ளி தவறாமல் எப்படிக் காரியம் நிறைவேற்றப்பட்டது? அது வனஜாவின் வேலைதான் சென்னையில் மூன்று நாள் பழக்கத்தில் அவளுடைய வரலாறுகளை வேண்டுமானால் தெரிந்துகொள்ளாமல் நான் ஏமாந்துபோனேனே தவிர. என் வரலாறுபூராவையும் நானங்களுக்கு பாடம்போல ஒப்பித்திருந்தேன் அத்திம்பேராகிய மாமாவிடம் அக்காள் மூலம் தன் கோரிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறாள் அவர் என் தகப்பனாரிடம்போய்ச் சம்பந்தம் பேசி இருக்கிறார். இது தான் கதை இதெல்லாம் எனக்குப் பின்னால் வனஜா சொல்லியல்லவா தெரியப் போகிறது? அப்போதைக்கு எனக்கு ஏற்பட்ட வியப்பின் எல்லையை எப்படி விவரிப்பது?

அடுத்த ரயிலுக்கே ஊருக்குப் போக வேண்டுமென்று வந்த உடனேயே துடித்த நான் நேரம் போவதை அறியாமல் மந்திரத்தில் கட்டுண்ட பாம்புபோல உட்கார்ந்திருந்தபோது, "வாசலில் வண்டி காத்துக்கொண்டிருக்கிறது" என்று நிதானமாகச் சொன்னார் வனஜாவின் மாமா உள்ளே கலுக்கென்று சிரிப்பொலி கேட்டது மாமாவும் சிரித்துவிட்டார் நான் மட்டுமென்ன? நானும் அசடு வழியச் சிரிக்கத்தான் செய்தேன்! அப்போ நான் போய் வரட்டுமா?' என்று கேட்க வாய் எடுத்த நான் "அப்போ நான் போகத்தான் வேண்டுமா?' என்று தவறிக் கேட்டுவிட்டேன். அப்புறம் சிரிப்புக்குக் கேட்பானேன்?

'நான் வருகிறேன்' என்று இரண்டு மூன்று முறை கிழவரிடம் சொல்லிக்கொண்டேன் அவா வனஜாவின் தகப்பனார் என்றதும் அவரது அருவருத்த தோற்றம். கோர சேஷ்டைகள் எல்லாம் மறைந்து 'பாவம் வயசானவர்' என்ற அநுதாபம் தன்னாலே ஏற்பட்டது குறுத்தோலை அதன் காலத்திலே மின்னி மினுக்கினாலும், பழுத்த ஓலையால்தானே அதன் பரிபவமெல்லாம்?' என்கிற தத்துவ விசாரம்கூட ஏற்பட்டு விட்டது

ஸ்டேஷனை யடைந்ததும் பரபர வென்று கடிதத்தை எழுதினேன். என்ன எழுதினேனென்று சொல்லவும் வேண்டுமா? ஆனால் அதைப் பெட்டிக்குள் போடப் போனேன் அப்படிச் செய்யாமல் விரைந்து தந்தியாபீசுக்குச் சென்று பெண்ணைப் பார்த்தேன். பூரண திருப்தி" என்று அப்பாவுக்கு ஒரு தந்தியைத் தட்டிவிட்டுக் குதூகலமாக ரயிலில் ஏறினேன் வழியெல்லாம் அவள் நினைவுதான். தொடர்ந்தே அவள் மாமா, தகப்பனார் எல்லார நினைவுந்தான் ஆனால் இப்போது அந்தக் கிழவர் அருவருப்புக்குப் பாத்திரமாக இல்லை.

65

உபாயமும் பலமும்

★

யோகம் பயில்வதற்குத் தக்க இடம், தகுந்த ஆசனம். உடல், தலை கழுத்து முதலியவற்றை வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்ற உணவு உறக்கம் ஆகியவைகளைத் துணையாகக்கொண்டு மனத்தைப் பரமாத்மாவிடம் அசையாது ஒரு நிலைப்படுத்த வேண்டும் அப்பொழுது யோகியின் மனம் காற்றில்லாத வீட்டிலுள்ள அசையாத் தீபம் போன்றிருக்கும். அவ்வாறு ஸித்தி பெற்ற யோக நிலையில் பரமாத்மாவைக் கண்டு உவக்கிறான் அவ்வெல்லையற்ற ஆனந்தத்தை அநுபவிக்கப் புகுந்தபின் வேறொன்றை அதிகப் பயனுடையதாக ஒருவன் நினைப்பதில்லை ஸித்திபெற்ற அந்த யோக நிலையில் தேகம்பற்றி வரும் அதிகத் துன்பத்தாலும் யோகி சலிப்பிக்கப் படுகிறதில்லை என்றெல்லாம் கண்ணன் சொல்லிக்கொண்டு வந்த போது அர்ஜுனனுக்கு ஒளியையும் ஒலியையும், வாயுவையும்விட வேகமாகப் பரந்துசெல்லும் மனத்தை எப்படிச் சலியாமல் ஒன்றிலேயே நிறுத்த முடியும்? ஏற்கனவே கண்ணால் பார்த்ததும் காதால் கேட்டதும் பொதுவாக அநுபவித்தும் அநுபவிக்க வேண்டும் என்பதுமான கோடிக்கணக்கான நினைவுகள் மனத்திலே இருக்கும்போது ஒருவனால் மனத்தை ஒன்றிலேயே எப்படி நிறுத்த முடியும்?' என்ற ஆலோசனை உண்டாயிற்று. அதையறிந்து கொண்ட கண்ணன், மனத்தைச் சுவாதீனம் செய்வதற்கு ஓருபாயம் வரும் சுலோகங்களில் சொல்கிறார்.

தன்னிலாம் காமங்கள்

தானெல்லாம் நெஞ்சால்விட்

டன்ன புலனைத்தும்

ஆன்றடக்கி - மன்னுநிலைப்

புந்தியினின் மெள்ளமனம்

பூண்டங் குயிர்மன்னச்

சிந்தியான் வேறொன்றுஞ் சேர்ந்து

(இ-ள்) தன்னில் ஆம் காமங்கள்—தன் சங்கற்பத்தால் உண்டாகின்ற காமங்கள் (ஆசைகள்), எல்லாம்—முழுவதையும் விட்டு—முற்றத் துறந்து, நெஞ்சால்—மனத்தால் அன்ன அவ்வாறே புலன் அனைத்தும்—இந்திரியங்களைச் சகல விஷயங்களினின்றும். ஆன்று அடக்கி—(மீட்டு) நன்றாகச் சுவாதீனஞ்செய்து, மன்னுநிலை புந்தியினின் மிகவும் நிலையான புத்தியைக்கொண்டு. மெள்ள—(படிப்படியாக) மெதுவாக மனம்—மனத்தை. உயிர் மன்னப் பூண்டு—பரமாத்மாவிடத்தில் நிலைத்திருக்கச்செய்து. வேறு ஒன்றும் சேர்ந்து வேறான ஒரு பொருளைப் பற்றியும், சிந்தியான்—நினைக்காதவனாயிருக்கவேண்டும்

4

ஸங்கல்ப ப்ரபவாந் காமாந்

ஸ்த்யக்த்வா ஸர்வாந் அசேஷத:

3 3

மநஸே வேந்த்ரிய க்ராமம்

விநியம்ய ஸமம் தத:

சனைச்சனை ருபரமேத்

3 3 4 4 3

புத்த்யா த்ருதி க்ருஹீதயா

2

ஆத்ம ஸம்ஸ்தம் மந:க்ருத்வா

நகிஞ்சித் அபி சிந்தயேத்

(இ-ள்) ஸங்கல்ப ப்ரபவாந்—கோரிக்கையால் உண்டாகும், காமாந்—விஷய ஆசைகள் ஸர்வாந்—எல்லாவற்றையும், அசேஷத: த்யக்த்வா—முழுவதும்விட்டு. இந்திரிய க்ராம்—புலன்களின் கூட்டத்தை, ஸமந்தத: எப்புறத்திலிருந்தும் வருகின்ற விஷயங்களிலிருந்தும். மநஸா ஏவ—மனதாலேயே. விநியம்ய—அடக்கி, சனை: சனை:—மெள்ள மெள்ள, த்ருதி க்ருஹீதயா—(சலனமின்றி)நிலையான தன்மை அடைந்த, புத்யா—புத்தியினாலே உபரமேத்—(எல்லாவற்றிலினின்றும்) நீங்கக் கடவன், மந:—மனத்தை. ஆத்ம ஸம்ஸ்தம்—ஆத்மாவில் நிலைக்க. க்ருத்வா—செய்து. கிஞ்சித் அபி—சிறிதொன்றையும், நசிந்தயேத்—சிந்திக்காமலிருக்கவேண்டும்

இப்பகுதியில் வந்துள்ள இருவகையான ஆசைகளைப்பற்றி ராமாநுஜர் விரிவாக உரை எழுதியுள்ளார். அது பின் வருமாறு:

ராமா:—"காமங்கள் சங்கற்பத்தாலுண்டாவது ஸ்பர்சத்தால் உண்டாவது என இரண்டு வகைப்படும். சங்கற்பத்தால் வருவ்தாவது 'இன்ன காரியத்தைச் செய்தால் இன்னவிதமான பலனைப் பெறலாம்' என்று மனத்தில் உண்டாகும் தோற்றம் அல்லது மனதில் வரும் நினைப்பு. ஸ்பாசத்தால் வருவதாவது 'ஞானேந்திரிய கர்மேந்திரியங்கள் விஷயங்களில் சம்பந்தப்படுவது இதனால் உண்டாவன வெப்பதட்பங்கள் (சீதோஷ்ணாதிகள்) காமங்கள் இவ்விரண்டு விதங்களாலேயே உண்டாகின்றன முன்னையதை அடியோடு முழுதும் விடவேண்டும் பின்னையதை முற்றும் விடுவது அசாத்தியமானபடியால் அதன் மூலமாயுண்டாகும் இன்ப துன்பங்களைவிட வேண்டும்

ஒன்றை அடையும் பொருட்டு ஒரு காரியத்தைச் செய்ய மனதில் தீர்மானம் செய்வது சங்கல்பமாகும். வயோதிகப்பருவத்தில் தன்னை ரக்ஷிக்கும்பொருட்டுத் தன் மகனைக் கல்வி,

பயிற்றித் தனிகன் ஆக்கவேண்டுமென்று தீர்மானிப்பதுபோன்ற பல அதற்கு உதாரணங்கள். மனதைப் பரமாத்மாவிடத்தில் ஒரு நிலைப்படுத்துவதற்கு இதுவே மேற்கொள்ள வேண்டிய முதல் உபாயம். விஷயங்களில் தாமும் சென்று மனதையும் தம் வழியே இழுக்கும் இந்திரியங்களை அடக்க மனது ஒன்றினாலேயே தான் முடியும் என்பதைக் காட்ட 'மனஸா ஏவ (மனதாலேயே) என்று சொல்லப்பட்டது இந்திரியங்களைப் பின்பற்றி விஷயங்களில் செல்லும் மனம் ஒருவனுக்குப் பகை என்று முன்னமே சொல்லப்பட்டது அம்மனமே ஒருவன் கடைத்தேறுவதற்குத் துணையாக வேண்டும் என்று முன்னே இவ் வத்தியாயத்தில் சொன்னதற்கேற்ப, இந்திரியங்களை அடக்க மனதைத் தவிர வேறு இல்லை. அதனால் அதைக் கொண்டே அடக்க வேண்டும்' என்றார்.

இந்திரியங்களை விஷயங்களினின்று திருப்புவது கஷ்டம்தான் என்றாலும் மன வலிமையால் இந்திரியங்கள் உலக விஷயங்களிலிருந்து சிறிது சிறிதாகத் திருப்பப்படும்பொழுதே புத்தியின் உதவியால் மனத்தைப் பரமாத்ம ஸ்வருபத்தில் படிப்படியாக நிறுத்தப் பிரயாசைப்படவேண்டும் மனம் பரமாத்ம ஸ்வருபத்தில் மெல்ல மெல்ல நிற்க வாரம்பிக்கும் போது, அந்நிய விஷயங்களை அறவே நினைக்காமல் மறக்கவேண்டும், என்ற பொருள் 'சனை: (மெள்ள)' என்ற சொல்லால் கிடைக்கிறது. இம்முறையில் தியானம் பயிலும்போது மனம் ஒன்றிலே நிலைக்காவிட்டால் செய்ய வேண்டியது என்ன? என்பதையும் தியானம் வெற்றிபெற்றால் உண்டாகும் பலனையும் அடுத்தபடியாகச் சொல்லுகிறார்.

நில்லா துழல்நெஞ்சு

நீங்கும் எவை மேலவற்றில்

செல்லாமைத் தன்வசத்தைச்

சேர்விப்பான்—நல்யோகி

ஆறினன் தீங்குசெருக்

கற்றுப் பிரமவுயிர்

தேறினன் இன்பமிகச் சேர்ந்து

(இ-ள்) நில்லாது உழல் நெஞ்சு—நிலையற்றதும் சஞ்சல சுபாவமுள்ளதுமான மனம் எவைமேல் நீங்கும்—எப்பொருளைப்பற்றி (எண்ணி)த் தன்னைவிட்டுச் செல்லுமோ அவற்றில்—அந்தந்தப் பொருளில், செல்லாமை போகாதபடி மீட்டு, தன் வசத்தைச் சேர்விப்பான்—தனது ஆத்ம ஸ்வருபத்தில் நிற்கச் செய்பவன், நல் யோகி சிறந்த யோகியாய், ஆறினன்—சாந்திபெற்றவனாய், தீங்கு செருக்கு அற்று—பாபமும் ராஜஸகுணமும் நீங்கப்பெற்று, இன்பம் மிகச் சேர்ந்து பேரின்பம் பெற்று, பிரம உயிர் தேறினன்—ப்ரும்மத்தில் தெளிந்து நிலைக்கிறான்.

யதோ யதோ நிச்சரதி

2

மநச்சஞ்சலம் அஸ்திரம்

ததஸ்ததோ நியம்யைதத்

ஆத்மந்யேவ வசம்நயேத்

ப்ரசாந்த மநஸம் ஹ்யேநம்

3 2

யோகிநம் ஸுகமுத்தமம்

உபைதி சாந்த ரஜஸம்

3 4

ப்ரஹ்ம பூதம் அகல்மஷம்

(இ-ள்) சஞ்சலம்-சஞ்சலத்தன்மையும், அஸ்திரம்—(அதனால்) நிலைக்காத தன்மையும் உடைய, மந:—மனமானது யத: யத:—எங்கெங்கு, நிச்சரதி—சஞ்சரிக்கின்றதோ, தத: தத:—அந்தந்த விஷயங்களிலிருந்து, ஏதத்—இம்மனதை, நியம்ய-(மீட்டு) அடக்கி, ஆத்மநி ஏவ-(தன்னிடமே) ஆத்மஸ்வருபத்திலேயே, வசம் நயேத்—வசப்படுத்தவேண்டும்.

ப்ரசாந்த மநஸம்—அசையாத மனமுடையவனாய், அகல்மஷம்—கலக்கமற்று, சாந்த ரஜஸம்—ரஜோகுணம் நீங்கி, ப்ரஹ்ம பூதம்—ப்ரும்மத்தில் நிலைத்த, ஏநம்யோகிநம்—இந்த யோகியை, உத்தமம் ஸுகம்—மேலான ஆனந்தம், உபைதி—அடைகிறதென்பது பிரஸித்தம்

தியானம் பயிலும்போது மனம் ஆத்மாவில் நிலை பெறாமல் வேறொரு பொருள் மீது செல்லுமானால், மனத்தை புத்தியைக்கொண்டு அதிருந்து இழுத்துக் கட்டுப்படுத்த வேண்டும். பல பொருள்களின் மீது செல்லுமானால் ஒவ்வொன்றிலிருந்தும் மனதைப் படிப்படியாக இழுத்துத் தன் அதீனத்தில்கொண்டுவர வேண்டும். ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றி, ஆக எல்லாப் பொருள்களிலும் சஞ்சரிப்பது மனதிற்கு இயல்பாதலைக் காட்டவே நிச்சரதி (உழல்) என்று குறிக்கப்பட்டது.

ஒவ்வொரு பொருளாக எண்ணிச் சஞ்சரிக்கின்ற மனத்தை விவேகத்தால் இழுத்து அடக்கித் தானாக உலகப் பொருள்களைப் பின்பற்றிச் செல்லமுடியாத நிலை வந்துவிட்டால் ரஜோகுணம் நீங்கிவிடும் காமம் கோபம் பிற தீமைகள் எல்லாம் தோன்றுவதற்கு ரஜோகுணமே மூலமாதலால் அது நீங்கியபோது சாந்தமும் தெளிவும் பிறக்கும் அந்நிலையில் மனம் ப்ரும்மத்திலே ஒன்றி (லயித்து) நின்று தீவினை யகலப் பெற்று யோகி பேரானந்தம் பெற்றிருப்பான். அழியாத பேரின்பமே தியானத்திற்குரிய பலனாகும்.

ஆஸ்த்மா அபாயத்தை

அனுபவ ஸம்மதமான மருந்தினால்தான் தடுக்கலாம்

தாற்காலிகமான குணத்தை சீக்கிரத்தில் கொடுக்கும் மருந்துகள் கடைசியில் வியாதியை முற்றவைக்கின்றன. பலவருஷ அனுபவத்தைக் கொண்டு தயாரித்த "புரோஹித் ஸ்வாஸஹரி" தான் சாஸ்திரீக முறையில் கைகண்ட ஔஷதமாக அனுமானிக்கப்பட்டிருக்கிறது.

புரோஹித் ஸ்வாஸஹரி ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தை க்கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரையீரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்யத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரு 3-8, ரு 6, ரு 10. பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்" விலாசத்திற் கெழுதி பெற்றுக் கொள்ளலாம்.

மதராஸ் ஸ்டாகிஸ்டுகள் : (1) அப்பா & கோ. சைனு பஜார் (2) ஜெ. பலாபாய் & கோ. 260, சைனு பஜார் ரோட் (3) தாதா & கோ. நைநியப்ப நாயக்கன் தெரு.

மதுரை ஸ்டாகிஸ்டு: என். ஆர். ஸ்வாமி கோவிலட்.

புரோஹித ஸ்வாஸஹரி

ஆரஞ்சு

★

வியாபார முறையில் பழ வர்க்கங்களில் முதல் இடம் திராக்ஷைக்குரியது இரண்டாவதாக, ஆரஞ்சு இனத்தைச் சாரும். திராக்ஷைப்பழத்தின் பெரும்பாகம் ஏதாவது ஒன்றோ பலவேறு பானங்களாகச் செய்து கொள்ளவே பயன்படுத்தப்படுகிறது பழத்தை அப்படியே உட்கொள்வதில் ஆரஞ்சினப் பழங்களே அதிகமாக உபயோகத்தில் இருப்பவை.

சாமான்னியமாக இப்பழங்கள் உஷ்ணப் பிரதேசங்களிலும் சமசீதோஷ்ண நாடுகளிலும் நன்கு வளர்ந்து பலன்கொடுக்கும் கொஞ்சகாலத்திற்கு முன்புவரை ஐரோப்பா, வட அமெரிக்கா தேசங்களின் பழத் தேவையை ஒருவாறு பூர்த்தி செய்த இடங்கள் ஆப்பிரிக்காவின் வடக்கிலும் கிழக்கிலுமுள்ள அத்லாந்திக் சமுத்திர தீவுகளும் மத்தியதரைக் கடலின் கீழ்க்கரை நாடுகளுமே. நீராவிக் கலப் பிரயாணம் அதிகரிக்கவே மேற்கிந்திய தீவுகளில் சிலவற்றில் ஏராளமாகப் பயிராக்கப்படுகிற ஆரஞ்சு ஜாதிப் பழ வியாபாரம் ஜமெய்கா பஹாமாத் தீவுகள், டாமினிகாவுக்கும் ஐக்கிய நாடுகளுக்குமிடையே ஏராளமாக விருத்தியாயிற்று. கேடுறாத நல்ல பழங்களைப் பொறுக்கிப் பெட்டிகளில் பாக் செய்து, தொலைதூர ஸ்தலங்களுக்கும் அனுப்பிவந்தார்கள் தற்கால ஆகாய விமானமூலம் சில மணிநேரங்களில் இவ்வுலகின் ஒருபாகத்திலிருந்து அதிக தூரத்திலுள்ள மற்ற இடங்களுக்கு மிகவும் இலகுவில் அனுப்பப்பட முடியும்.

மேற்கிந்தியத் தீவுகளில் ஆரஞ்சுச் செடிகள் அதிக வீர்யமாக வளர்ந்து விருத்தியாகின்றன ஐக்கிய நாடுகளின் பாகங்களாகிற ப்ளாரிடா, கலிபோர்னியா இவ்விடங்களில் ஏராளமான ஆரஞ்சுச் செய்கை உண்டு

ஆப்பிரிக்காவின் வட மேற்கு மூலையிலுள்ள கனாரி தீவுகள் முக்கியமான விளை ஸ்தலம் தென் ஆப்பிரிக்காவின் பல பாகங்களில் ஆரஞ்சு, இதர இனங்கள் பிரபலமடைந்து வருகின்றன இப்பயிர் 1907-லே துவக்கப்பட்டு, வெகு விரைவில் பெரிய பரவல் பூமிகளில் ஆக்கப்பட்டு வருகிறது ஸ்பெயின் தேசமே பெரிய ஏற்றுமதி நாடாக இருக்கிறது 1913-ல் இங்கிலாந்துக்கு 50 கோடி ராத்தல் ஆரஞ்சுப் பழம் ஏற்றுமதி செய்தது.

ஏற்ற நிலம்

மணல் பூமி அல்லாத எவ்வகை நிலத்திலும் ஆரஞ்சுச் செடி வளரும் வடிகால் நன்கமைந்திருப்பது அவசியம் பூமியும் மண் கண்டம் ஆழமாக இருக்கவேண்டும் ஆணிவேர் ஆழத்தில் சென்று இறங்கவேண்டும் நல்ல வளமுள்ள பூமிகள் இப்பயிருக்கு சிரேஷ்டம் இந்த இனச் செடிகள் நன்கு வளர்ந்து விருத்தியாகிப் பெரிய மகசூல் கொடுக்க கொழுத்த வளப்பமான நிலம் தேவை பொலபொலத்த இரு மண்பாடு நிலம். படுக்கைகள் செஞ்சரல் பூமி நலம் ஹ்யூமஸ் என்ற தழைச்சத்து எவ்வளவுக்கு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவு நல்லது..

சீதோஷ்ண நிலை

இந்த இனத்தைச் சேர்ந்த பலசெடிகளில் ஆரஞ்சு செடியே உறப்பானது உஷ்ண நாடுகளில் நன்றாக வளர்கிறது சமசீதோஷ்ண பூமிகளிலும் அநேகமாதிரி ஆகலாம் சமுத்திர மட்டத்திற்குமேல் 2000 அடிவரை இச்செடி வளர்ந்து விருத்தியாகலாம் என்றாலும் வெயிலும் ஈரமும் ஏராளமாக உள்ள மலைப்பிரதேசங்களில் உண்டாகிற பழங்கள் ருசியுள்ளவைகளாகப் பெரியவையாயும் ரசம் நிரம்பினவையாகவும் இருக்கும் நல்ல வெயிலடிக்கக் கூடியதும்குரிய வெப்பமும் ஒளியும் நன்கு விழக்கூடிய திறந்த வெளிகள் இச்செடியினத்திற்கு சிலாக்கியம். செடியின் வேர்கள் பூமிக்குள் இறங்கிச் சரியான பிடிப்பு அடையக் கூடியவையே. ஆனாலும், பெருங்காற்றடிக்கு நேர் ஆக இருக்கப்பட்ட இடங்களில் பூக்களும் பிஞ்சுகளும் கொட்டுண்டு போமாகையால் இப்படிப்பட்ட இடங்கள் நல்லதல்ல என்றாலும் ஒவ்வோரிடங்களில் மற்ற வசதிகள் நன்கமைந்திருந்தால். இத்தோட்டங்கள் செய்யப்பட்ட காலை அவற்றைச் சுற்றி காபபு மரங்கள் வைத்து வளர்க்கப்பட்டால். அவை காற்றடிபாதையைத் தடுக்கும். என்றாலும் இவை நிழலடிக்காதபடி நெருங்கிப் பின்னி ஓங்கி உயர்ந்து வளர்வதும் அவசியம்.

ஆரஞ்சு தோட்ட இடம் தேர்தல்

தாழ்ந்தவையானவும் மழைக் காலத்தில் நீர்ப்பிடிப்பான இடங்கள் இப்பயிருக்கு ஆகாது எல்லா ஆரஞ்சினச் செடிகளும் முக்கியமாக பட்டேவியன் என்ற பத்தாயி ஆரஞ்சுக்கு அதிக ஈரமான பூமிகள் ஈற்றும் உதவாதவை ஈரலென்று வடிந்து போகக்கூடிய நிலத்தையே தேர்ந்தெடுப்பதே முக்கியமான வேலை அநேக பழத்தோட்டங்கள் சதசதப்பான தாழ்ந்த இடங்களில் ஏற்கனவே நடப்பட்டுப் போனதால், அடிமண் கண்டம் வடிகால் அமையாது, செடிகள் ஓங்கி வளர்ந்து விருத்தியாகாமல் கறளை பாய்ந்து சில காலத்தில் மடிந்துபோவதும் உண்டு

இவ்விதமாக உதவாக்கரை நிலங்களில் நட்ட மரங்கள் காய்ப்பெருக்காமல் இருப்பவற்றிற்கு என்ன சிகிச்சை செய்தால் குணம் ஏற்படும் என்ற கேள்விகள் அப்போதைக்கப்போது கேட்கப்படுகின்றன ஆதலால் முன் யோசனையுடன் தக்க இடத்தைத் தெரிந்து செடிகளை நடுவதே சிலாக்கியம்

வடிகால் வசதி

மண்கண்டத்திற்கு உள் கூற்றில் நீர் தாராளமாகப் பாய்ந்து சென்று கீழ்மட்டத்தில் வடிந்து போவது மிக

வும் முக்கியமான செய்தி இதைக் கொண்டு முன்பே செடிகளை வைத்து வளர்த்திருக்கிற பழத்தோட்டக்காரரும் புதிதாகத் தோட்டம் போட உத்தேசிப்பவர்களும், பூமியின் வடிகால் வசதி வயணங்களின் தத்துவத்தை நன்கறிந்திருப்பது அதிக அவசியமானது.

பருமன், உருவம் இவற்றில் வெகுவாக மாறுபட்ட பல சிறு துண்டுகளால் ஆக்கப்பட்டது மண்கண்டம் ஒன்றுக்கும் மற்றதுமான மண் துண்டுகளுக்கிடையில் வெளி உண்டு மொத்தத்தில் பூமியில் 50 சத விகிதம் காற்று நிரம்பிய இடை வெளியாகும். ஒவ்வொரு மண் அணுவைச் சுற்றி மிகவும் லேசான நீர்க்கவசம் உண்டு. இந் நீர் ஒரு வித விசித்திர சக்தியால் ஒவ்வொரு துணுக்கையும் பற்றி நிற்கிறது இப்படியான சிறு துண்டுகளுக்கு ஊடே காற்று நிரம்பி இருக்கும்

பூமியின் உள் சுற்றில் சதாகாலமும் வேர்கள், இலைகள் மற்றும் உள்ள இந்திர வஸ்துகள் நசித்து, சிதைந்து மடிந்துபோவதால் கார்பன்-டை-ஆக்ஸைட் என்ற கரியமிலவாயு உண்டாகிறது சாதாரணமாக மேற்சொன்ன மண் அணுக்களுக்கிடையிலுள்ள வெற்றிடத்தில் இந்த கரியமிலவாயுவே இருந்தும், அதில் ஒரு பகுதி துணுக்குகளைச்சுற்றி நிற்கிற நீர்த்துளிகளில்கரைந்துபோகும் இயற்கையாக மழை பெய்கிற பொழுது, காற்றோட்டம் ஏற்பட்டு, அதனுடன் நீர் மண் துண்டுகளுக்கிடை வெளிகள் வழியாகக் கீழிறங்கி அடிமண் கண்டங்களுக்குச் சென்று சேர்ந்து இச்செய்கையால் ஒற்கெனவே உண்டான சிதைவுகளால் ஏற்பட்ட வாயுக்களை விரட்டியடித்து பிராண வாயுவைச் சேர்க்கிற புதுக் காற்றைக்கொண்டு நிரப்பி வைக்கிறது

சத சதப்பான நீர் கோர்த்த நிலங்களில் மேற்கூறப்பட்ட காற்றுவெளிகளில்லாமல் நீர்நிறைந்துபோயிருப்பதால், பிராணவாயு உட்புக வழியில்லாமல் செடிகளுக்கு உயிராதாரமான் பிராணவாயு கிடைக்காமல், மூச்சு அடைப்பால் திணறிப்போகும்.

இதன்றி மற்ற அபாயங்களும் உண்டாகும் களிமண் பூமியில் ஏராளமான நீர் வார்க்கப்பட்டால், நுண்மையான துணுக்குகள் மேலும் சிதைந்து பரமாணுக்களாக உடைந்து இன்னும் அதிகமான எண்ணிக்கையுள்ளவையாகி, இடை வெளிக்காற்று மிகவும் குறைந்து போகும் இதனால் நீர் கீழ் நோக்கிச் செல்வது மிகவும் மெதுவாகவே ஆகும். ஆகையால், உறப்பான களிமண் பூமிகளில் வடிவது கடினம் நீர் இறைப்பதோ, வாரப்பதோ, மழை நீர் அதிகப்படாமல் தடுப்பதோ எளிதல்ல இவ்வித நிலங்கள் பழத் தோட்டச் செய்கைக்கு லாயக்கற்றவை.

இனவிருத்தி-செடி உற்பத்தி

விதைகளை நட்டுச் செடிகளை நாற்றங்காலில் வளர்த்துச் சரியான வளர்ச்சி அடைந்தபின் அவற்றைத் தோட்டம் செய்யவேண்டிய இடத்தில் நடுவதே சாதாரண முறை. இதுதான் வழக்கமாகச் செய்யப்பட்டு வந்தது கொஞ்சகாலமாக பலவேறான ஒட்டு முறைகளில் இனவிருத்தி செய்வது கையாளப்பட்டு வருகிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தென்பாகப் பகுதிகளில் முக்கியமாக ப்ளரிடா, கலிபோர்னியா பர்கங்களில், 'புளிப்பு ஆரஞ்சு இனச் செடிகளில் தேவையான ரகத்தின் குருத்துகளைக் கொண்டு ஒட்டுக்கட்டுகிறார்கள் ஐரோப்பாவில் உயர்தரமான ஆரஞ்சு செடிகள் ஒட்டுக் கட்டப்பட்டவையே. இதனால் சிலாக்கியமான பழங்களின் குணம் மாறுபடாதிருக்கும் நல்ல ஜாதிகளான "வாஷிங்டன் நேவல்' "வாலன்ஷியா "ஜப்பா" 'மால்டீஸ் ப்ளட்' "ஸெய்ன்ட் மைகேல்" முதலியவை குருத்து மொட்டு ஒட்டினதாலேயே உற்பத்தி செய்யப்பட்டவை.

நார்த்தங்காய்

பூமியை நன்றாக உழுதாவது கொத்தியாவது தெள்ளு புழுதியாக்க

வெளியூர்க்காரர்:— என்னங்க பஸ்ஸிலே போறது நல்லதா, டிராமிலே போறது நல்லதாங்க?

சென்னை வாசி:—'ரெண்டையும் விட நடந்து போறது தானுங்க ரொம்ப நல்லது!'

வேண்டும் நன்றாக மக்கின மாட்டெருவாவது ஆட்டெருவாவது போட்டு உழுது மூடுவது நல்லது. விதைகள் புதிதானவையாக இருக்க வேண்டும் அவை காய்ந்து போனால், முளைக்கும் தன்மை இழந்து போகும். ஆரஞ்சுப் பழ விதையில் இரண்டு மூன்று முளைக்கருக்கள் இருப்பதுண்டு இதனாலேயே விதைகள் ஒன்றுக்கொன்று தூரத்தில் ஊன்றப்பட்டபோதிலும் ஒரே யிடத்தில் அநேக நாற்றுகள் நெருங்கி முளைத்திருப்பதைப் பார்க்க முடியும். விதைகள் நான்கங்குலங்களுக்கொன்றாகவும் வரிசைகள் 9 அங்குல தூரத்திலும் இருக்கும்படி செய்துகொள்ள வேண்டும் நாற்றுகள் வளர்ந்தபின், ஒட்டுக்கட்டும் வகையில் மூலச் செடியாக இருக்கச் செய்தால் இவைகள் 10, 12 மாத காலத்தில் திரும்பி 4 அடி தூர வரிசைகளில் 3 அடிக்கு ஒன்றாக நடப்படவேண்டும். இவற்றின் மேல் தேவையான ஜாதி மரத்துக் குருத்து மொட்டுகளை ஒரு வருஷ காலத்தில் நட்டை வளர்ச்சிக்குத் தக்கவாறு செருகி ஒட்டலாம். குருத்து நன்றாகச் சேர்ந்து செடி நல்ல வண்ணம் வளர்ந்து வருகையில் இவை நிலையாக நின்று வளரவேண்டிய வெளிகளில் நடப்படலாம்.

நடவு

பூமியின் வளப்பத்தைப்பொறுத்தே செடிக்குச் செடி இருக்க வேண்டிய தூரம் நிச்சயிக்கப்படும். அதிக வளப்பமுள்ள நிலங்களில் நல்ல ஆழமாயும் வடிகால் தக்க வண்ணம் ஏற்பட்டிருந்ததுமான இடங்களில் ஒன்றுக்கொன்று 25 அடி தூரத்தில் இருப்பது சிலாக்கியம்

ஆனால், சற்று இளைத்ததாயும் நீர் வசதி குறைவாகவுமுள்ள ஜாகாக்களில் 20 அடி தூரம் போதும்

25 அடி தூரத்தில் ஏகா ஒன்றில் 70ம் 20 அடி தூரத்தில் ஏகர் ஒன்றில் 109-ம் மரங்கள் நடலாம்

செடிகளை நடுமுன் குறித்த தூரத்தில் குழிகள் தோண்டி ஆறப்போட்டிருக்கும் மழைகால ஆரம்பத்தில் இக்குழிகளில் ஏற்கெனவே நாற்றங்காலில் வளர்ந்து வருகிற சிறு செடிகள் நடப்பட வேண்டும் இவைகளைப் பெயர்த்தெடுக்கும்போது ஆணி வேர் அறுந்து போனால், கூர்மையான கத்தியால் அவ்வேரின் நுனியைத் துணித்துப்போட்டு நடுவது நல்லது ஜாக்கிரதையாக இந் நாற்றுகள் குழிகளில் நடப்பட்டால், பாடுவாசி அநேகமாக ஏற்படுவதில்லை. ஆரஞ்சு செடி உறப்பானதென்று முன்பு சொல்லப்பட்டது மழை காலத்தில் நன்கு வளர்ந்த நடுத்தர மரங்களைக் கூட யாதொரு கெடுதியும் ஏற்படாமல் பெயர்த்து நட்டுக்கொள்ளவும் கூடும்.

சிறுவர் பகுதி

சிங்கத்தை ஏமாற்றிய கழுதை

[எஸ். ரங்கராஜன்]

குழந்தைகளே! உலகத்தில் உள்ள மிருகங்களில் எது மிகவும் கெட்டிக்கார மிருகம் என்று தெரியுமா? "தெரியுமே. குள்ள நரிதான் ரொம்ப கெட்டிக்கார மிருகம் என்றுதானே சொல்லுவீர்கள்? ஆனால் அதைக்காட்டிலும் ரொம்ப ரொம்ப கெட்டிக்கார மிருகம் ஒன்று இருக்கிறது அதுதான் கழுதை அது ஒரு பெரிய சிங்கத்தையே ஏமாற்றிவிட்டு சிங்கங்களுக்கெல்லாம் ராஜாவாகிவிட்டது! அது எப்படி ராஜாவாயிற்று என்று சொல்லுகிறேன்

ஒரு வண்ணான் வீட்டில் ஒரு கழுதை இருந்தது அது ஒரு நாள் மேய்வதற்கு வெளியில் சென்றது வெகு நேரம் மேய்ந்துகொண்டே அது ஒரு காட்டை அடைந்தது. காட்டில் நல்ல பச்சைப் புற்களை அது பார்த்துவிட்டு அங்கு போய் மேய ஆரம்பித்தது அது மேய்ந்துகொண்டே காட்டின் மத்தியில் வந்துவிட்டது. அதற்குள் அதற்குப் பசியும் தீர்ந்துவிட்டது. அன்று நல்ல சாப்பாடு கிடைத்தபடியினால் அதற்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. அது கத்துவதற்குக்கூட ஆரம்பித்துவிட்டது "கழுதை எப்படி கத்தும் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியுமே. அது போட்ட கூச்சலில் காடு அப்படியே கிடுகிடுத்துவிட்டது. எங்கேயோ ஒரு குகையிலே தூங்கிக்கொண்டிருந்த மிருக ராஜா சிங்கம் தூக்கி வாரிப்போட்டுக்கொண்டு எழுந்தது. அந்தக் காட்டிலே அப்படி தைரியமாக கூச்சல் போடக்கூடிய மிருகம் ஒன்று கூடக் கிடையாது. அதனால் சிங்கத்திற்கு இக்கூச்சலைக்கேட்டதும் ஆச்சரியமாயிருந்தது. சத்தம் போட்ட ஜந்துவைப் பார்க்க சிங்கம் வெளியிலே புறப்பட்டு சத்தம் வந்த திசையை நோக்கி வந்து ஒரு மரத்திற்குப் பின்னால் ஒளிந்துகொண்டு கழுதையைப் பார்த்தது. சிங்கம் அதுவரையில் கழுதையையே பார்த்ததில்லை. அதன் நீண்ட காதுகளும், வெளுத்த மூக்கும், சடை விழுந்த உடலும் சிங்கத்திற்கு ஆச்சரியத்தை உண்டாக்கின சிங்கம் கழுதையினருகில் வந்து "நீங்கள் யார்?" என்று கேட்டது.

"சிங்கங்களுக்கெல்லாம் அரசன். எனக்குப் பசியாயிருக்கிறது அதனால் உன்னைத் தின்பதற்காக வந்திருக்கிறேன்" என்று கழுதை பதில் சொல்லிற்று.

சிங்கத்திற்கு அந்தப் புது மிருகத்தைக் கண்டவுடன் பயம் உண்டாகிவிட்டது ஏனென்றால்

சிறுவர் பகுதி

கழுதையின் பலம் அதற்கு நன்ருகத் தெரியாது. அதை எப்படியாவது தந்திரம் செய்து ஒழித்துவிடவேண்டும் என்று தீர்மானம் செய்தது.

"நீங்கள் என்னைக் கொல்லாதிருந்தால் நான் உங்களுக்கு பல பெரிய மிருகங்கள் ஆகாரமாகக் கிடைக்க உதவி செய்வேன்" என்றது சிங்கம்.

"சரி! எங்கே அந்தப் பெரிய மிருகங்கள்?" என்று கேட்டது கழுதை.

"வாருங்கள், காண்பிக்கிறேன்" என்று சொல்லி அதை அழைத்துக்கொண்டு சிங்கம் கிளம்பியது. வழியில் ஒரு நதி இருந்தது. சிங்கம் ஒரே தாவில் நதியின் அக்கரைக்குப் போய்விட்டது. ஆனால் கழுதையினால் அம்மாதிரி தாண்ட முடியவில்லை. தண்ணீரில் இறங்கி மெதுவாக அக்கரைக்குப் போயிற்று. அது அப்படி வந்ததைக் கண்ட சிங்கம் "உங்களுக்குத் தாண்டத் தெரியாதா?" என்று கழுதையைக் கேட்டது.

"நான் சமுத்திரத்தையே தாண்டிவிடுவேன். அது மாத்திரமா அன்னப்பறவையைப் போல் நீந்துவேன். உனக்கு நீந்திக் காண்பிக்கத்தான் நான் அம்மாதிரி வந்தேன். அப்பொழுது என்னுடைய வால் நிறைய மீனைப்பிடித்து உனக்குத் தரலாமென்று இருந்தேன். நீதான் அவசரப்பட்டுத் தாண்டிவிட்டாயே அவசரப்பட்டால் நான் எதுவும் கொடுக்கமாட்டேன். எனக்கு உன் மாதிரி ஆத்திரமும், அவசரமும் கிடையாது" என்று கெட்டிக்காரத்தனமாகக் கூறியது கழுதை.

சிங்கத்திற்கு அப்பொழுது அதனிடம் உண்மையாகவே பயம் ஏற்பட்டுவிட்டது. நதியைத் தாண்டி இருவரும் வெகு தூரம் சென்ருர்கள் நடுவில் ஒரு பெரிய சுவர் அவர்களைக் குறுக்கிட்டது அது இரண்டு பெரிய மலைகளுக்கு நடுவில் இருந்தபடியால் அதைத் தாண்டித்தான் போகவேண்டியிருந்தது. சிங்கம் ஒரே தாவலில் மறுபுறம் போய்விட்டது. கழுதைக்குத் தாவ முடியவில்லை. தன்னுடைய நிலையைப்பார்த்து உண்மை தெரிந்து சிங்கம் கொன்றுவிடுமோ என்று பயந்து திரு திரு என்று விழித்துக்

கொண்டிருந்தது. அதற்குள் சிங்கம் "என்ன யோசிக்கிறீர்கள்? உங்களுக்குத்தான் தாண்டத் தெரியுமே!" என்று சொல்லியது சிங்கம்.

சிறுவர் பகுதி

"இவ்வளவு சிறிய சுவரைத் தாண்டவேண்டுமா அல்லது சுவரையே இடித்துத்தள்ளிவிடலாமா" என்று தான் யோசிக்கிறேன் என்று கழுதை சொல்லியது.

"இந்தச் சுவரையா இடிக்க முடியும்? ஒரு நாளும் முடியாது. பெரிய பெரிய யானைகள் கூட சுவர் இங்கு இருப்பதினால் இந்தப் பக்கம் வருவதில்லை. அவை கூட இதை இடிக்க முயற்சி செய்யவில்லையே. உங்களால் எப்படி முடியும்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டது சிங்கம்

"யானையைப்போய் ஒரு பெரிய மிருகம் என்று சொல்லுகிருயே அதற்கு ஏதாவது பலம் உண்டா? உடல் பெரிதாயிருந்தால் உடனே ஏமாந்துவிடுவது உங்கள் வழக்கம். இந்தா பார் இதை ஒரே உதையில் தள்ளிவிடுகிறேன்" என்று தன் பின் கால்களினால் ஒரு உதைவிட்டது. அது சுக்கு நூறாகிக் கீழே விழுந்தது அதைக் கண்ட சிங்கத்திற்கு கழுதையிடம் பயம் அதிகமாயிற்று கால்களின் பலத்தைக்கண்டு "இரும்புக் கால்கள் தான்" என்று நினைத்துத் திகிலடைந்தது. அதைத் தங்கள், அரசனாக்கிவிட வேண்டும் என்று சிங்கம் நினைத்தது தன் எண்ணத்தைக் கழுதையினிடம் தெரிவித்து, அதை சிங்கக் கூட்டத்தினிடம் அழைத்துச்சென்று நடந்த விஷயங்களைக் கூறியது. மற்ற சிங்கங்களுக்கும் கழுதையைக் கண்ட உடனேயே பயம் உண்டாகிவிட்டது.

மறுநாள் தடபுடலாக கழுதைக்கு பட்டாபிஷேகம் நடந்தது. அதற்கு எல்லா மிருகங்களும் வந்திருந்தன.

இப்படியாக நடந்தது ஒரு கதை. காட்டில் நடந்த கதை நாட்டில் இருக்கும் நமக்குத் தெரியாதல்லவா? ஆகையால் தான் வையும்போது "போடா கழுதை!" என்று சுலபமாக வைது விடுகிறோம்.

கணக்கு தெரியுமா?

ராமு, கோபு, அவர்கள் தந்தை தாயார் ஆகிய நால்வரும் காவிரி ஆற்றங்கரைக்கு வந்தார்கள். அவர்கள் அக்கரைக்குப்போக ஒரே ஒரு படகுதான் இருந்தது. அந்தப்படகு 224 பவுண்டு எடை வரையில் தான் தாங்கும் மேலே போனால் மூழ்கிப் போய்விடும். ராமு, கோபு ஒவ்வொருவரும் 112 பவுண்டு எடை. அவர்கள் தாயாரும், தந்தையும் ஒவ்வொருவரும் 224 பவுண்ட். அவர்கள் சிறிது யோசனைசெய்த பிறகு எப்படியோ அக்கரைக்குப் போய் விட்டார்கள். அவர்கள் எப்படிப் போயிருப்பார்கள் சொல்லுங்கள் பார்க்கலாம்?

(விடை அடுத்த பக்கம்)

சிறுவர் பகுதி

நம் ஊர் தூண்கள்

“என்னடா தூண் மாதிரி நிற்கிறாயே” என்று கேட்டால் அவமானப்படவேண்டிய அவசியமில்லை. நம் தேசத்திலுள்ள பல தூண்களால் நமக்குள்ள பெருமை மிக அதிகம்.

அசோக சக்கரவர்த்தி பல தூண்களைக் கட்டினார். அதில் இத்தூண் மிக முக்கியமானது. கௌதம புத்தரைப்பற்றி நீங்கள் படித்திருக்கிறீர்கள் அல்லவா? அவர் பிறந்து வளர்ந்த மாளிகையின் தோட்டத்தில்தான் இது கட்டப்பட்டிருக்கிறது. அதில் புத்தர் பிரசாரம் செய்துவந்த அஹிம்ஸைக் கொள்கை எழுதப்பட்டிருக்கிறது. இதன் உபதேசம்தான் எல்லோரும் புகழும்படியான நிலையில் இந்தியாவைக் கொண்டுவந்து வைத்துள்ளது.

முதலில் ராமுவும், கோபுவும் [112 + 112 = 224 பவுண்டு] அக்கரைக்குப் போனார்கள். கோபுவை அங்கு இருக்கச்சொல்லி ராமு [112] மறுபடி திரும்பி வந்து தகப்பனாரை மாத்திரம் [224 பவுண்டு] அனுப்பினான். தகப்பனார் [224] அக்கரைக்குப் போய் அங்கிருந்து கோபுவை [112] அனுப்பினார். கோபு மறுபடி ராமுவை [112 + 112] அழைத்துக்கொண்டு அக்கரைக்குப்போனான். போனவுடன் கோபு [112] திரும்பிவந்து தாயாரை [224] அனுப்பினான். தாயார் அக்கரை சேர்ந்தவுடன் ராமு திரும்பி வந்து கோபுவை [112 + 112] அழைத்துக் கொண்டு போனான். இப்பொழுது தெரிகிறதா அவர்கள் எப்படிப்போனார்கள் என்று? இவர்களை அக்கரை சேர்க்க படகு ஒன்பது தடவை ஆற்றின் குறுக்கே பிரயாணம் செய்தது. இந்த எந்தப் பிரயாணத்திலும் எடை 224 பவுண்டுகளுக்குமேல் இல்லை.





5

‘உடையது விளம்பேல்!’

★

‘சிம்ம கர்ஜனை!’ பள்ளிக்கூடத்தில் இரண்டாவது வகுப்பில் மிருகக் குட்டிகள் மிக சாதுவாக உட்கார்ந்துகொண்டிருந்தன. அந்த வகுப்பில் குட்டிகள் இருக்கின்றனவா என்று கூடச் சந்தேகமாக இருந்தது. அதன் காரணம்தான் உங்களுக்குத் தெரியுமே. அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் செய்யுள் பாடத்திற்காக அவை சாதுவாக உட்கார்ந்துகொண்டிருந்தன. (அந்தப் பள்ளிக்கூடத்திற்கு வெள்ளியன்றுதான் விடுமுறை நாள்.)

குரங்கு வாத்தியார் எப்பொழுது வகுப்பில் நுழையப் போகிறது என்று குட்டிகள் ஆவலோடு கதவுப்பக்கம் எட்டி எட்டிப்பார்த்தன. ஆனால் குரங்கு வாத்தியாருக்குப் பதில் கரடி வாத்தியார் நுழைந்ததும் குட்டிகளின் முகத்தில் வெறுப்புக்குறி தோன்றியது.

‘குட்டிகளே! குரங்கு வாத்தியாருக்கு உடம்பு சரியில்லை. ஆதலால் அவர் இன்று வரமாட்டார். நானே செய்யுள் பாடம் நடத்தப் போகிறேன், சரி இப்பொழுது எழுதிக்கொள்ளுங்கள். உடையது—உங்களிடம் உள்ள பொருளை விளம்பேல்—சொல்லாதீர்கள்’ என்றது.

குட்டிகள் ஏன் எழுதப் போகிறார்கள்? எழுதுவதற்குப் பதில் கூச்சலிட்டு சத்தம்போட ஆரம்பித்தன. கரடி வாத்தியாருக்கு கோபம் வந்துவிட்டது. மேஜையின்மீது பிரம்பால் ஓங்கி ஒரு அடிகொடுத்துவிட்டு ‘ஸைலென்ஸ்’ என்று கத்தியது. ஆனால் அதன் மிரட்டலுக்கு குட்டிகள் சிறிதும் பயப்படவில்லை. நேர்மாறாக ‘வகுப்பைவிட்டு வெளியேறுக’ என்று பெரியதாக சத்தம்போட ஆரம்பித்தன. கரடி வாத்தியாருக்கு கோபம் மூக்குக் கண்ணாடிக்குமேல் ஏற இன்ன செய்வதென்றறியாமல் ‘உர் உர்’ என்று உறுமியது.

இதே சமயத்தில் குரங்கு வாத்தியார் தள்ளாடி தள்ளாடிக் கொண்டு உள்ளே நுழைந்தது. அவ்வளவே. ஏதோ மந்திர சக்தியால் கட்டுண்டதுபோல் அவ்வளவு குட்டிகளும் இந்தப் பூனையும் பாலை குடிக்குமா என்ற நிலையில் அடங்கி ஒடுங்கி விட்டன. கரடியார் ஆச்சரியத்தால் விழித்தது.

குரங்கு சொல்லிற்று “இன்று எனக்கு ஜுரம். ஆதலால் லீவ் போட்டேன். ஆனால் சட்டென இன்று ஞாயிற்றுக்கிழமை என்றும் உங்களுக்கு செய்யுள்பாடம் உண்டு என்றும் நினைவிற்கு வரவே உடனே என் மகனை விட்டு இந்தக் கதையை எழுதச் சொன்னேன், இப்பொழுது இக்கதையை கழுதைக்குட்டி படிக்கும்” என்றது, கரடி வாத்தியார் ஒருவருக்கும் தெரியாமல் வெளியே நழுவியது.

கழுதை தனக்கே உரியதான குரலில் உரக்க படித்தது;—

இரண்டு தேசங்கள் இருந்தன. அந்த தேசங்களுக்கு வனதேசம், மிருக தேசம் என்று பெயர். வனதேசத்தின் அரசன் வனேந்திரன் என்ற சிங்கம். மிருக தேசத்தின் அரசன் மிருகேந்திரன் என்ற சிங்கம். இரு தேசங்களும் ஒன்றோடொன்று மிக்கச் சிநேகமாயிருந்தன.

வனேந்திரனுக்கு ஒரு அழகிய பெண் இருந்தது. அதன் பெயர் சிங்கி. மிருகேந்திரனுக்கு சிம்மன் என்ற ஒரு மகன் இருந்தது. வனேந்திரனும், மிருகேந்திரனும் அவை இரண்டிற்குமே விவாகம் செய்து முடிக்கவேண்டும் என்று ஆசைபட்டன. இந்த விவாகத்தால் இரண்டு தேசங்களும் ஒன்றாகச் சேர்ந்துவிடுமல்லவா?

சிங்கிக்கும் சிம்மனுக்கும் உரிய வயதில் அவரவர்களுக்கு ஏற்ற கல்வி பயிற்றுவிக்கப்பட்டது. ஆனால் ஒரு வித்தியாசம். சிங்கி ஒரு பெண்ணானாலும் கல்வி கற்பதில் மிகவும் சுறுசுறுப்புள்ளதாயும், வயதிற்கு மேற்பட்ட புத்தி கூர்மையுடனும் இருந்தது. ஆனால், சிம்மனோ நன்றாக

படிப்பதே இல்லை. மிகவும் முட்டாளாகவும் சதா சோம்பேறியாகவும் திரிந்துகொண்டிருந்தது. அதோடுமட்டுமல்லாமல் கெட்ட பழக்கங்களுக்கும் அடிமையாக இருந்தது. மேலும் சிங்கி தனக்கு மனைவியாக வரப்போவதால் அதன் ராஜ்யமும் தன்னைச் சேர்ந்ததென்ற கர்வத்தில் இருந்தது

சிங்கி விவாகத்திற்குரிய வயதை அடைந்ததும், வனேந்திரன் அதைக் கூப்பிட்டு "சிங்கி நீ விவாகத்திற்குரிய வயதை அடைந்து விட்டாய். ஆதலால் உன் விவாகத்தை சிம்மனுடன் முடிக்க ஒரு தேதியை குறிப்பிட்டுவிடட்டுமா பமா?" என்று கேட்டது.

அதற்கு சிங்கி "அப்பா, உங்களுக்கு சிம்மனுடைய குணங்கள் தெரிந்திருந்தும் இப்படிச் சொல்லலாமா? அது மிகவும் துஷ்டனும் போக்கிரியுமாயிற்றே அதோடு நான் என் மணத்தை முடித்துக்கொண்டால் என் கதி என்னவாகும்? துஷ்டனிடம் சிக்கிக்கொள்ளும் நம் தேசத்தின் கதிதான் என்ன ஆகும்?" என்று விம்மிக்கொண்டே கேட்டது.

வனேந்திரனுக்கும் இதிலுள்ள நியாயம் புலப்பட்டது. இந்தப் போக்கிரியிடம் தன் அருமை மகளை ஒப்படைத்துவிட்டால் தன் மகள் பாழாகப் போவதுடன் தன் நாடுமல்லவா அழிந்துப்போய்விடும்! ஆனாலும் என்ன செய்வது? மிருகேந்திரனுக்கு வாக்கு கொடுத்தாகி விட்டதே! ஒன்றும் புரியாமல் அது தவியாய் தவித்தது. பிறகு மந்திரியான நரியிடம் விஷயத்தைச் சொல்லி யோசனை கேட்டது.

அதற்கு நரி "வந்தது வரட்டும். நம் நாட்டையும் அருமை மகளையும் அந்தப் போக்கிரியிடம் ஒப்புவிக்க வேண்டாம்" என்றது. பொது மிருகங்களும் அந்த விவாகத்திற்கு விரும்பவில்லை. வனேந்திரன் கடைசியில் பெண்ணின் இஷ்டத்திற்கு இசைந்தது. அது வேறு இடத்தில் பெண்ணிற்கு வரன் தேட ஆரம்பித்தது

இந்தச் செய்தி மிருகேந்திரன் காதிற்கு எட்டியது. அதற்குக் கோபம் பிடரிக்குமேல் போயிற்று. எந்தத் தந்தையும், தன் மகன் போக்கிரி என்பதினால் பெண் கொடுக்கவில்லை என்று கேள்விப்பட்டால் பொறுத்துக் கொள்ளுமா? மகனை 'போக்கிரி' என்று தானே திட்டினால் அதனால் ஒரு குறைவுமில்லை ஆனால் வேறு யார் சொன்னாலும் கோபம் பொத்துக்கொண்டு வரும். அந்த நிலைமையில்தான் மிருகேந்திரன் இருந்தது. எடுத்தது பேப்பரை, போட்டது ஆக்ஞை 'இன்றைய தினமே வன தேசத்தை முற்றுகையிட வேண்டும்!'

வனேந்திரன் இதை எதிர்பார்த்தது தான். அது எதிர்ப்பிற்குத் தயாராக இருந்தது. மிருகேந்திரன் சேனை வன தேசத்தை சுற்றிலும் வளைத்துக்கொண்டு விட்டது. அதன் எண்ணம் என்னவென்றால் சுற்றி வளைத்துக் கொண்டுவிட்டால் வெளி தேசத்திலிருந்து வனதேசத்திற்குள் ஆகாரம் செல்லமுடியாது ஆகாரம் இல்லாமல் பட்டினியால் வன தேசத்து மிருகங்கள் மடியும். அவர்கள் சோர்ந்த சமயம்பார்த்து மிருகதேச சேனை உள்ளே நுழைந்துவிட வேண்டுமென்பதே

ஆனால் வருஷம் ஒன்றாயிற்று. வனதேசத்து மிருகங்கள் சாகாமலும் மிகக் கொழுத்ததாகவுமே இருந்தன. மிருகேந்திரனுக்கு இது அதிசயமாக இருந்தது.

ஒரு நாள் மிருகேந்திரனுடைய ஒற்றன் நரி வனதேசத்தை சுற்றிக் கொண்டிருந்தது. அப்பொழுது கழுதையை சந்தித்தது. இரண்டும் பேசிக் கொண்டிருந்தபொழுது பேச்சுவாக்கில் அந்த கழுதையார் வனதேசத்திற்குள் அதன் வீடுதான் மிகவும் முக்யமான வீடு என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டது. தன்கூட பேசிக் கொண்டிருந்த நரி எதிரியின் ஒற்றன் என்று அதற்குத்தெரியாது.

நரியோ மிக சுவாரஸ்யமாக 'என்ன காரணமோ' என்று கேட்டது. கழுதையார் மிகவும் உற்சாகமாக 'அது தெரியாதா, இந்த தேசத்திலிருந்து வெளியே







தொழிற்சாலையில் வேலை செய்து திரும்பிய பிறகு லண்டனில் அநேகம் தொழிலாளர்கள் மாலை வேளைகளில் பாடப்பயிற்சிக்குச் செல்கின்றனர். இவர்களுக்காக நடத்தப்படும் இவ்வகுப்புகளைத் தொழிலாளர் சர்வ கலாசாலை என்று பெயரிட்டு அழைக்கின்றனர் சுமார் 15 ஆயிரம் பேர் இங்கு பயில்கின்றனர் மின்சார எஞ்சினீயரிங் பயிலும் தொழிலாளர். (வலது) இவ்வகுப்புகளில் வந்து பாடம் கற்கும் தொழிலாளர்கள்.

போக ஒரு சுரங்கவழி இருக்கிறது அதன் வழியாகத்தானே நமக்கு ஆகாரமெல்லாம் வருகிறது. அந்த சுரங்கத்தின் முக்கிய வழி, அது முடியும் இடம், கிளம்பும் இடம் ஆகியவற்றை குறிக்கும் கடிதம் என் வீட்டில் தான் இருக்கிறது. எல்லா காகிதத்தையும் புசிக்கும் நான் அதை மட்டும் தொடவேமாட்டேன். அதில் தானே ராஜ்யத்தின் உயிர் இருக்கிறது. ராஜா வீட்டில் வைத்திருந்தால் விரோதிகள் எடுத்துப்போய்விடப் போகிறார்களே என்று சாதாரணமான என் வீட்டில் வைத்திருக்கிறார்கள். அந்த சுரங்கவழி இல்லாவிடில் நாமெல்லாம் அரோஹரா தான்' என்று முன்பின் யோசியாமல் நரியிடம் எல்லா ரகசியத்தையும் ஒப்பித்துவிட்டது.

ஒற்றன் நரி பிறகு அங்கு ஏன் தங்கப்போகிறது? இரவோடிரவாக திருடன்மாதிரி வந்து அந்த சுரங்கவழி காகிதத்தை திருடிக் கொண்டு மிருகேந்திரனிடம் கொண்டுபோய் கொடுத்தது.

மிருகேந்திரன் சந்தோஷமிகுதியால் நரிக்கு அநேகப் பரிசுகள் கொடுத்தது. சுரங்க வாயிலையும் அடைத்து விட்டது. இதனால் வன தேசத்து மக்கள் பட்டினியால் வாட ஆரம்பித்தன. இந்தச் சமயம் பார்த்து மிருகேந்திரன் வன தேசத்திற்குள் புகுந்து வனேந்திரனையும், சிங்கியையும் கைதி செய்ய வந்தது. ஆனால் அது வருமுன்பே அவை இரண்டும் விஷம் சாப்பிட்டு விட்டிருந்ததால் அவைகளின் சவத்தை தான் மிருகேந்திரன் பார்த்தது. வீட்டிலுள்ள பொருளை கழுதை கூறியதால் ஒரு தேசத்திற்கே எவ்வளவு கஷ்டம் வந்தது பார்த்தீர்களா?

கதையை படித்து முடித்தது கழுதைக் குட்டி.

குரங்கார் ஜுரத்துடன் தடுமாறிக்கொண்டே "குட்டிகளே எழுதிக் கொள்ளுங்கள் உடையது—உன்னிடமுள்ள பொருளை விளம்பேல்—பிறருக்குச் சொல்லாதே" என்று கூறியது.

மிருகக் குட்டிகள் எழுதிய பொழுது டங், டங் என மணி அடித்தது.

அன்று ரேடியோவிலே யாரோ ஒருவரது, வீணைக் கச்சேரி கேசவமூர்த்தி ஆபீஸிலிருந்து வந்தவன், கோட்டைக்கூட கழற்ருமல் அப்படியே சாய்வு நாற்காலியில் சாய்ந்தவண்ணம் கண்ணை மூடிக்கொண்டான் ரஸிக்கும் தன்மையில் மூழ்கினுனே அன்றைய அதிகப்படி வேலையில் களைத்துப்போய் மெய்ம் மறந்து சாய்ந்திருந்தானே அல்லது கற்பனையுலகில் சஞ்சரித்துக்கொண்டிருந்தானே தெரியாது

ஆனால் அந்த மூன்றுமேதான் அப்பொழுதைய நிலையிலிருந்தது இரண்டாங் கட்டிலிருந்து ஏதோ வேலையாக வந்த புஷ்பா, கணவர் வழக்கத்துக்கு விரோதமாக சீக்கிரமாக வந்து, சாய்வு நாற்காலியில் சாய்ந்திருப்பதைக் கண்டாள், ரேடியோ உரத்த குரலில் கத்துவதே அவருக்குப் பிடிக்காது அதுவும் வீணைக் கச்சேரியென்றால் செவி சாய்க்காதவர். அன்று ரேடியோவின் அருகில், சிறிது அதிகமான ஒலியை அது கிளப்பிக்கொண்டிருக்க அங்கேயிருக்கிறரே என்பதைக் காணும்போது அவளுக்கு வியப்பாக இருந்தது

"என்ன உடம்பு சரியாயில்லையா?" என்று சொல்லிக்கொண்டே, ரேடியோவை சட்டென்று நிறுத்தினுள் புஷ்பா.

திடுக்கிட்டு விழித்தவன்போல், எங்கோ ககன மண்டலத்திலிருந்து பிடித்துத் தள்ளப்பட்டவன்போல் கண்ணைத் திறந்தான் மூர்த்தி.

"ஏன் ரேடியோவை நிறுத்துகிருய்?" என்ருன் கேசவமூர்த்தி. அன்று அவனுடைய போக்கே விசித்திரமாக இருந்தது

"இல்லையே...உங்களுக்கு வீணைக் கச்சேரி என்ருல் பிடிக்காதே.....அதும்...நீங்கள் இப்பொழுது வருவீர்கள் என்பது தெரியாமல்......உரத்த குரலில் பாடும்படி வைத்துவிட்டேயே என்பதற்காக நிறுத்தினேன்" என்ருள் கவலை தோய்ந்த முகத்துடன்.

கேசவமூர்த்திக்கு மனசே சரியாயில்லை. அவனுடைய எண்ணங்கள் பின்னுக்குச் சென்றன 'தனக்குச் சங்கீதமே பிடிக்காது என்றல்லவா ஆகிவிட்டது? ஒரு காலத்தில் எவ்வளவு பிரியம் இருந்தது அதுவும் வீணையின் இனிய நாதத்தில் அமிழ்ந்து நேரம் போவதே தெரியாமல், அதன் மோக லாகிரியில் சுழன்றுகொண்டிருந்தோமே... ..என என்னும்போது அவனுக்குத் துக்கம் துக்கமாக வந்தது

கலையை மறந்தோமே என்பதல்ல ரஸிகத்தன்மை அற்றுப் போய்விட்டோமே என்பதற்குமல்ல. ஆனால் வைராக்யமாக அன்று செய்த முடிவு. அருமைத் தங்கைக்காக—அவள் நினைவுக்காக? அன்று ஏற்பட்ட வெறுப்பல்லவா அது?

அவன் தங்கை காஞ்சனுவின் சாரீரத்திற்காக லாகவமான குரலுக்கும் அவளுக்கு வீணையைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று அவன் திட்டமிட்டான் தாய் தந்தையற்று தனது சவரட்சணையில் இருக்கும் ஒரே தங்கையைக் கண்ணும் கருத்துமாக வளர்த்துவந்தான்: அவன் அத்தை ஒருத்திதான் துணை இவனுக்கும் நல்ல உத்தியோகம். அவளுக்குக் கல்யாணம் செய்து வைத்து விட்டுத்தான் தான் மணப்பது எனவும் தீர்மானித்திருந்தான்..

பெயருக்கேற்றபடி பொற்கொடி போல் வளர்ந்த காஞ்சனுவின் மிருதுவான விரல்களால் எழுப்பப்படும். வீணையின் நாதம், அந்த வீடு பூராவும் பரவி. இன்பரீங்காரத்தை எழுப்பும். ஒரு தடவை உள்ளூர் சபாவில், மிகவும் வற்புறுத்தியதன் பேரில் ஒப்புக்கொள்ளப்பட்ட கச்சேரியின் மூலம் காஞ்சனுவின் வீணை வாசிப்புத் திறமை ஊர் பூராவும் பரவியது

அவளை மணப்பதற்குத்தான் மிஸ்டர் ராமமூர்த்தி பீஏ கொடுத்து வைத்திருந்தான் லீவுக்காக அந்த ஊரில் அக்கா வீட்டிற்கு வந்த இடத்தில், ஜாதகப் பொருத்தமும். பெற்ரேர்களின் சம்மதமும் கிட்டியது

கலியாணமானவுடன் புதுடெல்லி வாசத்துக்குப் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது ஆனால். கேசவமூர்த்தி அவ்வளவு சீக்கிரத்தில் தங்கையைப் பிரிந்துவிடுவாரு? ஒரு மாதம் பொறுத்து அனுப்புவதாகக் கேட்டுக்கொண்டான். தன் உயிர் பூராவையும் ஒரே தங்கையின்மீது வைத்திருக்கும்போது, அவ்வளவு லேசாகவும் பிரிய முடியுமா?

ஆனால், அந்த ஒரு மாதத்திற்குள்ளாக, ராமமூர்த்திக்கு சென்னையிலேயே மாற்றலாகியது திருச்சியினின்று சென்னை கொண்டு விடும்படியான ஒரு மாறுதலும் ஏற்பட்டது காஞ்சனு குடும்பவாழ்வில் புகுந்தாள். தங்கையை விட்டுப் பிரியும் போது கேசவமூர்த்திக்குக் கண்களில் பாசத்தால் நீர் ததும்பியது "காஞ்சனு... அடிக்கடி வருகிறேன் வீணை வாசிப்பதைமட்டும் விடாதே......பழக்கம் விட்டுப் போய்விட்டால் அதை மீண்டும் உயிர்ப்பிக்க முடியாது" என்று தழுதழுத்த குரலில் கூறிப் பிரிந்தான்.

ராமமூர்த்தி—காஞ்சனு வாழ்க்கை ஆரம்பமாகியது காஞ்சனு வந்தவுடனேயே ராமமூர்த்தியுடனிருந்த அவன் தாயார் கிராமத்திற்குச் சென்றுவிட்டாள். புதுக் குடும்ப பாரம் இளங்கொடியின்மீது விழுந்தது அதிலே காஞ்சனு வந்த விசேஷமோ என்னவோ, ராமமூர்த்திக்கு ஆபீஸில் வேலை அதிகமாகியது. எட்டு எட்டரை மணி ஆகும் வீடுவர.

அந்தத் தனியான வீட்டில் மாலை நான்கு மணிக்கே வேலையெல்லாம் முடித்துக்கொண்டு கொட்டுகொட்டென்று உட்கார்ந்திருப்பாள் தனிமையாக. எதிரே ரஸிக்க ஆளில்லாமல் வீணையை எவ்வளவு நாள் வாசிப்பாள்? சில நாட்களில் தனிமையைக் குறித்து மனவேதனையின் பிரதிபலிப்பாகக் கண்ணிலிருந்து இரண்டு சொட்டு நீர்த்துளிகள். வீணையின் நரம்புகளில் விழுந்து அந்த ஒலியோடு சேர்ந்து தெறிக்கும்

வீணை வாசிப்பதையே நிறுத்திவிட்டாள் காஞ்சனு ராமமூர்த்திக்கு அதைப்பற்றி என்ன 'அப்பாடா' என வீட்டுக்கு வரும் அவனுக்கு நாற்காலியில் சாய்ந்துகொண்டால் போதும்போலிருக்கும்.

கேசவமூர்த்தி அன்று வந்திருந்தான் தங்கையைப் பார்க்க. தினசரி அவளுடைய வாழ்க்கையைப் பற்றி கேட்டான். வீணையைத்தொட்டு ஒரு மாதமாகியது என்பதை அவன்

அறியும்போது வருத்தம் தாங்கவில்லை. மாப்பிள்ளை ராமமூர்த்தியை அதைப்பற்றித் தனியே பேச்சுவாக்கில் கேட்டேவிட்டான். தினசரி மாலையில் சீக்கிரம் வருவதற்கு முயற்சிக்கக் கூடாதா என்றும் கேட்டான்

ராமமூர்த்தி பதில் பேசவில்லை. சிரித்துக்கொண்டே சும்மாயிருந்துவிட்டான் கேசவமூர்த்தி வந்து போனபிறகு மறுபடியும் மாலைவேளையில் வீணையின் நாதம் அந்த வீட்டில் கிளம்பியது. ஆனால் ஒருநாளாவது அதை அனுபவிக்க ராமமூர்த்தி கொடுத்துவைக்கவில்லை

அன்று ஆபீஸிலிருந்து வழக்கம் போல் வீட்டிற்கு வந்தான் ராமமூர்த்தி. மனதே சரியாயில்லை அன்று அவனுக்கு. காஞ்சனுவும் வழக்கத்துக்கு விரோதமாக நீண்ட நேரம் தன்னை மறந்து வீணையில் லயத்திருந்தாள். ராமமூர்த்தி வந்து பலமாகக் கதவைத் தட்டினபிறகே திறந்தாள். நடையிலும் வேகமில்லை அலுத்துப்போன ஒரு களைப்பு

தடார் என கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே நுழைந்தான். இலையில் சோறு போடப்பட்டபோது தான் ராமமூர்த்திக்கு ஆத்திரம் அதிகமாகியது. தூக்கம் கண்ணைச்சுற்ற, உடல் நிலையும் சரியாக இல்லாமல் தள்ளாடிப் பரிமாறுவது. மனசு நேராக இல்லாத ராமமூர்த்தியின் ஆத்திரத்தை அதிகமாக்கியது அதற்கு ஏற்றாற்போல் குழம்பிலும் உப்பு இல்லை.

'உப்பை எங்கே போட்டாய்...... அந்த வீணையிலே போட்டாயோ?' என்ருன் கடுமையாக.

காஞ்சனு பதில் பேசவில்லை

'மீதி நேரத்தில் குஷியாக இருப்பது நான் வீடுவந்தவுடன் முகத்தை உம் மென்று தூக்கிக்கொள்வது. வீணையும் பாட்டுமாக இருப்பது போல் நான் வந்தபிறகு இருக்கக்கூடாதாக்கும்?' என்ருன் மறுபடியும் தொடர்ந்து

நெஞ்சிலே அடக்கி வைத்திருந்த ஆத்திரம் அன்று காஞ்சனுவுக்கு அடக்கவே முடியவில்லை கண்ணீரும் அழுகையும் கலந்துபெருக ஆத்திரக் குரலில் ஏதேதோ கொட்டிவிட்டாள்தான்! ரஸிக்கத் தன்மையற்றவர்களிடம் அற்புதமான கலையை எப்படிப் பயன்படுத்துவது என்ற பொருள்கூட அதிலே தெரிவித்தது கேட்டபோதுதான். ராமமூர்த்தியின் கை நீண்டது ஒரு அடி கன்னத்தில் சிவந்த கன்னத்தில் அடிபட்ட இடம் ரத்த சிவப்பாகியது

இரவு பூராவும் விம்மலும் குமுறலுமே மறுநாள் அதற்கு மறுநாள் தணியவேயில்லை. பிறகு ராமமூர்த்தி எவ்வளவோ சமாதானப்படுத்தினுன். முழு வெற்றியும் கிடைக்கவில்லை. அந்த வீணை கவனிப்பாரற்ற நிலையிலே கிடந்தது.

இதன் நடுவில் காஞ்சனு கர்ப்பிணி என அறிந்த கேசவமூர்த்தியும் ஊருக்கு அழைத்துச் சென்ருன் இனி இப்போதைக்குத் திரும்பிவருவதில்லை என்ற குழந்தை வைராக்யத்துடன் சென்ருள் காஞ்சனு. என்ன இருந்தாலும் குழந்தைதானே.

ஒரு நாள் ஆபீஸிற்குத் தந்தி வந்தது. ராமமூர்த்தி அவசரமாகத் திறந்து படித்தான் திடுக்கிட்டான் செயலற்றுப் போனுன். "காஞ்சனு அபாஷன். அபாயம். புறப்படவும்" வயிற்றைக் கலக்கியது ராமமூர்த்திக்கு அன்று இரவே கிளம்ப முடியவில்லை. மறுநாள் காலையில் கிளம்பினுன். சிந்தனையேயில்லை. வெறும் மரக்கட்டைபோல செயலற்று வருத்தம் பொங்க அவன் திருச்சியை அடைந்தான்.

வெளிரிப்போன முகத்துடன் ஆஸ்பத்திரியில் கிடந்தாள் காஞ்சனு கண்கள் பார்வையற்று குழி வீழ்ந்து கிடந்தன. அன்று இரவு ஜன்னி வேறு கண்டுவிட்டது. ஜன்னியிலே அப்பப்பா என்ன பிதற்றல்" இனி மேல் நான் பேரகமாட்டேன் அங்கே அண்ணு அந்த வீணையைக் கொண்டு வந்து விடேன்.'

இந்த வார்த்தையைக் கேட்கும்போது குழந்தைபோல் முகத்தை மறைத்துக் கொண்டு கதறினுன் ராமமூர்த்தி. கேசவமூர்த்தியின் நிலையைப்பற்றி கூறவும் வேண்டுமா?

எல்லோரையும் தவிக்கவிட்டு காஞ்சனு சென்றுவிட்டாள்.

* * * *

கேசவமூர்த்திக்குப் பித்து பிடித்ததுபோலாகிவிட்டது. அந்த வீணையை எடுத்து வந்துவிட்டான். கூடத்தின் நடுவே மேஜை மீது அது இருந்தது

கலியாணமாகி புஷ்பா வீடு வந்த பிறகு பல தடவைகளில் அவனிடம் வீணை சும்மாவே புழுதி படிந்திருப்பதைப்பற்றி கேட்டிருக்கிருள் அவன் பதில் சொல்வதில்லை. ஆனால் அவனது போக்கிலிருந்து, வீணை—சங்கீதம் இவை மீது அவனுக்குப் பிரியம் இல்லை என்பதுதான் அவ்வீணை சும்மாயிருப்பதற்குக் காரணம் என நினைத்தாள் புஷ்பா.

ஆனுல் அன்று, பழைய நினைவுகளை கிளறிவிட்ட அந்த ரேடியோவினுல், கேசவமூர்த்தி பழைய சம்பவங்களை அப்படியே புஷ்பாவிடம் கொட்டிவிட்டான்.

காஞ்சனு இறந்த பிறகு வாழ்க்கையிலே நாதமே போய்விட்டது என்று சொல்லும்போது கண்ணீர்விட்டு விட்டான்.

ஆனுல் புஷ்பா நேரே வீணையிடம் சென்ருள் அதன் உறையைக்கழற்றினுள். தூசு தும்பைத் துடைத்தாள். நடுக் கூடத்திலே வீணையுடன் உட்கார்ந்தாள். அவளுடைய மெல்லிய விரல்கள் வீணையின் கம்பிகளின் மீது தவழ்ந்தன.

கேசவமூர்த்திக்கு ஆச்சர்யமாக இருந்தது புஷ்பா வீணை வாசிப்பாளா? என்று வியந்தான் பழைய எண்ணங்களிடைய வட்டமிட்டுக்கொண்டிருந்த குழம்பிய மனதில் அந்தப் புதிய நாதம் புகுந்தது ஒரு புத்துயிரைக் கொடுத்தது காஞ்சனுவின் இனிய முகம் தோன்றியது. அதே சமயம் அவள் நினைவுக்காக வீணையை மூடி வைப்பதைவிட, நாதத்தை எழுப்பிக்கொண்டிருக்க வேண்டும் என முடிவு செய்தான்

அன்றிலிருந்து கேசவமூர்த்தி இழந்த வாழ்வின் நாதம் மீண்டும் அந்த வீட்டில் புகுந்தது



"ஸர்வஸ்ய காத்ரஸ்ய சிரப்பிரதானம்" என்பதின் பொருள் சிந்திக்கத்தக்கது. இங்குள்ள மஸ்திஷ்கம் என்னும் மூளைதான் சரீரத்தை நடத்துவிக்கும் பிரதானமான அங்கமென்று மேனாட்டு வைத்திய சாஸ்திரம் வகுக்கின்றது

இந்திரியங்களை நடத்தும் சைதன்ய சக்தியோடுகூடிய சேதனன் என்பவன் தான் இப்பொறுப்பை வகிக்கிறான் என்றும், அவனுடைய ஸ்தானம் ஹிருதயம் என்றும் ஆயுள் வேதம் தெரிவிக்கிறது

தாமரை மொக்கின் ஆகாரத்திலுள்ள இந்த ஹ்ருதயத்தின் குறுகிய பாகம் கீழ்முகமாகவும், கனத்த பாகம் மேல்முகமாகவும் உள்ள இந்த ஹிருத்புண்டரீகம் நமது மார்பிலிருப்பதாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது

இது தலையிலிருக்கிற மூளையா, மார்பிலிருக்கிற ஹார்ட் என்னும் ஹிருதயமாவென்று சிலர் சர்ச்சையும் புரிந்து வருகின்றனர்.

"உன் மார்பில் கையை வைத்து—நிஜத்தைச் சொல்லப்பா" என்பதால் இந்த சேதனின் ஸ்தானமான ஹ்ருதயம் இங்குதானிருக்கிறதென்று ஒரு சாரர்.

திடீரென்று ஒரு ஸம்பவத்தைக் கண்டதும் ஒருவனுக்குத் தன்னையறியாமலே தன் கை மார்பையே தழுவித் தொடுவதையும்—தான் செய்த களவு புலனாகும்போதும், தான் சொன்ன பொய் வெளியாகும்போதும் இந்த ஹிருதயம்தான் தடதடவென்றடித்துக்கொள்வதையும் நாம் காண்கிறோம் அவ்வண்ணமே,

பெரிய கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் சகிக்கும் ஒருவன் ஆளாகிவிட்டான் என்று சொல்ல நேரும்போதும் தலையில் கையை வைத்துக்கொண்டுவிட்டான் அல்லது வைத்துவிட்டான் என்றும் சொல்வதால், தலையும் பிரதானமாகக் கருதப்பட்டிருக்கிறதென்றும் மற்றொரு சாரார் சொல்வார்கள்.

இச் சர்ச்சைகளை அவர்களுக்கே விட்டுவிட்டு மஸ்திஷ்கம் என்னும் மூளையானது எவ்விதமான சுயநலப் புலி என்பதை கவனிப்போம்.

சரீரத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எந்த ஒரு குறிப்பிட்ட பாகம் வேலை செய்கிறதோ அப்பாகம் அந்நேரத்திற்குச் சில சலுகைகளை எதிர்பார்க்கிறது இச்சலுகையானது வேலை செய்யும் நேரத்தில் அதிக ஊட்டத்திற்கும், வேலை அளவோடு நிறுத்தப்பட வேண்டுமென்றும் வேலை முடிந்ததும் ஓய்வு வேண்டுமென்பதுமேயாகும்

உதாரணமாக, ஒருவன் கால் நடையாக சில மைல்கள் தூரத்திலுள்ள ஓர் ஊருக்குச் செல்கிறான் நடக்கும்பொழுது தேகம் முழுவதுமே உழைப்பதுண்மையாயினும் கால்களே அதிகமாக அந்நேரத்தில் உழைப்பவையாகும். அந்நேரத்திற்குக் கால்கள் அதிகமான ஊட்டத்தைப்பெற சலுகையை எதிர்பார்க்கிறது இந்த ஊட்டமாவது அப்பாகத்திற்கு அதிகமாக ரத்தம் கொடுக்கப்படவேண்டுமென்பதாகும் சுற்றிக்கொண்டே இருக்கும் ரத்தத்திலுள்ள ஊட்டுப் பொருள்கள் மிகப் பாலும் காலுக்கே கொடுத்துதவப் படுகிறது. அக்குறிப்பிட்ட காலத்தில் இதர பாகங்களுக்கு அவ்வளவு ஊட்டம் கிடைப்பதில்லை அதனால் அவை (கண், காது போன்ற இந்திரியங்கள்) ஒருவித தளர்ச்சியையடைய நியாயமேற்படுகிறது அப்படியேதான் மூளையும் தளர்ச்சியையடைகிறது கொஞ்ச நேரம் நடந்து அலுத்தவனுக்கு கண்ணிருட்டி வருவது. காதடைத்து விடுவதும் ஏனென்று புலனாகிறதல்லவா? சற்று ஓய்வெடுத்துக்கொண்டு படுத்துறங்கி இளைப்பாறி எழுதல் இப்போது அவசியம் அதனால் ஒரு இந்திரியத்திற்கும் ஒரு ஆசயத்திற்கும், அங்கத்திற்கும் உருப்பிற்கும் அதிக வேலை ஏற்படுவதில்லை அப்போது ஓடிக்கொண்டிருக்கும் ரத்தத்திலுள்ள ஊட்டுப் பொருள்கள் பொதுவாகச் சரீரம் முழுவதிற்குமே உபயோகமாகிறது. முக்கியமாக அதிகம் க்ஷீணித்து தளர்ச்சியுற்ற பாகம் அதிகமாக இவ்வூட்டுப் பொருள்களைப் பெறுகிறது இவற்றிற்கெல்லாம் விலக்கானது மூளை. எந்த அங்கமோ ஆசயமோ இந்திரியமோ அதிக வேலை செய்தாலுஞ் சரி, தளர்ச்சியடைந்தாலுஞ் சரி. ஊட்டம் பெற்றாலுஞ் சரி பெறாவிட்டாலுஞ் சரி—தனக்குள்ள ஊட்டத்தை ஒரு இம்மியளவும் தான் குறைத்துக்கொள்ளாத் தன்னலமற்ற தன்மை இந்த மூளைக்குக் கிடையாது அப்படி ஏதாவது காரணத்தினால் குறைவு ஏற்பட்டாலோ உடனே இம்மூளையானது ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு வேலை நிறுத்தம் செய்துவிடும் இதற்கு ஒரு உதாரணத்தைச் சொன்னால் விளங்கும்.

ஒரு மனிதன் படிப்பிலீடுபட்டிருக்கிறான் என்றுவைத்துக்கொள்வோம். தனது கவனம் ஊக்கமிவற்றைப் படிப்பிலதிகமுஞ் செலுத்துவதால் அக்குறிப்பிட்ட நேரத்தில் அவனுடைய மூளையே அதிகமாக வேலை செய்கிறது அப்போது மூளைக்கே அதிகமாக ரத்த ஓட்டமும், அதனால் ஊட்டமும் கொடுக்கப்படவேண்டும். இதற்காக, மூளை ஒருவருடைய தயவையும் எதிர்பாராமல்தானே தனக்குத் தேவையானவளவு ரத்தம் வந்து பாய்ந்து துரிதமாகத் திரும்பிச் செல்லவும் ஏற்பாடு செய்துகொள்கிறது. இதே ஸமயத்தில் சரீரத்தின் வேறொரு பாகத்தில் அதிக வேலை செய்யும்படியான நிலையை ஒருவன் ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது

ஒரு மனிதன் வயிறார உண்டபின், அவனது அன்னப்பை அதிகமாக வேலைசெய்ய அவசியமேற்படுகிறது. கொஞ்சமட்டும் இவ்வேலை செய்யப்படும்வரையில் அன்னப்பைக்கு அதிகமான ரத்தம் ஓடிப் பாயவேண்டும் சரீரத்தின் இதரபாகங்களுக்கு இன்றியமையாதவளவு குறைவாகவே வேலை கொடுப்பதால் ஆங்காங்கும் ரத்தப்பெருக்கிற்கு அதிகம் அவசியமில்லாமலும் மிகவும் குறைந்தவளவு ரத்த ஓட்டத்தினாலேயே நடக்கக் கூடிய வண்ணமும் செய்து கூடியவரையில் அவ்வகையிலெல்லாம் ரத்தத்தின் செலவை மிச்சப்படுத்தி அவையெல்லாமும் அன்னப்பைக்கே கிடைக்கும்படி செய்வதுதான் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்ளவிரும்பும் மனிதன் செய்யத்தக்கதாகும்.

ஆகவே உண்டபின் சற்று இளைப்பாறுதல் அவசியம்

பள்ளிச் சிறுவனொருவன், காலையில் 10-மணி சுமாருக்கு அவசரமாக உண்டபின் ஓடியோடியுஞ் சென்று பள்ளியையடைகிறான் சற்று நேரத்திற்கெல்லாம் உபாத்தியாயர் வரவும் வகுப்பில் பாடங்கள் தொடங்குகின்றன சிறுவனுக்கோ. வயிறு நிரம்ப உண்டு சற்றுநேரந்திற்கெல்லாம் ஓட்டந் தொடங்கியதால் அன்னப்பையிலுள்ள ஆகாரத்தைச் சரிவர ஜெரிக்கத்தொடங்க உற்சாகமற்றதாய் அன்னப்பை—அரிசி நிறைந்த கோணிபபைபோல் ஒருபக்கம் நிற்கிறது இந்தவயிற்றின் சுமையோடும், மற்றும் ஒரு கழுதை சுமைக்கதிகமான புத்தகங்களைச் சுமந்து தலை தெறிக்கப் பள்ளிக்கு ஓடி வந்த சிரமத்தால் தளர்ச்சியுற்ற கைகால்கள் வியர்வையால் சரீரத்தில் ஜலாம்சம் தற்காலிகமாகக் குறைந்த காரணத்தால் ஒரு வேட்கை ஆகிய பல்வேறு உபாதிகள் ஒரே சமயத்தில் ஏற்படுகின்றன அன்னப்பை. சிறுவன் உண்ட ஆகாரத்தை ஜெரிக்க முற்பட வேண்டி உழைக்க வேணுமாதலால் தனக்கு அதிகப்படியான. ரத்தம் ஓடி ஊட்டத்தை யளிக்கவேண்டுமென்று ஒரு புறம் வாதாடுகிறது மூளையோ. தனக்கவசியமான ரத்தத்தைக் குறைவில்லாமல் பெற்றேயாக வேண்டுமென்று ஒருபுறம் ஒட்டாரம் பிடிப்பதுடன், உபாத்தியாயர் கற்பிக்கும் பாடங்களைக் கற்குங் கருமத்திலீடுபடவேண்டி அதிகமாகவும் வேலை செய்யவேண்டி இருப்பதால் அதிக ரத்தம் தனக்குத்தான் ஓடவேண்டிய நியாயமென்று சலுகைக்காகப் போராடுகிறது

இப்போராட்டம் காரணமாக இரண்டிற்குமே போதுமான ரத்த ஓட்டமின்றி, இரண்டுமே தம் வேலையை முழு ஊக்கத்தோடும் திறமையோடுஞ் செய்வதில்லை ஓரளவு ஜீரணக் குறைவு ஏற்படுவதன்றி, படிப்பிலும் திறமைக் குறைவு ஏற்படுகிறது அன்றேல், மேற்சொன்ன போராட்டத்தில் உடல் வளர்ச்சி பெறவேண்டிய வயதானதால். ஆகாரத்தை ஜெரிப்பதிலேயே சுபாவமான சக்தி சரீரத்திற்கு அதிகமாகவிருக்கும் அதனால் அதிக ரத்தம் அன்னப்பைக்குச் செல்லவும், ஆகாரத்தை ஜெரிப்பதற்கான வளவு அன்னப்பை வேலை செய்யவும் இயற்கை அனுகூலமாகச் சகாயம் செய்யும் இதனால் மூளைக்குப் போதுமான ரத்தம் ஓடிப் பாயாது. அன்னப்பை இந்தப் போராட்டத்தில் ஜயம் பெறுவதைச் சகியாத மூளை—இயற்கையின் சதியால் தனக்குச் சலுகை இல்லாமல் போனதையுன்னி சீற்றமுற்று ஒத்துழையாமைத் தத்துவத்தை ஏற்று வேலை நிறுத்தஞ் செய்கிறது. பையன் வகுப்பில் உட்கார்ந்தபடியே தூங்கவாரம்பித்து விடுகிறான். ஆஹா! இந்த மூளை என்ன சுயகார்யப் புலி! தூங்கி வழியுஞ் சிறுவனுக்கு ஆகாரஞ் செரித்து உடல் வளர்கிறது. அவனொரு தடியனாகிறான் பாடம் கற்கமாட்டாமல் மண்டுவாய் பரம தடியனாகிறான்

முன்காலத்திய வழக்கம் வேறு விதமாயிருந்தது காலையில் வெளிச்சமாகுமுன்மே கிராமப் பள்ளிக்குச் சிறுவர்கள் போய்ச் சேர்ந்திருப்பர். வாய்பாடு முதலிய பாடங்களை வாயால் சொல்லிக்கற்பர். இதற்கு அதிக வெளிச்சம்வேண்டாமே! பின். மணலைப் பரப்பி அதன் முன் உட்கார்ந்து எழுதவேண்டியவைகளை எழுதி அழித்து மறுபடியுமெழுதிப் படிப்பர். காணுமற்படித்த சில செய்யுட்களையும், ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி நன்னெறிபோன்றவைகளை ஒப்பித்துப் பதவுரை பொழிப்புரை கருத்து முதலியவைகளைக் கசடறக் கற்பர். மூளை ஒன்று தப்ப வேறெந்த பாகத்திற்கும் உடலில் அப்போது வேலையில்லை எவ்வளவு ரத்த ஓட்டம் வேணுமானாலும் மூளை பெறுகிறது கற்பவைத் திறம்பட கற்கப்படுகின்றன பிறகு சிறுவன் சுமார் 8-மணிக்கு இளங்கஞ்சிக்காக வீட்டிற்கு வருவான் குளித்து உடல் நலத்தைக் கவனித்து இளம் பசியாறி—பின்னும் பள்ளிக்குச் செல்வான்

அப்போது முதலில் செய்வது காபி எழுதுவதுபோன்ற மூளைக்கு அதிகம் வேலையில்லாத அலுவல்கள் தான் செய்வான் இப்படி ஒன்றிரண்டு மணிநேரமானது பகற் போசனத்திற்காக வீட்டிற்கு வருவான் அப்போதும், உபாத்தியாயர் பையன் வீட்டிற்குச் சென்றதும், கை கால்களைக் கழுவிக்கொண்டு, முகத்தை யலம்பி—பிறகு என்னென்ன செய்தபின். ஆகாரத்தைச் சாப்பிடவேண்டுமென்பதையும், உண்டபின் சற்றிளைப்பாறி. வெய்யில் கொஞ்சம் குறைந்தபின் பள்ளிக்குத் திரும்பவும் வரவேண்டுமென்பதையும் ஒரு பாடமேபோல் தினந்தோறுஞ் சொல்லியனுப்புவார். பிற்பகல் பள்ளிக்குச் சென்றதும் முக்கியமான பாடங்கள் வாசகம் கணிதம் முதலியவைதொடங்கும் முற்பகலில் எழுதி வைத்துப்போன காபி புஸ்தகங்களை உபாத்தியாயர் பார்வையிட்டு வைத்திருப்பார் ஒவ்வொருவனும் உபாத்தியாயரிடஞ் சிறுவர்கள் சென்று, தமதெழுத்துக்களிலுள்ள பிழைகளையறிந்து தன்னிடந் திரும்புவான் மாலையில் சில தோத்திரங்கள் முதலியவை சொன்ன பிறகு 'படியொப்பித்தல்" என்ற கிரமம் ஆரம்பமாகும். ஒவ்வொரு சிறுவனும் அன்றைய தினம் அவன் செய்தவை, கற்றவை ஆகிய எல்லாவற்றையும் ஒரு தரம் உபாத்தியாயரிடம் சாங்கோபாங்கமாகச் சொல்ல வேண்டும் இது

"காலையில் எழுந்திருந்து
கால்முகஞ் சுத்திசெய்து
நாரணன் மலர்ப்பதத்தை
நலம்பெற நண்ணிப் பேணி..."

என்று தொடர்ந்ததொரு வகையில் ஒப்பிக்கப்படும். அது அந்தக் காலம் இப்போதுதான். பழைய பழக்க வழக்கங்களுக்கு மதிப்பில்லை. இது கர்நாடகம்" என்று தள்ளப்படுகின்றன ஏன், பழைய பழக்கங்களுள்ள முதியவரான பெற்றோருக்கே மதிப்புக் குறைவு யாரோ ஒரு உத்தியோகஸ்தன் தன் தந்தையை தந்தை என்றேற்பது தனது கௌரவத்திற்கும் பரிஷ்காரத்தின் முற்போக்குங் குறைவு என்றெண்ணியதாகவும் ஒரு கதையுஞ் சொல்வார்களே! ஆனாலும் நாம் வேண்டுமென்றே சொல்வது பழைமையான "ராமராஜ்யம்" ஒரு புறம் பழைமையை மதிக்காமலும், ஒரு புறம் அதையே வேணுமென்றும் சொல்வது குழந்தைத் தனமா—பைத்தியமா? இது நிற்க,

ஒரு வக்கீல். பிரபலமான அட்வொகேட் பள்ளிக்குச்சென்ற சிறுவன் நிலையிலேயே கோர்ட்டுக்குச் சென்றதும் இவருடைய அன்னப்பைக்கும், மூளைக்கும் போராட்டந் தொடங்குகிறது. பையனில் ஏற்பட்ட போராட்டத்தில் மூளை 'தோல்வியுற்றதைக் கண்டோம். இங்கு வக்கீலய்யா மூளையைத் தோற்கவிடமாட்டார். ஒரு சிட்டிகை பொடியை வலித்தோ ஒரு சுருள் புகையிலையைப் புகைத்தோ முகத்தை யொருமுறை கழுவி மினுக்கியோ தூக்கத்தைப் போக்கி ஊக்கத்துடன் வேலையைக் கவனிப்பர் பயனென்ன? ஆகாரம் ஜெரிப்பதில்லை ஏன்? அன்னப்பை வேலை செய்யவில்லை ஏன்? அதிக உழைப்புள்ளபோது ஊட்டம் பெருஞ் சலுகையில்லை அதனால்? காலக்கிரமத்தில் வக்கீலய்யாவுக்குச் சீரணக் கோளாறு. 'டிஸ்பெப்ஸியா "காஸ்டிரிக் அல்ஸர்" என்ற பெயர்களெல்லாம் அடிபடத் தொடங்குகின்றன தொழிலைத் திறம்பட நடத்தி நிரம்ப ஸம்பாதித்தென்ன லாபம். வக்கீலய்யாவின் மூளை—"உடல் நலங் கெட்டாலுஞ்—என் நலத்தை விடமாட்டேன்' என்றும்—பள்ளிப் பையனின் மூளை—"உடலை வளர்க்கப் போகிறாயா? சரி, நான் (மூளை) இல்லாது உடல் வளர்ந்து என்ன பயனோ பார்க்கிறேன்" என்றும் அழிச்சாட்டியம் பண்ணும் மூளையை விடத் தன்னலப்புலி வேறு யாரிருக்க முடியும். இப்புலியைப் பிடிப்பதற்கு ஓரே ஒரு வழி தானுண்டு. உண்டபின் சற்று நேரமாகமாவது இளைப்பாறி பிறகு தத்தம் வேலைகளில் ஈடுபடவேண்டுமென்பதே.

மடதம்பதிகள்

எம். எஸ். சுப்ரமணிய ஐயர்

உடல் இரண்டு, ஆனால் உயிர் ஒன்று, என்பார்கள். உடம்பும் நிழலும் போன்றவர்கள் அக்பரும் வீரபாலனும்! அக்பரோ டில்லி பாதுஷா. வீரபாலனோ ஒரு விகட கவி; மேதாவியும்கூட தூங்கும் வேளை தவிர, ஒருவரைவிட்டு ஒருவர் பிரிவது கிடையாது பூர்வ ஜன்மத்தில் இருவரும் மனமொத்த சகோதரர்கள் போலும்!

ஒரு நாள் மாலைவேளை அக்பரும் வீரபாலனும் காற்று வாங்க வெளியே போயினர். கிழச் சுபேதார் ஒருவன் யானைமீது ஏறி வந்தான் 'இத்தொண்டு கிழத்துக்கு யானை யேற்றம் வேறு" என்று கேலி செய்தான் அக்பர் "இந்த நையாண்டி ஏன் கோலாகலமாக வரும் கிழத்தைத் தொடர்ந்து, அதன் கதியைப். பார்ப்போமே" என்றான் வீரபாலன்

இருவரும் அச்சுபேதாரின் பின்னே போயினர் யானை மிக மெதுவாகவே அசைந்தாடிச்சென்றது. வேகமாகப் போகவேண்டுமென்று சுபேதார் விரும்பினான்; உடனே அங்குசத்தை வாங்கி யானையின் மத்தகத்தில் குத்தினான் அப்போதும் அந்த யானை பெருநடையே போட்டது; வேகமாக ஓட வில்லை அது கண்டு சுபேதார் சுணங்கினான்.

அப்போது, அரபிக் குதிரைமீது எதிரே ஒருவன் வந்துகொண்டிருந்தான். குதிரையோ நாலுகால் பாய்ச்சலாக வந்தது. சுபேதார் அது கண்டான்; யானைக்குக் குதிரையே மேல் என்று கொண்டான். கொண்டதும், "அப்பனே! என் யானையையும் உன் குதிரையையும் மாற்றிக் கொள்ளலாமே உனக்குச் சம்மதந்தானா?" என்று கேட்டான்.

குதிரைக் காரனோ, "இவன் ஒரு வெள்ளை மகன் கள்ளம் கபடு இல்லாதவன் வலுவில் வரும் ஸ்ரீதேவியை நாம் வேண்டாம் என்பானேன்" என்று கருதினான்; சிறிது நேரம் சும்மா இருந்தான்; "பின்பு பெரிய மனிதன் நீ. உன் வார்த்தையை மீறி நடக்க இஷ்டமில்லை" என்றான்; முடிவில் யானையைப் பெற்றுக்கொண்டு சென்றான்.

அக்பருக்கோ சிரிப்பு தாங்கவில்லை அதுகண்டு, "மடத்தனத்தை முழுவதும் பார்ப்போம்" என்றான் வீரபாலன். கொஞ்சதூரம் கும்மாளமாகக் குதிரை மீது போனான் சுபேதார். வழியிலே இடைச்சி ஒருத்தி. ஒரு பசுவையும் கன்றையும் ஓட்டிக்கொண்டுவந்தாள் அப்பசுவின் மீது அவன் திருஷ்டி பாய்ந்தது. மோகமும் பிறந்தது.

பிறக்கவே, "பெண்ணே! பசு எவ்வளவு பால் கறக்கும்?" என்று அவன் கேட்டான் வேளைக்குஇரண்டு பக்காப்படி பால் தரும், என்றாள் அவள். "அப்படியா? இந்த அரபிக் குதிரையை வாங்கிக்கொண்டு பசுவையும் கன்றையும் கொடுப்பாயா?" என்று சுபேதார் கேட்டான் இது ஒரு பைத்தியம், என்று அவள் நினைத்தாள்

முதலிலே முடியாது என்றாள் பின்போ. "நீர் பெரிய கிழவர் விரும்பிக் கேட்கிறீர் தட்டி நடக்க மனமில்லை. எடுத்துக்கொள்ளும்" என்று அரை மனதுடன் சொன்னாள் "நான் வந்தவேளை நல்ல வேளை! இன்று நரி முகத்தில் விழித்தேன்!" என்று சுபேதார் ஆனந்தம் அடைந்தான்; குதிரைக்கு ஈடாகப் பசுவையும் கன்றையும் வாங்கிக்கொண்டு நடந்தான்.

நடக்கையில், "நானும் என் மனையாளும் ஆசைதீரப் பாலும் தயிரும் நெய்யும் குடிக்கலாம்," என்று கூத்தாடினான் கொஞ்சதூரம் போனதும், கொம்பு வளைந்து, குடல் சிறுத்து. சதை, மிகுந்து, மயிர் அடர்ந்த வெள்ளாடு ஒன்றைக் கண்டான்.

கண்டதும், "இது என்ன அழகு! பசுமாட்டுக்கோ தினம் தினம் பசும் புல்லும் பருத்திக்கொட்டையும், பிண்ணாக்கும் கொள்ளும் வாங்கிப் போட்டுப் போஷிக்கவேண்டும். அவற்றிற்கெல்லாம் செலவு செய்ய நம்மிடம் காசு ஏது? ஆட்டுக்கோ என்றால், அவ்வளவு செலவு இராது" என்று எண்ணமிட்டான் உடனே மாட்டையும் ஆட்டையும் மாற்றிக் கொள்ளலாமே, என்று ஆட்டுக் காரனைக் கேட்டான்.

ஆட்டுக்காரனோ, "சுத்த சூன்யம் இது! கறவைப் பசுவைக் கொடுத்து வெள்ளாடு கேட்கிறது!" என்று தனக்குள்ளே மகிழ்ந்தான்: வெள்ளாட்டைக் கொடுத்துப் பசுமாட்டை வாங்கிக்கொண்டு, வந்தவழியே போய்விட்டான்.

ஆடு பெற்றதும், சுபேதார் அடைந்த சந்தோஷம் கொஞ்சநஞ்சம் அன்று "இந்த ஆடு கொடுக்கும் பால் எங்கள் இருவருக்கும் கொள்ளையோ கொள்ளை! இதனை ரேழித் திண்ணையில் கட்டிவைத்து நன்கு மேய்த்துவந்தால் போதும் ஆறு மாதம் ஆனதும், இரண்டு மூன்று குட்டிபோடும். கொஞ்சகாலத்திலே குட்டிகள் பெருகும் நாளடைவில் ஒரு மந்தையாகிவிடும் அதை விற்றால், வெகு பணம் சேரும்" என்று பலவாறு சிந்தித்துக்கொண்டே வழி நடந்தான்

சிறிதுநேரமாயிற்று. அழகான பெட்டைக்கோழியை கையில் பிடித்துக்கொண்டு, குடியானவனொருவன் எதிரே வந்தான் அக்கோழியின் மீது சுபேதாருக்கு ஆசை பிறந்தது. நாள்தோறும் இது எத்தனை முட்டையிடும், என்று சுபேதார் கேட்டான். தினம் பத்து முட்டைக்குக் குறையாமல் இடும் என்றான் குடியானவன் சிறிதும் கூசாமல்,

உடனே ஆட்டைக் கொடுத்துக் கோழியை கையில் வாங்கிக்கொண்டு "கோழியைப் போஷிக்க அதிகச் செலவு ஆகாது தினம் அது முட்டையிடும், அதனை இருவரும் புசித்துக் களிக்கலாம்" என்று நீள நெடுக நினைத்து, உள்ளம் பொங்கி உவகையுடன் போய்க்கொண்டிருந்தான் அச்சுபேதார்.

இவ்வளவையும் பார்த்துக்கொண்டேவந்த அக்பருக்கோ கள்ளசிந்தை இல்லாத கிழவனைக்கண்டு ஒருபக்கம் இரக்கம்; அவன் படமைக் குணம் கண்டு ஒரு பக்கம் பரிதாபம்; எதிர்ப்பட்ட மனிதரின் பேராசை கண்டு ஒரு பக்கம் மிக்க ஆத்திரம் வீரபாலனை நோக்கி என்ன உலகம் இது? என்று கடுகடுத்தான்.

"பாதுஷாவே! பதறுகிறீர்கள் இன்னும் இருக்கிறது காணாத காட்சியெல்லாம் காணப் போகிறீர்கள். உலகம் பெருவிசித்திரம்' என்றான் வீரபாலன். "இந்த முட்டாளை இப்படியா ஏமாற்றுவர்! மிகவும் மோசமான உலகம் இது!" என்று மறுகினான் பாதுஷா "மோசம் நாசம் என்பதை மக்கள் அறியவில்லை நாம் என்ன செய்யலாம்,' என்று வீரபாலன் பரிதபிக்கும் சமயம்.

வானம் திடீரென இருண்டது மேகங்கள் வந்து குவிந்தன குளிர்ந்த காற்றும் கூடிக்கொண்டது. மழை வந்து கொட்டும் போலிருந்தது உடனே பாதையில் போய்க்கொண்டிருந்த ஜனங்கள் அனைவரும் மழைக்கு ஒதுங்க இடம் தேடினார்கள் அங்கே மாம்பழக் கடையொன்று இருந்தது அக்கடைக்குள் எல்லாரும் புகுந்துகொண்டனர். சுபேதாரும் அங்கே தங்கினான்.

கடையிலிருந்த மாம்பழங்கள் அவன் கண்ணைப் பறித்தன. அவற்றின் வாசனையோ அவன் மூக்கைத் துளைத்தது அப்பழங்களைப் பார்த்துப் பார்த்து அவன் சொக்கிப்போனான் போகவே "அப்பேன்! இந்தக் கோழியைப் பார்த்தாயா? எவ்வளவு நேர்த்தி இதற்கு ஈடாக ஒரு கூடைப் பழந் தருவாயா?' என்று கடைக்காரனைக் கேட்டான் அவனும் நல்லது என்றான். ஒரு கூடை மாம்பழங் கொடுத்து அக்கோழியை வாங்கிக்கொண்டு மனம் பூரித்தான்.

அக்கூட்டத்திலே ஒருவன் இருந்தான். சுபேதாரை நோக்கி "அடமடையா, என்ன வியாபாரம் இது." என்று பரிகாசம்பண்ணினான் என்ன கேலி செய்கிறாய்! நம்ம வியாபார வரிசை கேள்! என்று யானையைக் கொடுத்துக் குதிரைவாங்கினதுமுதல் எல்லாவற்றையும் விவரமாகச்சொன்னான் சுபேதார்.

"அது கேட்டதும், விலாப் புடைக்க நகைத்தான் அந்த ஆசாமி முட்டி. 'சரி சரி வீட்டுக்குப்போனதும், உன் பெண்டாட்டி உன்னை நன்றாகச் சாடுவாள்! அவள் கையில் நல்ல உதை தின்பாய் இன்று!" என்று மேலும் பரிகசித்தான். சுபேதாரோ, நண்பரே! 'என் மனைவியின் குணம் எனக்குத் தெரியும். பலே பேஷ் என்று என்னை உபசரிப்பாள்!" என்றனன்.

அவ்வேளை வீரபாலன் சும்மா இருக்கவில்லை சுபேதார் சொல்லும் வண்ணம் அவர் மனைவி நடந்தால், நீர் என்ன செய்வீர்" என்று அந்த ஆசாமியைக்கேட்டான் "அப்படியானால், ஆயிரம் கட்டி வராகன் தருவேன்" என்றான் அப்போ பழி கிசந்தானா, என்றான் வீரபாலன் சொன்ன சொல்லைக் காத்தலே எங்கள் குல தர்மம்' என்று அவன் பதிலுக்குப் பிரமாணஞ்செய்தான்.

அதுகேட்ட ஒரு நாவிதன் ஒருவன் 'இந்தச் சுபேதார் தம் அகமுடையாள் கையில் அடிப்பட்டாலும் சரி; அல்லது அவளது ஆளங்கனம் பெற்றாலும் சரி, ஆளழகனாக இவர் போகட்டும்' என்று புகன்றான் புகன்றதும், சுபேதாரை உட்காரவைத்து, அழகாக மீசையும் தாடியும் வைத்து, அலிங்காரஞ் செய்தான் பின்பு வேடிக்கை பார்க்க எல்லாருமாக அச்சுபேதாரின் வீடு சேர்ந்தனர்.

புருஷனது வரவு கண்டாள் சுபேதாரின் மனைவி; ஓடோடி வந்தாள்; வாசலிலே எதிர்கொண்டழைத்தாள்; யானையை விற்றீரா, என்று வினவினாள். "யானையை விற்றேன், அழகிய அரபிக் குதிரைகொண்டேன்" என்றான் சுபேதார். "நல்லது! குதிரைப் படையிலிருந்த விலகினது முதல் நீர் குதிரை ஏறவில்லை அக்குறை தீர இப்போது அரபிக் குதிரை வாங்கியது அழகு அழகு!" என்றனர்.

உடனே அவன், "என் கண்ணே! அக்குதிரையையும் விற்றுவிட்டேன். வேளைக்கு இரண்டு பக்காப்படி பால் கொடுக்கும் பசுவை வாங்கினேன்" என்றான். அவளோ 'நல்ல வேலை செய்தீர். பாலுக்கும் தயிருக்கும் இனி நமக்குக் குறைவு ஏது?' என்று சந்தோஷம் அடைந்தாள்; உடலைக்

குலுக்கிக்கொண்டு, எங்கே அந்தப் பசு, என்று கேட்டாள்.

"பசுவைக் கொடுத்தேன். படியளவு தரும் வெள்ளாடொன்று வாங்கினேன்" என்றான் அவன் அவள், 'பலே பலே! நல்ல காலம் நல்ல வேளை பசுமாட்டுடன் யார் பாடுபடுவது? அதற்குப் பிண்ணாக்கையும் பருத்திக் கொட்டையும் தினம் தினம் தூளாக்கிப் போடுவது மிகவும் கஷ்டம். மேலும் மாட்டையும் கொட்டிலையும் காலை மாலைகளில் நன்றாகக் கழுவிச் சுத்தமாக்குதல் சாமானியமா என்ன? இந்த இரு தொல்லை இல்லாமல் என் பாக்கியம் வெள்ளாட்டை வாங்கிவந்ததே நல்லது!" என்று மெச்சிக் கொண்டனர்.

பின்பு அவன் அந்த ஆட்டையும் ஒரு கோழிப் பெட்டைக்கு மாறினேன் என்றான் என்றதும், சபாஷ் வீடு முழுதும் ஆட்டுப் புழுக்கை, புல்பூண்டு தழையும் நிரம்பி அசுத்தமாகக் கூடாது என்று சமர்த்தாக ஆட்டை விற்றீரே நம் வீடு நாற்றம் எடுக்காதிருக்கும்" அந்தக் கோழி எங்கே' என்று அவள் கேட்டாள் அதற்கு அக்கோழியையும் மாற்றினேன் இந்த மாம்பழங்கள் வாங்கி வந்தேன்" என்று கூடையிலிருந்த பழங்களைக் கீழே கொட்டிக் காட்டினான்

மனைவியான கிழவியோ அப்பழங்களைப் பார்த்தாள்; பரமானந்தம் அடைந்தாள் பின்பு கணவனை ஏறிட்டுப் பார்த்தாள் மீசையையும் தாடியையும் நோக்கினாள் மோகமும் மிகுந்தாள் அவனைக் காதலுடன் கட்டியணைத்தாள் களிப்பு மிகுந்து கையில் காலைந்து பழங்களை எடுத்துக்கொண்டாள் பின்போ,

"நம்ம அண்டை வீட்டு வெங்கச்சியை அன்று ஒரு பழம் கேட்டேன் அவளோ வெம்பிப் போன காயொன்றை அரைமனதுடன் என் கையில் எறிந்தாள். ஆதலால் இப்போதே அவள் வீடுபோகிறேன் அவள்முகத்தில் இந்தப்பழங்களை வீசி எறிந்துவருகிறேன் அந்தத் தரித்திரத்துக்குப் புத்திபுகட்ட வகை தேடி வைத்தீரே. என் பாக்கியமே பாக்கியம்!"

என்று மீண்டும் மணாளனை கட்டித் தழுவ யத்தனித்தாள் அப்போது அவன் தன் மீசையை முறுக்கிக் கொண்டு தாடியையும் ஒய்யாரமாக உருவிவிட்டு,

யானை குதிரை
ஆடு கோழி
தாடி மீசை
பாரடி, பாரடி
மாம்பழமும் தின்னடி.

என்று சரச சல்லாபமாகப் பேசத் தொடங்கினான் அனைத்தையும் பார்த்துவந்த அக்பர் உடனே கடகட என்று சிரித்தான். வீரபாலனோ "நன்றே! சொன்னபடி கட்டி வராகனைக் கீழேவையும்" என்று கம்பீரமாகக் கேட்டான் அதுகேட்ட அவன் முகக்களை குலைந்தான். அவன் முகம் மிகவும் கருகியது

ஆயினும் வீரபாலன் விடவில்லை வராகனை எண்ணி வைத்தாகவேண்டும். என்று நெருக்கினான் கும்பல் கூடியிருந்த ஜனங்களும் சபதம் செய்தவர் குலதாமத்தில் தவறுவாரோ என்று குத்தலாகப் பேசினர் விதியின்றி ஆயிரம் வராகனையும் அவிழ்த்துக் கொட்டினான் பிரமாணம் செய்தவள் உடனே சுபேதாரின் மனைவி அவ்வராகன்களையெல்லாம் நோட்டம் பார்த்து. எண்ணி எடுத்துக் கொண்டாள்

அது கண்டு இந்த முட்டாளுக்குச் சுக்கிர தசைபோலும் என்றான் அக்பர் கள்ளங்கபடு இல்லாதவனைக் கடவுள் கைவிடாது காப்பான் என்றான் வீரபாலன்.

"ஆனால் ஒரு விஷயம். சுபேதாரின் மடத்தனத்துக்காக அக்கோமுட்டி கட்டிக் கொடுக்க நேர்ந்ததேன்?' என்று அக்பர் அதிசயித்தான் "யாரையோ ஏமாற்றிச் சம்பாதித்த பணம் அது அதனை இவ்விதம் கக்கவைத்தான் கடவுள்!" என்றான் வீரபாலன்

நல்ல உலகம் இது! என்று அக்பர் வியக்க இதுதான் உலகம், இதுதான் ஈசன் செயல் என்று வீரபாலன் வேதாந்தம் பேசினான்.

சக்தி ஆருடம்!
★
(பிரபல ஆருட சாலை)
பல மேன்மையான நற்சாட்சிகள் பெற்றது
1 வருஷ பலன் ரூ. 5.
ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1.
சக்தி கவசம் ரூ. 7-8-0.
ஜாதகம் கணிக்க ரூ. 2.
வி பி பி தனி
ஜாதகம் OR கடிதம் எழுதும் நேரம் தேவை.
சக்தி ஹோம்,
விருத்தாசலம் P. O. (S. I.)

சேலம்
மூன்று தாமரை
பீடிகளை உபயோகித்து சந்தோஷமடையுங்கள்
Estd 1920
Rgd. No. 2221.
Prop: S அஹமத் உசேன்,
கோட்டை, சேலம் S.I.R.

A. B. C Talks.	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.
மானேஜர்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட்ரோட், மதராஸ்.

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909 டெலிபோன் நெ. 57.
டி. எஸ். ஆர். & கோ.,
கும்பகோணம்.
(பிராஞ்ச: மன்னார்குடி.)
சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்
கோகுல் கூந்தல் தைலம்
கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.
வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.
மதராஸ் ஸோல் ஏஜெண்டுகள்:—
சுராஜ் ஏஜென்ஸீஸ்,
157, லாயிட்ஸ் ரோடு,
மதராஸ்.
(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்துக்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும் உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்களுபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே
காமினியா ஆயில்
(ரிஜிஸ்டர்ட்.)
மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப்போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும் ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர் இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள் எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது எப்பொழுதும் உபயோகியுங்கள்
ஆடோ டில்பஹார் (ரிஜிஸ்டர்ட)
இணையற்ற வாசனை நீடித்த மணமும் தபால்சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் பெறுங்கள்.
Sole Agent — ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285 Jamma Musjid, P. O. Box 2085. Bombay 2.

ஜாதகம்! ✶ ஆருடம்!!
இன்றே எழுதுங்கள் பிறந்த ஜில்லா, தேதி நேரம் அல்லது ஜாதக நகல் தேவை ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்காலகேள்விகள் ரூ 2. 3-க்குமேல் கேள்வி 1-க்கு அணா 8 ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ 35 ஜாதகம் கணிக்க ரூபா 3 ஒரு தசாவிற்கு புக்தி வாரியாக எழுத ரூ 12
குறிப்பு:-வெளிநாடுக்கு இரட்டிப்புக் கட்டணம்
Lt. Col. M N C ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது எனக்கு திடீரென்று ரூ 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ 35,000 கிடைத்தது
★
மானேஜர்,
வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம், P O (தென் இந்தியா)



தேவியின் கிருபை

ப.ரா.

சாமுக்கு உப்பில்லையென்று அழுபவர்களுக்கும், பாலுக்குப் போடச் சர்க்கரையில்லையென்று குறைப்படுகிறவர்களுக்கும் விசனமொன்றுதான் நானும் கார் வாங்கிவிட்டேன். அமெரிக்காவிலேயே உயர்ந்ததாகக் கருதப்படும் 'காடில்லாக்' கார். சுங்கவரி, தரகு, விற்பனை வரியுள்பட விலை ரூபாய் இருபத்தையாயிரத்துக்கு மேலாகிவிட்டது. காரின் ஜோரைப் பார்க்க வேண்டுமே! தேவேந்திரனது புஷ்பக விமானம்தான்! காரின் வர்ணத்திற்குப் பொருத்தமான புடவை ரவிக்கைகளும் என் மனைவிக்கு வாங்கிக் கொடுத்தாயிற்று இவ்வளவு உயர்ந்த காரைப் பக்குவமாய்க் கையாண்டு கவனித்துக்கொள்ளத்தகுந்த டிரைவர் ஒருவனும் கிடைத்தாக வேண்டுமே அடுத்தபடியாக இந்தக் கவலை என்னைப்பிடித்துக்கொண்டது

டிரைவர் வேலைக்கு என்னிடம் டஜன் கணக்கான ஆசாமிகள் மனுச் செய்துகொண்டனர். அவர்களில் பல வேலையில்லாப் பட்டதாரிகளும் இருந்தனர். இன்னும் சிலர் ஒரு காலத்தில் சொந்தமாகக் கார் வைத்துக்கொண்டு ஓட்டியவர்கள். ஒவ்வொருவரையும் நேரில் சந்தித்து அவரவரது தகுதிகள்பற்றி விசாரித்தேன்.

"ஐயா! நான் எவ்வளவு கூட்டமான ரஸ்தாவிலும் அறுபது மைல் வேகத்திற்கு குறைந்து கார் விடுவதில்லை" என்று பெருமை பேசினான் ஒருவன்.

"நான் குறுகலமான நீலகிரிரஸ்தாவில் ஒரே மூச்சாகக் காரை ஏற்றி உச்சிக்குப் போய்விடுவேன்" என்றான் மற்றொருவன்.

"ஐயா! நான் கொஞ்சநாள் மெடிகல் காலேஜில் மாணவனாயிருந்திருக்கிறேன் நான் கார் ஓட்டும்போது ஏதாவது விபத்து நேர்ந்தால் உடனே காயம் பட்டவர்களுக்கு முதற் சிகித்ஸை செய்ய எனக்குத் தெரியும்." என்று தைரியமூட்டினான் இன்னொரு வாலிபன் ஓடும் காரில் ஸர்க்கஸ் வித்தைகள் செய்து காட்டத் தங்களால் முடியும் என்று இரண்டொரு பிரஹஸ்பதிகள் சொல்லிக்கொண்டனர். எனக்கு எவரிடமும் திருப்தியேற்படவில்லையென்று சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம்.

இதுவரை ஒன்றும் பேசாமல் அறையின் மூலையில் கைகட்டி நின்றுகொண்டிருந்த ஓர் இளைஞனை என் அருகிலழைத்தேன். "என்னப்பா! நீ என்ன சொல்கிறாய்" என்று கேட்டேன்.

"ஸ்வாமி. நான் இரவு பகல் பாராமல் எந்த நேரமாயினும் தங்களுக்கு உழைக்கத் தயாராயிருக்கிறேன். காரை ஒரு குழந்தையைக் கவனிப்பதுபோல் அக்கரையுடன் பார்த்துக்கொள்கிறேன் உங்களுக்கும் காருக்கும் விபத்து எதுவும் நேராத முறையில் ஜாக்கிரதையாக ஓட்டுவேன்" என்றான் அவன் "சபாஷ்! நீதான், எனக்கு வேண்டிய ஆள்" என்றேன் மற்ற மனுதாரர்கள் ஒருவர் முகத்தையொருவர் பார்த்து விழித்தவர் நான் செய்த புன்னகை அவர்களது திகைப்பை அதிகமாக்கியது

"சகோதரர்களே! காரில் ஸர்க்கஸ் வித்தைகள் காண்பதும் பந்தயம்விடுவதும், விபத்துக்காளாகி ஆஸ்பத்திரி செல்வதும் என் விருப்பமல்ல. கார் மதிப்புள்ள பொருள். எங்கள் உயிரோ அதைவிட மேலானது. எனவே..." என்று ஒரு குட்டிப்பிரசங்கம் தொடங்கினேன் மறு நிமிஷம் அவர்களில் ஒருவரையும் அங்கே காணோம்— நான் பொறுக்கியெடுத்த ஆள் ஒருவனைத் தவிர.

'கட்டுறுதி உள்ள உடல், கண்ணிலே நல்ல குணம்' என்று பாரதியார் சொல்லுகிறாரே இந்த இரண்டு தகுதிகளையும் அவனிடத்தில் நான் முன்னமே கவனித்துவிட்டேன். ராமலிங்கத்துக்குக் கள்ளங் கபடு தெரியாது அவனுடன் பழகிய ஒவ்வொரு நாளும் அவன்பால் எனக்கிருந்த அன்பையும் நன்மதிப்பையும் வளர்த்தது ராமலிங்கம் ஏழாவது வகுப்புவரை படித்திருக்கிறான்; இன்னும் கலியாணமாகவில்லை பிரமசாரி வாலிபர்களிடம் சாதாரணமாகக் காணப்படும் படாடோபம் அவனிடமில்லை

காரில் ஓட்டிக்கொள்ளும் ஒவ்வொரு தூசிதுரும்பும் அவன் கண்ணை உறுத்தும் கார ஓட்டினானால் அன்னபட்சி நீரில் நீந்துவதுபோல் அலுங்காமல் நலுங்காமல் செல்லும். 'அட, இவன் இவ்வளவு நல்ல கார் வாங்கிவிட்டானே!' என்று பொறாமைப்பட்ட நண்பர்கள், 'அதற்குத் தகுந்த டிரைவரும் கிடைத்திருக்கிறானே ஐயா.' என்றும் சேர்த்துக் கொண்டனர்.

பிறர் நம்மைப்பார்த்துப்பொறாமையடைவதைவிட நமக்கு ஆனந்தம் தரக்கூடிய விஷயம் என்ன இருக்கிறது?

• • • •

நல்லகுற்றாலம் பிள்ளை தன் குடும்பத்துடன் எங்களூருக்கு வந்து ஆறு மாதங்கூட ஆகியிருக்கவில்லை. ஆயினும் எப்படியோ எனக்கும் அவருக்குமிடையில் நட்பு தோன்றி ஆழமாக வேர்விட்டு நிலைத்துவிட்டது

பிள்ளையவர்கள் சற்று முன்கோபி. பேச்சுவாக்கில் 'முயலுக்கு மூன்றே கால்கள்தான்' என்று சொல்லுவார் நாம் இல்லையென்று மறுத்தால் அவருக்குப் பிரமாதமாக கோபம் வந்துவிடும். இவர் சண்டைக்கார மனிதா என்று பயந்துதான் யாரும் இவரை நெருங்குவதில்லை ஆனால் அந்தக் கோபத்திற்கும் படபடப்பிற்கும் அடியில் ஒரு தங்கமான ஹிருதயம் மறைந்து கிடக்கிறது என்ற உண்மை எனக்குத்தெரியும். கூடியவரையில், அவர் சொல்வதையெல்லாம் சரி என்று ஒத்துக்கொண்டு சண்டை சச்சரவில்லாமல் காலந்தள்ளிவந்தேன்

நல்ல குற்றாலம் பிள்ளை மதுரை மேல ஆவணி மூலவீதியில் குடியிருந்தார். அவருக்குத் தம் சொந்தக் கிராமத்தில் கொஞ்சம் சொத்துச் சுதந்திரங்கள் உண்டு. தம் மனைவியுடனும் ஒரே மகள் லக்ஷ்மியுடனும் மதுரையில் வசித்து வந்தார். அவர் வீட்டிற்கு நான் போவதும், என் வீட்டிற்கு அவர் வருவதும் சகஜம்

லக்ஷ்மி நல்ல அழகி. எலுமிச்சம் பழம்போல் தகதகவென்ற மேனி. கருத்து, நீண்டு, அடர்ந்த கூந்தல் வட்டமதிபோன்ற வதனம் ஆனால், ஆளை விழுங்கும் அவளது விசாலமான கருவிழிகளில் எப்போதும் ஒருவிதமான சோகம் குடிகொண்டிருக்கும். அவள் அதிர்ந்து பேசியோ, உரக்கச் சிரித்தோ நான் பார்த்ததில்லை பிள்ளையவர்கள் நல்ல செல்வந்தராயினும் அவர் மகள் அதிகமான ஆடையாபரணங்கள் அணிவதுமில்லை. இத்தனைக்கும் அவள் மணப்பருவமடைந்துவிட்ட இளம்பெண்! அவளைத் தகுந்த இடத்தில் கலியாணம் செய்து கொடுக்காமல் அவர் ஏன் வீட்டோடு வைத்திருக்கிறாரென்று எனக்குச் சற்று வியப்பாய் இருந்தது கூடுமானால், அப்பெண்ணை என் மைத்துனன் ராஜநாயகத்துக்கு முடிபோட்டு விடலாமா என்ற உத்தேசமும் என் மனதில் இருந்தது

ஒருநாளிரவு பிள்ளையவர்கள் வீட்டில் பேசிக்கொண்டிருக்கும்போது, எப்படியோ தைரியத்தை வரவழைத்துக்கொண்டு. இது விஷயமாய் அவரைக் கேட்டேவிட்டேன்

'பிள்ளைவாள்! உங்கள் பெண் லக்ஷ்மிக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லைபோலிருக்கிறதே' என்று ஆரம்பித்தேன் நான் எதிர்பார்த்தபடியே முதலில்'வள்'ளென்று விழுந்தார் அவர்.

'ஏன்? நீர் பண்ணிக்கொள்ளலாம் என்று பார்க்கிறீரா? உமக்குத்தான் ஏற்கெனவே ஒரு மனைவி இருக்கிறாளே!'

'சிவசிவ' என்று காதைப் பொத்திக்கொண்டேன். சொல்கிறதையும் சொல்லிவிட்டு பிள்ளை சிரிக்க வேறு தொடங்கிவிட்டார்.

"அந்த ஒரு பெண்டாட்டியை வைத்துக்கொண்டு நான் படும் அவஸ்தை போதாதா? இன்னும் ஒருத்தி வேண்டுமா?...பிள்ளைவாள் அவசரப்படாதேயுங்கள் என் மைத்துனன் ஒருவன் இருக்கிறான். தங்கமான பையன்..."

பிள்ளையவர்கள் குறுக்கிட்டார் ஐயா. உம் தரகு வேலையெல்லாம் சுருட்டி அந்தப் பக்கம் வையும். உம் பேச்சில் நான் மயங்கினாலும் மயங்குவேன் ஆனால் என் பெண்ணை உம்மால் வழிக்குக் கொண்டுவர முடியாது'

'ஏன் அப்படி? அவள் கலியாணமே வேண்டாம் என்கிறாளா என்ன?'

"இல்லையில்லை. தனக்கு ஏற்கெனவே கலியாணமாகிவிட்டதாக அவள் நம்பிக்கை ஒரு வாலிபனிடம் தன் மனதைப் பறிகொடுத்துவிட்டாளாம்.' நல்லகுற்றாலம் பிள்ளை தம் பார்வையை ஒரு முறை வீட்டினுட்புறம் செலுத்தினார் தாம் சொல்வதொன்றும் லக்ஷ்மியின் காதில் விழுந்துவிடாமலிருக்க வேண்டுமேயென்று அவர் கவலைப்படுவது ஸ்பஷ்டமாய்த் தெரிந்தது.

"யாரையா அந்தப் பாக்யசாலி வாலிபன்? அவனையே பிடித்துப் பந்தலில் உட்கார வைத்து ஒரு கலியாணம் செய்து வைக்கப்படாதோ நீங்கள்?' என்றேன். என் மைத்துனன் விஷயமாக நான் போட்டிருந்த திட்டம் குலைந்துவிட்டது பற்றி உள்ளூர எனக்குச் சிறிது ஏமாற்றம் தான்.

"நான் அப்படித்தான் செய்வதற்கு இருந்தேன். ஆனால், அந்த முட்டாள் பயல் தப்பித்துக்கொண்டு போய் விட்டான்.' என்று வருத்தத்துடன் சொன்னார் பிள்ளை எப்போதும் உரத்துப் பேசும் சுபாவமுடைய அவர் குரலும் இன்று சற்றுத் தணிந்திருந்தது அதிலும், முட்டாள் பயல் என்ற வார்த்தையை என் காதோடு காதாய்த்தான் உச்சரித்தார். என் வியப்பையும் ஆவலையும் தூண்டுவதற்கு வேறென்ன வேண்டும்?

'என்ன பிள்ளைவாள்! ஏதோ விட்டுப் பிடிக்கிறீர்களே; விஷயத்தைத்தான் முழுக்கச் சொல்லுங்களேன்?' என்றேன்

"அது பெரிய கதை ஐயா..." என்று அவர் இழுத்தார் தன் குடும்ப ரகசியமொன்றைப் பிறரிடம் வெளியிடலாமா, வேண்டாமா என்று அவர் தத்தளிப்பதாய்த் தோன்றியது. மதில்மேல் பூனையை இந்தப் பக்கமாய் குதிக்க வைப்பதற்காக, "அந்தக் கதையைக் கேட்டுத்தான் ஆகவேண்டும் இப்போது" என்று நான் பிடிவாதம் செய்தேன். 'பூனை

யும் எனக்குச் சாதகமாகவே குதித்து விட்டது!

"சரி, சொல்கிறேன் இங்கே வேண்டாம் முன்பக்கத்து அறைக்குப் போய்விடுவோம் வாரும்" என்று பிள்ளை அழைத்தார்.

"வாசலில் என் டிரைவர் உட்கார்ந்திருக்கிறானே ஐயா, அவன் காதில் விழுந்தால்......" என்று ஆட்சேபித்தேன்

"அதனால் பரவாயில்லை. என் பெண்ணின் காதில் விழாமலிருந்தாலே போதும். அந்தப் பையனை நினைத்தாலேயே அவள் கண்களில் நீர் வந்து நிரம்பி விடுகிறது அந்த விஷயங்களையெல்லாம் அவள் மெதுவாக மறந்துவிடட்டும் என்றுதான் நாங்கள் எங்கள் ஊரை விட்டு மதுரைக்கு வந்தோம் இங்கும் நாம் பேசிக்கொள்வது அவள் காதில் விழுந்தால், அவளது பெண் மனம் கஷ்டப்படத்தானே செய்யும்?" என்றார் நல்லகுற்றாலம் பிள்ளை

கோபிஷ்டராகினும் ஒரு தந்தையின் உள்ளத்தில் ததும்ப வேண்டிய அன்பும் வாஞ்சையும் அங்கு இருக்கத்தான் செய்தன. இருவரும் எழுந்து வீட்டின் முன்பக்கமிருந்த ஆபீஸ் அறைக்கு வந்தோம்

ஓய். கதையை முதலிலிருந்து ஆரம்பிக்கப்போகிறேன்" என்றார்.

"சரி சரி, கடைசியிலிருந்து ஆரம்பிக்கவேண்டாம்" என்றேன் நான்

சில நண்பர்களைப் போலன்றி, கதை சொல்லத் தொடங்குமுன் மோட்டுவளையை முறைத்துப் பார்ப்பதும், தொடையில் விரலால் தாளம் போடுவதும் பிள்ளையவர்கள் வழக்கமல்ல. பூர்வபீடிகையாக என் முதுகில் ஒரு தட்டுத் தட்டிவிட்டுக் கடல் மடை திறந்தாற் போல் பேசினார்.

* * *

"பத்து வருஷங்களாகி விட்டன என்றாலும் நேற்று நடந்தது போலிருக்கிறது. அப்போது நான் எங்கள் கிராமமாகிய நந்தனூரில் வசித்து வந்தேன் இன்னமும் என் நிலபுலன்களெல்லாம் அங்குதானிருக்கின்றன. சற்றுப் பெரிய ஊர் அது அதற்கு நான்தான் பெரிய மனிதன்

ஒருநாள் இரவு. கார்த்திகை மாதமானபடியால், மழை பிசுபிசுவென்று தூறிக் கொண்டிருந்தது வெளியே ஒரே கும்மிருட்டு வேறு. மணி பதினொன்றிருக்கும் என் மனைவியும் பெண்ணும் அயர்ந்து தூங்கிவிட்டனர் கிராமத்துச் சந்தடிகளெல்லாம் எப்போதோ அடங்கியாயிற்று. நான் மட்டும் தூங்கவில்லை ஈஸி சேரில் சாய்ந்தபடி ஏதோ படித்துக்கொண்டிருந்தேன்.

மழை காலத்துத் தவளைகளின் இடைவிடாத கதறல் ஒன்றைத் தவிர, மற்றபடி எங்கும் மௌனம் நிலவியது. நானும் என் புஸ்தகத்திலேயே ஆழ்ந்திருந்தேன் என் காலடியில் சுருண்டு படுத்திருந்த நாய் டாமி சற்று உடலை அசைத்துத் தலையை நிமிர்த்தியதும் என் கவனம் திரும்பியது.

டாமி தன் காதுகளை நெறித்துக் கொண்டு, எதையோ கூர்ந்து கேட்டது. பின் எழுந்து விறைப்பாய் நின்றது! நானும் புஸ்தகத்தைக் கீழே வைத்துவிட்டு அதன் நடவடிக்கைகளை உன்னிப்பாய்க் கவனிக்கலானேன் வீட்டின் வெளி வாசற் கதவண்டை போய் நின்று, நாய் மீண்டும் உற்றுக் கேட்டது. உடனே ஓரேயடியாய்க் குரைக்கத் தொடங்கி விட்டது அதுமட்டுமா? மூடியிருந்த கதவின் தாழ்ப்பாள்மீது பாய்ந்து அதைக் கௌவி இழுக்க முயன்றது அதன் அர்த்தத்தை நான் புரிந்து கொண்டேன் என் மனதைக் கிலி பிடித்துக்கொண்டது.

ஊரின் மேலக் கோடியில் மற்ற வீடுகளினின்றும் சற்று விலகி அமைந்திருந்தது என் வீடு. இந்நள்ளிரவில் திருடன் யாரேனும் வந்திருந்தானாகில், எங்களுக்கு அயலாரின் உதவி கிட்டுவது சற்றுச் சிரமம் நான் கோபிஷ்டனாகிலும் உள்ளூற மகா கோழை மனது படைத்தவன் இந்நிலையில் என்ன செய்வதென்றறியாது விழித்தேன். வேண்டுமென்றே டாமியின் வாலை நன்றாய் அழுத்திக் கிள்ளி விட்டேன் அது போட்ட சப்தம் சுமார் ஒரு டஜன் நாய்கள் ஒருங்கு ஊளையிடுவதுபோலிருந்தது. வெளியே வந்திருப்பது உண்மையில் திருடனானால், அவன் இந்தச் சத்தத்தைக் கேட்டாகிலும் பயந்து ஓடிவிடட்டும் என்பது என் எண்ணம்

கதவைத் திறந்து பார்க்கலாமா வேண்டாமா என்ற என் தடுமாற்றம் தீருவதற்குள், நாய் குரைப்பதைக் கேட்டு விழித்துக்கொண்ட என் மனைவியும் எழுந்து வந்துவிட்டாள் என் பயங்கொள்ளித்தனத்தை அவள் அறிந்துகொள்ள விடக்கூடாது என்ற தீர்மானத்துடன், மண்ணெண்ணெய்லாந்தரையும் கைத்தடியையும் எடுத்துக்கொண்டு கதவை நோக்கிப் புறப்பட்டேன். அவளும் வெகு அச்சத்துடன் ஊரிலிருக்கும் தேவதைகளையெல்லாம் வேண்டிக் கொண்டபடியே, என்னைப் பின் தொடர்ந்து வந்தாள் எப்படியோ மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு தாழ்ப்பாளை விலக்கினேன். கதவு உட்புறமாகத் திறந்தது அதன்மேல் சாய்ந்திருந்த ஓர் மனித உடலும் கூடவே தரையில் சாய்ந்தது!

என் கையிலிருந்த லாந்தரும் தடியும் கிட்டத்தட்ட நழுவிவிட்டன. பயத்தினாலல்ல; வியப்பினால். பால் வடியும் முகமுடைய பாலகனொருவன் எங்கள் முன் மூர்ச்சித்துக் கிடந்தான்! அவனுக்கு வயதுபன்னிரண்டிருக்கும் மழையில் நனைந்து ஈரம் சொட்டும் ஆடைகள். பல தினங்களாய் உணவு காணாமல் கருத்து இளைத்து விட்ட உடல் அலங்கோலமாய்ப் பரந்து கிடந்த என்னெய் பசையறியாச் சிகை அவன் கிடந்த காட்சி எங்கள் மனதை அறுத்தது பையன் எங்கிருந்து வருகிறானோ என்னென்ன கஷ்டங்களை அனுபவித்தானோ என்றெல்லாம் எண்ணிக் கலங்கும் உள்ளத்தோடு நானும் என் மனைவியும் அவனைத் தூக்கிக்கொண்டு போய் உள்ளே சேர்த்தோம். பின் அந்த அமானுஷ்யமான வேளையில் அவனருகில் அமர்ந்து. நாங்கள் செய்த சிசுருஷைகள் அவன் பிரக்ஞை திரும்பச் செய்தன. போதிய உணவும் ஓய்வும் அவனுக்களித்தோம் அச்சிறுவன் தன் வரலாற்றைசொன்னான்.

பழையகதைதான் அவன் குழந்தையாயிருக்கும்போதே தாயார் இறந்துவிட்டாளாம். அவன் தகப்பன் மறு விவாகம் செய்துகொண்டானாம். சிற்றன்னையும் அவள் தம்பியும் சேர்ந்து தனக்கிழைத்தகொடுமைகளையெல்லாம் பல வருஷங்களாகப் பொறுத்துப் பார்த்தானாம் பையன். இறுதியில் அது பொறுமையையும் மிஞ்சிவிடவே, ஒரு மாதத்திற்கு முன்னால் சொல்லாமல் கொள்ளாமல் வீட்டைவிட்டுக் கிளம்பி ஓடி வந்து விட்டானாம் எழுபது எண்பது மைல்கள் நடந்து, யாராவது சோறு போட்டால் சாப்பிட்டுக் கொண்டு இப்படியே வருகிறானாம். ஆனால் கடந்த மூன்று நாட்களாக ஒரு வாய்ச்சோறுகூடக் கிடைக்கவில்லையாம். பட்டினியோடு எங்கள் ஊருக்குள் நுழைந்தவன், அதற்கு மேல் நடக்கமுடியாமல் எங்கள் வீட்டு வாசற்படியை அடைந்ததும் தலை சுற்றி விழுந்துவிட்டானாம். பாவம்! அவனுக்கு அதுவரைதான் தெரியும் அவன் வரவினால் எங்கள் உள்ளத்தில் எழ நேர்ந்த பலவிதமான உணர்ச்சிகளையும் அனாவசியமான கலவரத்தையும் அவன் எப்படி அறிவான்?

இரண்டு, மூன்று தினங்களுக்கு அவன் பூரண ஓய்வெடுத்துக்கொள்ளச் செய்தோம். சிறுவனின் உடல் நிலை சற்றுத் தேறியது இனி இவனை என்ன செய்வதென்ற பிரச்னை என் மனத்திலெழுந்தது ஏதோ ஈச்வரன் கிருபையால், இந்தப் பையனைப் போல் பத்து அனாதைகளை ஆயுள் பூராவும் வைத்து ஆதரிக்கக்கூடியபடி எனக்கு ஆஸ்திகள் இருந்த போதிலும், இவன் அயலார் வீட்டுப் பிள்ளையாயிற்றே என்ற ஒரு யோசனைமட்டும் என்னைப் பின்னுக்கிழுத்தது ராமுவை. அதுதான் அவன் பெயர். என்னருகிலழைத்தேன்.

[அடுத்த இதழில் முடியும்]

சுதேசமித்திரன் வாரப்பதிப்பு

பொருளடக்கம்

		பக்கம்
பாம்பாட்டி	நில்லவாசி	5
தேர்த்தட்டு வார்த்தை	வாரன்	9
கலாமண்டபம்		11
தேவியின் கிருபை	ப. ரா.	15
இந்தியக் குடியரசு விளக்கம்	எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி	21
ஹிந்தி பாடங்கள்	பண்டித்ஜீ	28
வாழ்க்கைச் சுழல் (தொடர்கதை)	இந்து	25
ஸங்கீத பாரிஜாதம்	பண்டித கிருஷ்ணமாசார்யா	31
இந்தியாவில் கால் நடைச்செல்வம்		33
சிறுவர் கதை	எஸ் ரங்கராஜன்	35
காட்டில் செய்யுள் பாடம்	மணி	39
அவன் கொலையாளியா?	ஸ்ரீமதி கலோசனு பட்டாபிராமன்	42
குடும்ப வைத்தியம்	குச்சாமாமா	46

"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் முற்றிலும் கற்பனையே, அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.